ஸ்ரீ காமகோடி க்ரந்தாவளி — 15

வேதாந்தம் - வழி நூல்கள்

# ஸ்ரீ ஆக்யா ஷஷ்டி:

140

தேவனகரி மூலமும் தமிழ் ஆங்கில அனுவாதமும்



PALLATHUR,
RAMNAD DT.

6212
R65(வஷ)

ஸ்ரீ அய்யாவாள்

630

श्रीकामकोटिग्रन्थावलिः १९

20-3

श्रीः
श्रीचन्द्रमौलीश्वराय नमः

श्री अय्यावाल् इति प्रसिद्धैः श्री श्रीधरवेङ्कटेशाभिधैः विरचिता

# श्री आख्याषष्टिः

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यकामकोटिपीठाधीश्वर
श्रीजगद्गुरु श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादानां
श्रीमुखेन समुद्भासिता



श्रीकामकोटिर्विजयते

M. R. R. Annamalai
PALLATHUR,
RAMNAD DT.

श्रीकामकोटिकोशस्थानेन प्रकाशिता
५७, मेल डबीर वीथी, कुम्भघोणम्

स्वाम्यं कोशस्थानस्यैव] 1944 [मूल्यम् दशाणकाः

ஸ்ரீ:

ஸ்ரீ சந்த்ரமௌளீஸ்வராய நம:

ஸ்ரீ ஸ்ரீதர வேங்கடேசர் என்ற ஸ்ரீ அய்யாவாள்

இயற்றிய

# ஸ்ரீ ஆக்யா ஷஷ்டி

தமிழ் ஆங்கில அநுவாதங்களுடனும், குறிப்புக்களுடனும்,

Dr. வே. ராகவன், M.A., Ph.D.,

எழுதிய முன்னுரைகளுடனும்,

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான

**ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்**

அருளிய திவ்ய ஸ்ரீமுகத்துடனும்

கூடியது

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

57, மேல டபீர் வீதி :: கும்பகோணம்

பதிப்புரிமை] செப்டம்பர் 1944 [விலை அணா 10

20-3



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

2196
KOVILOOR MADALAYAM
KOVILUR 630 307
MANAGIRI VIA
KOVILOOR MADALAYAM KOVILUR 630 307 (NEAR) KARAIKUDI (PHONE: 21-486846)

॥ श्रीः ॥


मुद्रा

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्यश्रीमच्छङ्करभगवत्पाद-प्रतिष्ठितश्रीकाञ्चीकामकोटिपीठाधीश्वरश्रीमच्चन्द्र-शेखरेन्द्रसरस्वतीश्रीपादैः क्रियते नारायणस्मृतिः ॥

नैरन्तर्येण भगवत्स्वरूपानुसन्धानं भक्तियोगः । स च भगवति चित्तस्थैर्याय मनसो विषयेभ्यः प्रत्यावर्तनमपेक्षते । तच्चाविच्छेदेन सर्वेश्वरनामसंकीर्तने सुलभतया सम्पद्यते । तत्र गुणिनिष्ठगुणाभिधानं स्तवः । विस्तरशो भगवद्गुणवर्णनं कश्चन तत्प्रकारः । भगवत्स्वरूपगुणप्रकाशकनामावर्तनमपरोऽति - सुलभः प्रकारविशेषः । उभयमपि "श्रवणं कीर्तनं विष्णोः" इति परिगणितनामकीर्तनभक्तिरूपतां भजते ।

ईश्वरनामकीर्तनम् 'आस्य जानन्तो नामचिद्विवक्तन महस्ते विष्णो सुमतिं भजामहे' 'बृहत्ते विष्णो सुमतिं भजामहे' इति ऋग्वेदयजुर्वेदमन्त्राभ्यां पुरुषार्थसाधनतया प्रतिपाद्यते । 'अस्य महानुभावस्य विष्णोर्नामचित् सर्वैर्नमनीयमभिधानं सार्वात्म्य-प्रतिपादकं विष्णुरित्येतन्नाम जानन्तः पुरुषार्थप्रदमित्यधि-गच्छन्तः हे स्तोतारः! आ समन्तात् विवक्तन वदत सङ्कीर्त-यत" इति भाष्यमप्युक्तमाशयं स्पष्टयति । 'कलौ संकीर्त्य केशवम्' इति विष्णुपुराणवचनमपि दर्शितार्थोपबृंहणं भवति ।

तैत्तिरीयरुद्राध्यायप्रश्नेऽनन्तानामीश्वरसार्वात्म्यप्रतिपा-दकानां नाम्नां मध्ये तारकमन्त्रपञ्चाक्षर्यां मध्यमणिन्यायेन विराजमानायां सर्वमङ्गलाजानेः स्वयं मङ्गलरूपस्य परशिवस्य



கங்கை பொங்கிய கிணறு - திருவிசநல்லூர்

Dr. வே. ராகவன், எம் எ., பிஎச். டி., எழுதிய

# முன்னுரை

## ஸ்ரீதர வேங்கடேச 'அய்யாவாள்'

"ईशे तस्य च नामनि प्रविमलं ज्ञानं तयोरूर्जितं
प्रेम प्रेम च तत्परेषु विरतिश्चान्यत्र सर्वत्र च ।
ईशेक्षा करुणा च यस्य नियता वृत्तिः श्रितस्यापि यं
तं वन्दे नररूपमन्तकरिपुं श्रीवेङ्कटेशं गुरुम् ॥"

"ஈச்வரனிடமும் அவருடைய நாமாவிலும் எவருக்குப் பரிசுத்தமான ஞானமும் அவ்விரண்டிலும் த்ருடமான அன்புமுண்டோ ஈச்வரனிடமும் அவர் நாமாவிலும் ஈடுபட்ட பக்தரிடமும் எவருக்கு அன்புண்டோ, வேறு எல்லாவற்றிலும் எவருக்கு விரக்தி உண்டோ, எவருக்கும் எவரை அண்டினவருக்கும் பகவந் நோக்கமும் கருணையும் மாருத் தொழிலாகுமோ, மானிட வடிவங்கொண்ட பரமேச்வரரான அந்த ஸ்ரீதர வேங்கடேசர் என்ற குருவை வணங்குகிறேன்"

என்று வணங்காமல் நம் பஜன மடங்களொன்றிலும் பஜனே ஆரம்பிக்காது. இவ்வணக்கத்துக்கு விஷயமான புண்ய மூர்த்தி ஸ்ரீதர வேங்கடேசர். அவருடைய பெயரை நேரே சொல்லாமல், அவரை எல்லோரும் 'அய்யாவாள்' என்றே அழைத்தனர் என்ருல் அம்மஹானைப் பண்டித பாமரர்கள் எல்லோரும் எவ்வளவு கௌரவத்துடன் போற்றிவந்தனர் என்று ஊகித்துக் கொள்ளலாம். பகவத்பஜன பத்ததிக்கும் நாமானுஸந்தானத்திற்கும் புத்துயிரளித்துச் சோள தேசம் முழுதும் நாம ஸங்கீர்த்தனத்தை ஸ்தாபித்தவருள் முக்கியமானவர்கள் ஸ்ரீதர வேங்கடேசரும் ஸ்ரீமத் போதேந்த்ர ஸ்வாமிகளும்.

தஞ்சையை ஆண்டுவந்த மஹாராஷ்டிர ராஜவம்சத்தினர் கலைகளையும் கல்வியையும் மிகவும் ஆதரவுடன் வளர்த்து வந்தனர். இந்த மஹாராஷ்டிர வம்சஸ்தாபகரான ஏகோஜி

630



20-3

श्रीः

श्रीचन्द्रमौलीश्वराय नमः

श्री अय्यावाल् इति प्रसिद्धैः श्री श्रीधरवेङ्कटेशाभिधैः विरचिता

# श्री आख्याषष्टिः

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यकामकोटिपीठाधीश्वर
श्रीजगद्गुरु श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादानां
श्रीमुखेन समुद्भासिता



श्रीकामकोटिर्विजयते

M. A. Annamalai, PALLATHUR, RAMNAD DT.

श्रीकामकोटिकोशस्थानेन प्रकाशिता
५७, मेल डबीर वीथी, कुम्भघोणम्

1944

स्वाम्यं कोशस्थानस्यैव] [मूल्यम् दशाणकाः

ஸ்ரீ:

ஸ்ரீ சந்த்ரமௌளீஶ்வராய நம:

ஸ்ரீ ஸ்ரீதர வேங்கடேசர் என்ற ஸ்ரீ அய்யாவாள்

இயற்றிய

# ஸ்ரீ ஆக்யா ஷஷ்டி

தமிழ் ஆங்கில அநுவாதங்களுடனும், குறிப்புக்களுடனும்,

Dr. வே. ராகவன், M.A., Ph.D.,

எழுதிய முன்னுரைகளுடனும்,

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான

ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

அருளிய திவ்ய ஸ்ரீமுகத்துடனும்

கூடியது

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

57, மேல டபீர் வீதி :: கும்பகோணம்

பதிப்புரிமை] செப்டம்பர் 1944 [விலை அணா 10

20-3



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

2196
KOVILOOR MADALAYAM
KOVILUR 630 307
MANAGIRI VIA
PHONE

॥ श्रीः ॥

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्यश्रीमच्छङ्करभगवत्पाद-
प्रतिष्ठितश्रीकाञ्चीकामकोटिपीठाधीश्वरश्रीमच्चन्द्र-
शेखरेन्द्रसरस्वतीश्रीपादैः क्रियते नारायणस्मृतिः ॥

नैरन्तर्येण भगवत्स्वरूपानुसन्धानं भक्तियोगः । स च भगवति चित्तस्थैर्याय मनसो विषयेभ्यः प्रत्यावर्तनमपेक्षते । तच्चाविच्छेदेन सर्वेश्वरनामसंकीर्तने सुलभतया सम्पद्यते । तत्र गुणिनिष्ठगुणाभिधानं स्तवः । विस्तरशो भगवद्गुणवर्णनं कश्चन तत्प्रकारः । भगवत्स्वरूपगुणप्रकाशकनामावर्तनमपरोऽति - सुलभः प्रकारविशेषः । उभयमपि "श्रवणं कीर्तनं विष्णोः" इति परिगणितनामकीर्तनभक्तिरूपतां भजते ।

ईश्वरनामकीर्तनम् 'आस्य जानन्तो नामचिद्विवक्तन महस्ते विष्णो सुमतिं भजामहे' 'बृहत्ते विष्णो सुमतिं भजामहे' इति ऋग्वेदयजुर्वेदमन्त्राभ्यां पुरुषार्थसाधनतया प्रतिपाद्यते । 'अस्य महानुभावस्य विष्णोर्नामचित् सर्वैर्नमनीयमभिधानं सार्वात्म्य-प्रतिपादकं विष्णुरित्येतन्नाम जानन्तः पुरुषार्थप्रदमित्यधि-गच्छन्तः हे स्तोतारः! आ समन्तात् विवक्तन वदत सङ्कीर्त-यत" इति भाष्यमप्युक्तमाशयं स्पष्टयति । 'कलौ संकीर्त्य केशवम्' इति विष्णुपुराणवचनमपि दर्शितार्थोपबृंहणं भवति ।

तैत्तिरीयरुद्राध्यायप्रश्नेऽनन्तानामीश्वरसार्वात्म्यप्रतिपा-दकानां नाम्नां मध्ये तारकमन्त्रपञ्चाक्षर्या मध्यमणिन्यायेन विराजमानायां सर्वमङ्गलाजानेः स्वयं मङ्गलरूपस्य परशिवस्य

वाचकः शिवशब्दो विद्योतते सर्वावभासकतया । तस्य पुरुषार्थप्रदत्वे किमु वक्तव्यम् । अतस्तारकपञ्चाक्षरमन्त्रगतपरममङ्गलपरशिववाचकशिवनामकीर्तनस्य विष्णुसहस्रनामतद्भाष्योक्तरीत्या परमधर्मरूपतया सकलश्रेयस्साधनत्वं, धर्मादाविव तावत्सामर्थ्यपुराणादिप्रसिद्धदेशकालनियमाद्यनपेक्षतया सुलभसाध्यत्वं, धर्मादिष्वशक्तानामन्येषामप्यत्राधिकारं च प्रदर्शयन्तो नामसिद्धान्तव्यवस्थापका अय्यावाल् इति प्रख्याताः श्रीधरवेङ्कटेशमहानुभावाः भक्तलोकोपकाराय व्यरचयन् आख्याषष्टि नामधेयं स्तोत्ररत्नम् ॥

श्रुतिस्मृतीतिहासपुराणादीनामितरसापेक्षाणां जीवातुभूतशिवनामसहायं विना पुरुषार्थसाधनबुद्धिप्रदानासामर्थ्यं, शिवनामकीर्तनस्य स्वत एव सुलभसाध्यस्य तत्तदन्तरायनिवर्तकत्वं, क्रमशः परममङ्गलसुखात्मकपरशिवसाक्षात्कारजननसामर्थ्यं, शिवसारूप्यादिपर्यन्तफलसम्पादकत्वं चाविष्कुर्वन्तो भक्तकुलावतंसा ग्रन्थकारास्सर्वेषामप्यधिकारिणामाभिमुख्येनात्र प्रवृत्तिं सम्पादयन्ति ॥

श्रीकामकोटिकोशस्थाने भक्तिमार्गोपयोगिबहुस्तोत्रमुद्रापणप्रकाशनानन्तरं श्रीशिवनामसंकीर्तनरूपभक्तिमार्गमवलम्ब्यात्मानं कृतार्थयितुकामस्य भक्तलोकस्याप्युपकाराय सहृदयहृदयङ्गमपदवाक्यार्थं देशभाषाङ्गलभाषानुवादसनाथं मुद्राप्य प्रकाशितम् आख्याषष्टिः इति नाम्ना प्रसिद्धं स्तोत्ररत्नं पठन्तः शृण्वन्तश्च भक्ताग्रेसराः श्रीचन्द्रमौलीशकृपया कृतार्था भवन्त्वित्याशास्महे ॥

विजययात्रास्थानम्
सत्यविजयनगरम्
तारणनाम सं० भाद्रपदमासि
कृ० नवमी ता० 10-9-44.

नारायणस्मृतिः

ஸ்ரீ:

|| ஸ்ரீகுருப்யோ நம: ||

KOVILO… ALAYAM … 630 307 MANA… VIA

முத்ரை

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யவர்யர்களான ஸ்ரீமச் சங்கர பகவத் பாதர்களால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் அதிபதிகளான ஸ்ரீமச் சந்திரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீபாதர்களால் நாராயணஸ்மரணம் செய்யப்படுகிறது.

இடைவிடாது பகவானுடைய ஸ்வரூபத்தை நினைத்துக்கொண்டே இருப்பது பக்தி யோகம். அது பகவானிடத்திலேயே நம் மனது நிலைப் பதற்காக, சிற்றின்பங்களிலிருந்து நம்மனத்தின் திரும்புதலை எதிர் பார்க்கிறது. அப்படிச் சிற்றின்பங்களிலிருந்து மனது திரும்புவதென் பது ஸர்வேச்வரனின் நாம ஸங்கீர்த்தனத்தால் எளிதில் கைகூடுகிறது. குணசாலியினிடமுள்ள குணத்தை உரைத்தலுக்கு ஸ்தோத்ரம் என்று பெயர். விரிவாய்ப் பகவத் குணத்தை வர்ணிப்பதென்பது அந்த ஸ்தோத்ரத்தின் ஒரு முறை; பகவத் குணத்தை வெளிப்படுத்துவ தான பகவந் நாமாக்களைச் சொல்லிக்கொண்டிருப்பது (மேலே சொன்னதைவிட) மிகவும் எளிதான மற்றொரு முறை. இரண்டுமே "ஶ்ரவணம் கீர்த்தனம் விஷ்ணோ:" என்று எண்ணப்பட்ட நாம ஸங்கீர்த்தனமென்ற பக்தி ரூபமாய்த்தானிருக்கின்றன.

"ஆஸ்ய ஜாநந்தோ நாமசித் விவக்தன மஹஸ்தே விஷ்ணோ ஸுமதிம் பஜாமஹே", "ப்ரஹ்மத்தே விஷ்ணோ ஸுமதிம் பஜாமஹே" என்ற ரிக்வேத யஜுர்வேத மந்த்ரங்களால் இந்த நாம ஸங்கீர்த்த னம் புருஷார்த்த ஸாதனமென்று தெரிவிக்கப்படுகின்றது. "இந்தப் பெருந்தகையாளரான விஷ்ணுவின் நாமா, எல்லோராலும் வணங்கப் படும் பெயர், எல்லோருக்கும் எல்லாவற்றிற்கும் வியாபகமாயிருக்கும் தன்மையை விளக்கும் விஷ்ணு என்ற நாமா, அதைப் புருஷார்த்த வள்ளலாய் உணர்ந்து, ஏ துதி செய்யும் ஆத்மாக்களே! நாலா பக்கங்களிலும் பேசுங்கள்" என்றுள்ள இம் மந்த்ரத்தின் பாஷ்யமும் மேலே சொன்ன கருத்தைத் தெளிவாக்குகிறது. "கலியில் விஷ்ணு வைப் பாடி" (கடைத்தேறவேண்டும்) என்ற விஷ்ணு புராணவசனமும் மேலே காட்டிய பொருளையே கூட்டிச் சொல்வதாய் காணப்படுகிறது.

தைத்திரீய ருத்ராத்யாய ப்ரச்னத்தில் அநந்தமாயும் ஈச்வரன் ஸர்வ ஆத்மாக்களின் ரூபமாயுமிருக்கும் தத்வத்தை வெளிப்படுத்தும் நாமாக்களுக்கு நடுவே நடுநாயக மணிபோல் விளங்கும் தாரக மந்த்ர மான (நம: சிவாய) என்ற பஞ்சாக்ஷரியில் ஸர்வமங்களை என்ற பார்வதியைப் பத்னியாகக்கொண்டவரும் ஸ்வயம் மங்களரூபியுமான ஸர்வோத்க்ருஷ்டனை சிவனைக் குறிக்கும் சிவ சப்தம் எல்லாவற்றை

யும் ஒளிபெறச் செய்து கொண்டு ப்ரகாசிக்கிறது. அந்தச் சிவ சப்தம் புருஷார்த்தங்களை வழங்குகிறது என்பதைப்பற்றி சொல்லவும் வேண்டுமோ? ஆகையால் தாரகமான பஞ்சாக்ஷர மந்த்ரத்திலுள்ள தும், பரம மங்களமுமான பரமசிவனைக் குறிப்பதுமான சிவ என்ற நாமாவின் ஸங்கீர்த்தனம், விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரத்திலும் அதன் பாஷ்யத்தில் ஸ்ரீ ஆசார்யர்களும் சொன்னபடி எல்லாவற்றை யும்விட உயர்ந்த தர்மமானதால், அது எல்லா நன்மைகளை அடைவ தற்கும் ஸாதனமாகும் என்றும், (மற்ற) தர்மம் முதலியவற்றின் அநுஷ்டானத்திற்கு வேண்டிய திறமையும், புராணம் முதலியவற்றில் காணப்படும் இடம், வேளை முதலிய கட்டுப்பாடுகளுமில்லாததால் எளிதில் அடையக்கூடும் என்றும், இதர தர்மம் முதலியவைகளைச் செய்யச் செயலற்ற மற்றவருக்கும் இதைச் செய்ய உரிமை உண்டு என்றும் காண்பித்து, நாமஸித்தாந்தத்தை நிலைநாட்டிய ஸ்ரீ அய்யாவாள் என்று புகழ்பெற்ற ஸ்ரீ ஸ்ரீதர வெங்கடேசரென்ற மஹான்கள் பக்த வுலகிற்கு உதவும் பொருட்டு ஆக்யாஷஷ்டி என்ற சிறந்த ஸ்தோத் ரத்தை இயற்றினார்கள்.

வேதம், ஸ்ம்ருதி, இதிஹாஸ புராணங்கள் இவைகள் கையாளு வதற்கு வேறு பலவற்றின் உதவியை எதிர்பார்ப்பவைகளாய், உயிரான சிவநாமாவின் உதவியின்றிப் புருஷார்த்தங்களை ஸாதித்துக் கொள்ளும் அறிவைக் கொடுப்பதில் சக்தியற்றவைகள் என்றும், சிவநாம கீர்த்தனமோவெனில் தானே எளிதாய்க் கையாளக் கூடி யது, அந்தந்த இடையூறுகளை விலக்கும் தன்மையுடையது, முறையே பரம மங்களமான ஸுகஸ்வரூபமான பரமசிவ ஸாக்ஷாத்காரத்தை உண்டுபண்ணும் சக்தியுடையது என்றும், சிவஸாரூப்யம் முடியப் பலனைக் கொடுக்கும் என்றும் தெரிவிக்கும் பக்த ச்ரேஷ்டர்களான இந்நூலாசிரியர்கள் எல்லா அதிகாரிகளையும் இதை ஆவலுடன் பின் பற்றும்படி செய்கிறார்கள்.

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்தில் பக்தி மார்க்கத்திற்கு உதவி யாயிருக்கும் பல ஸ்தோத்ரங்களை அச்சடித்து வெளியிட்ட பிறகு ஸ்ரீ சிவநாமாவை ஸங்கீர்த்தநம் செய்வதென்ற பக்திமார்க்கத்தைப் பின்பற்றித் தம்மை க்ருதார்த்தர்களாக்கிக்கொள்ள விரும்பும் பக்தர் களின் உதவிக்காக ஸஹ்ருதய ஹ்ருதயத்தில் புகக்கூடிய பதவுரை, பொழிப்புரை, தமிழ், ஆங்கில அநுவாதங்கள், இவைகளோடு அச்சிட்டு வெளியிடப்பட்ட ஆக்யாஷஷ்டி என்ற ஸ்தோத்ரத்தைப் படித்தும் கேட்டும் பக்த சிரோமணிகள் ஸ்ரீ சந்த்ர மௌளீச்வரருடைய அருளால் க்ருதார்த்தர்களாகட்டும் என்று அனுக்ரஹம் செய்கிறோம்.

விஜயயாத்ராஸ்த்தாநம்
ஸத்ய விஜய நகரம்
தாரண, பாத்ரபத,
க்ருஷ்ண நவமி. 10-9-44


நாராயண ஸ்ம்ருதிः

20-3

ஸ்ரீ குருப்யோ நம:

இப்புத்தகத்தில் அச்சாயிருக்கும் (1) ஸ்ரீ அய்யாவாள் மூவர்ணப் படம் (2) அக்கிரஹாரத்தில் ஸ்ரீ மடம் (3) ஸ்ரீ அய்யாவாள் ஸந்நிதி (4) கங்கை பொங்கிய கிணறு இந்த நான்கு படங்களையும் கொடுத்து உதவியதற்கு ஸ்ரீகோசஸ்தானத்தின் நன்றி ஸ்ரீ S. S. வாஸன் அவர்களுக்கு உரியதாகும். டாக்டர் வே. ராகவன் அவர்கள் இந்த நூலின் வெளியீட்டில் விசேஷமான ச்ரத்தையை எடுத்துக் கொண்டது போற்றத்தக்கது.

14—9—44. ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்



கங்கை பொங்கிய கிணறு - திருவிசநல்லூர்

Dr. வே. ராகவன், எம். ஏ., பிஎச். டி., எழுதிய

# முன்னுரை

## ஸ்ரீதர வேங்கடேச 'அய்யாவாள்'

"ईशे तस्य च नामनि प्रविमलं ज्ञानं तयोरूर्जितं
प्रेम प्रेम च तत्परेषु विरतिश्चान्यत्र सर्वत्र च ।
ईशेक्षा करुणा च यस्य नियता वृत्तिः श्रितस्यापि यं
तं वन्दे नररूपमन्तकरिपुं श्रीवेङ्कटेशं गुरुम् ॥"

"ஈச்வரனிடமும் அவருடைய நாமாவிலும் எவருக்குப் பரிசுத்தமான ஞானமும் அவ்விரண்டிலும் த்ருடமான அன்பு-முண்டோ ஈச்வரனிடமும் அவர் நாமாவிலும் ஈடுபட்ட பக்தரிடமும் எவருக்கு அன்புண்டோ, வேறு எல்லாவற்றிலும் எவருக்கு விரக்தி உண்டோ, எவருக்கும் எவரை அண்டினவருக்கும் பகவந் நோக்கமும் கருணையும் மாறாத் தொழிலாகுமோ, மானிட வடிவங்கொண்ட பரமேச்வரரான அந்த ஸ்ரீதர வேங்கடேசர் என்ற குருவை வணங்குகிறேன்"

என்று வணங்காமல் நம் பஜன மடங்களொன்றிலும் பஜனை ஆரம்பிக்காது. இவ்வணக்கத்துக்கு விஷயமான புண்ய மூர்த்தி ஸ்ரீதர வேங்கடேசர். அவருடைய பெயரை நேரே சொல்லாமல், அவரை எல்லோரும் 'அய்யாவாள்' என்றே அழைத்தனர் என்றால் அம்மஹானைப் பண்டித பாமரர்கள் எல்லோரும் எவ்வளவு கௌரவத்துடன் போற்றிவந்தனர் என்று ஊகித்துக் கொள்ளலாம். பகவத்பஜன பத்ததிக்கும் நாமானுஸந்தானத்திற்கும் புத்துயிரளித்துச் சோள தேசம் முழுதும் நாம ஸங்கீர்த்தனத்தை ஸ்தாபித்தவருள் முக்கியமானவர்கள் ஸ்ரீதர வேங்கடேசரும் ஸ்ரீமத் போதேந்த்ர ஸ்வாமிகளும்.

தஞ்சையை ஆண்டுவந்த மஹாராஷ்டிர ராஜவம்சத்தினர் கலைகளையும் கல்வியையும் மிகவும் ஆதரவுடன் வளர்த்து வந்தனர். இந்த மஹாராஷ்டிர வம்சஸ்தாபகரான ஏகோஜி

யின் புதல்வரான சாஹஜி, சரபஜி, துக்கோஜி என்ற மூவரின் காலத்தில் இம் மஹாராஷ்ட்ர அரசாட்சி மிகவும் சிறந்து விளங்கிற்று; கலைகளும் இம்மூவரின் ஆதரவில் ஓங்கியது போல் வேறொரு போதும் அவ்வளவு ஓங்கவில்லை. இம்மூவரில் எவ்வகையிலும் முதல்வராயிருந்தவர் தஞ்சை போஜனான சாஹஜி (கி. பி. 1684—1710); பல துறைகளில் தேர்ச்சிபெற்ற புலவரை ஆதரித்ததுடன், சாஹஜி ஸ்வயம் கல்வியிலும், கலைகளிலும் தேர்ந்தவர்; தெலுங்கு, மராடி, ஸம்ஸ்க்ருதம் இம்மூன்று மொழிகளிலும் காவ்யங்களும் இசை நாடகங்களும் எழுதினதோடு, சுஷ்க பண்டிதரா யில்லாமல், உத்தம ஞானிகளை யாச்ரயித்துப் பக்தி, ஞான, வைராக்யங்கள் நிரம்பினவராயு மிருந்தார்.

கி. பி. 1693-ல் இந்த சாஹஜி மஹாராஜர் காவேரிக் கரையிலுள்ள பாடல் பெற்ற ஸ்தலமான திருவிசநல்லூரைத் தன்பெயரால் 'சாஹஜி ராஜபுரம்' என்ற அக்ரஹாரமாக்கி, பற்பல படிப்புகளில் புகழ்பெற்ற 46 பண்டித குடும்பங் களுக்கு அந்த அக்ரஹாரத்தைத் தானம் செய்தார். ஸ்ரீராம பத்ர தீக்ஷிதர், பாஸ்கர தீக்ஷிதர், வேதகவி, மஹாதேவகவி, பெரியப்பகவி, நல்லாகவி, சிவராமக்ருஷ்ணர் என்ற ஸதாசிவ ப்ரம்மேந்திரர் முதலியவர்கள் இக் குடும்பங்களைச் சேர்ந்த பெரியார்கள். இவர்களுக்குள் சில ஆந்த்ர குடும்பங்களும் உண்டு; இத் தெலுங்குக் குடும்பங்களில் மோக்ஷம் ஸோம ஸுந்தரர் என்பவரின் குடும்பம் ஒன்று, (ஸ்ரீதர) லிங்கயார்-யர் என்பவரின் குடும்பம் மற்றொன்று; முதலில் சொன்ன ஸோமஸுந்தரருக்குத் தோன்றியவரே ஸ்ரீ ஸதாசிவ ப்ரம் மேந்திரர்கள்; பின் சொன்ன லிங்கயார்யருக்குத் தோன் றியவரே ஸ்ரீதர வேங்கடேசர் என்ற அய்யாவாள்.

'அய்யாவாள் உத்ஸவம்' என்று கேள்விப்படாதவர் நமக்குள் சிலரே. இன்னும் கார்த்திகை அமாவாஸ்யையில் திருவிசநல்லூரில் கொண்டாடப்படும் இவ்வுத்ஸவத்தின் வரலாறு அய்யாவாளின் ஞான பரிபாகத்தையும், அவர் அதை அனுபவத்திற்குக் கொண்டுவந்திருந்த அற்புதத்தை

யும் விளக்குகிறது: அய்யாவாள் செய்ய வேண்டிய ச்ராத்த மொன்று வந்தது; அகத்தில் பாகங்கள் ஸித்தமானதும் காவேரிக்கு அவர் ஸ்னானத்திற்குப் போகும் போது பசியால் துடித்து மரண வேதனையில் கிடக்கும் சண்டாளன் ஒருவனை வழியில் கண்டார்; மஹானின் மனம் உருகிற்று; கொஞ்சம் கூடத் தயங்காமல் நிமந்த்ரணம் செய்த ப்ராம்மணர்களுக்காகப் பாகமாயிருந்த ச்ராத்தச் சமையலை அச்சண்டாளனுக்கு அர்ப்பணம் செய்து விட்டார்; தான் குடிப்பதற்கு மாத்திரம் போதுமான ஜலம் மட்டுமே கையிலிருந்தபோது தாகத்தால் வருந்தி யாசித்த சண்டாளனுக்கு அந்த நீரைக் கொடுத்த ரந்திதேவனின் மனவெழுச்சி அய்யாவாளுக்கும் அப்போது ஏற்பட்டது.

न कामयेऽहं गतिमीश्वरात्पराम् अष्टर्द्धियुक्तामपुनर्भवं वा।
आर्तिं प्रपद्येऽखिलदेहभाजाम् अन्तस्स्थितो येन भवन्त्यदुःखाः॥
क्षुत्तृट्श्रमो गात्रपरिश्रमश्च दैन्यं क्लमः शोकविषादमोहाः।
सर्वे निवृत्ताः कृपणस्य जन्तोः जिजीविषोर्जीवजलार्पणान्मे॥

ஸ்ரீமத் பாகவதம் 9, 21, 12-13.

சண்டாளனுக்கு அன்னமிட்டதால் ஏற்பட்ட தீண்டலுக்குக் கங்கா ஸ்நானத்தை ப்ராயச்சித்தமாக அய்யாவாளுக்கு அந்தணர் விதித்தனர்; அய்யாவாளுக்கு அனுக்ரஹஞ் செய்யக் கங்கை அவருடைய வீட்டுக் கிணற்றிலியே கொந்தளித்துக் கொண்டு எழுந்தாள்; இவ்வதிசயத்தைக் கொண்டாடித்தான் அக்கிணற்றில் பக்தர்கள் இன்றும் நீராடி, அய்யாவாள் உத்ஸவத்தையும் நடத்துகிறார்கள்.

பக்தியில் ஸித்திபெற்ற அய்யாவாளைப்பற்றி இன்னும் பல அதிசய நிகழ்ச்சிகள் சொல்லப்படுகின்றன. பக்கத்திலுள்ள திருவிடைமருதூரிலுள்ள மஹாலிங்கஸ்வாமியை இவர் விடாது தர்சனம் செய்வது வழக்கம். இந்தத் தர்சனத்துக்கு இடையூறாக நடுவே காவேரி வெள்ளம் இருமுறைப் பெருகிக் குறுக்கிட்டது; அவ்விரண்டு ஸமயங்களில், ஒருதரம் ஸ்வாமியே அர்ச்சக ரூபமாய் வந்து

அய்யாவாளுக்கு ப்ரஸாதத்தைக் கொடுத்ததாகவும், மற்ளெருதரம் ஓடக்காரன் ரூபமாய் வந்து அக்கரை கொண்டு போய்ச் சேர்த்ததாகவும் சொல்லப்படுகிறது. இவற்றைத் தவிர குலீரேச்வராஷ்டகத்தின் மூலம் மழையையும், தாராவளி ஸ்துதியின் மூலம் ஒரு குழந்தைக்குப் புனர்ஜீவனையும் கொண்டு வந்ததாகவும் தெரிகிறது.

தன்னை ஆதரித்த சாஹஜி மஹாராஜர் விஷயமாய் அய்யாவாள் 'சாஹேந்த்ர விலாஸம்' என்ற 8 ஸர்க்கங்கள் கொண்ட மஹாகாவ்யமொன்றை இயற்றினார்; இதில் தஞ்சை மஹாராஷ்டிர ராஜவம்ச ஸம்பந்தமான பல சரித்ர விஷயங்கள் இருக்கின்றன; இன்னும் அச்சில் வராத இந்நூலின் ஏட்டுப்ரதி தஞ்சை ஸரஸ்வதீ மஹால் புஸ்தகாலயத்தில் இருக்கிறது. மேலும் மஹாராஜரின் வேண்டுகோளுக் கிணங்கி அய்யாவாள், மற்ளெரு வெங்கடேச சாஸ்த்ரிகள், நல்லா சாஸ்த்ரிகள் இம்மூவரும் சேர்ந்து 'பதமணிமஞ்ஜரி' என்ற ஸம்ஸ்கிருத அகராதியொன்றைத் தொகுத்தனர்; இதுவும் தஞ்சை ஸரஸ்வதீ மஹாலில் ஏட்டுப்ரதியில் இருக்கிற நூல்.

இவற்றைத்தவிர இவர் பக்தராய்ப் பாடிய ஈச்வர ஸ்தோத்ரங்கள் பல; இதில் கீழே குறிப்பிட்ட ஸ்தோத்ரங்கள் இது வரையில் தெரிய வந்திருக்கின்றன :—

| | |
|---|---|
| குலீரேச்வராஷ்டகம் | மாத்ருபூதசதகம் |
| சிவபக்தலக்ஷணம் | ஸ்துதிபத்ததி |
| சிவபக்திகல்பலதிகா | ஆர்த்திஹரஸ்தோத்ரம் |
| க்ருஷ்ணத்வாதசமஞ்ஜரீ | ஜம்புநாதாஷ்டம் |
| தாராவளீஸ்துதி | டோலாநவரத்னலாலிகா |
| தயாசதகம் | தோஷபரிஹாராஷ்டகம் |
| | ஆக்யா ஷஷ்டி |

தனக்காகத் தன் வீட்டுக் கிணற்றில் பொங்கிய கங்கையைப் பற்றியும் இவர் ஒரு ஸ்தோத்ரம் செய்திருப்பதாய்த் தெரிகிறது. இவை அநேகமாய் எல்லாம் வெளியாகி இருக்கின்றன; சில தமிழ்மொழிபெயர்ப்புடனும் அச்சாயிருக்கின்றன.

இதற்குமேல் நாம ஸித்தாந்த சாஸ்த்ரத்தின் கொள்கைகளைச் சர்ச்சை செய்து, ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானம் சொல்லி, ச்ருதி, ஸ்ம்ருதி, புராண ஆதாரங்களோடு நாம மாஹாத்ம்யத்தை ஸ்தாபிப்பதற்காக ஒருநூலை அருளினார்; இது இதுவரையிலும் ஓரிடத்திலும் ஏட்டுப்ரதியில் அகப்படாத்நூல்; இப்படி ஒரு க்ரந்தத்தை அய்யாவாள் அருளிச் செய்தார் என்பதற்கும், அது நாம ஸித்தாந்திகள் தமக்குச் சிறந்த ஆதாரமாய்ப் போற்றும் நூல்களில் ஒன்று என்பதற்கும் அத்தாட்சி அய்யாவாளுக்கு ஸமகாலிகரும் நிகரான பக்த சிரோமணியுமான போதேந்த்ரர்கள் செய்த 'நாமாம்ருத ரஸாயனம்' என்ற நாமமாஹாத்ம்ய நூல். இந்நூலில் ஸ்ரீ போதேந்த்ரர்கள் அய்யாவாளின் நாம ஸித்தாந்த நூலை மேற்கோளாக மும்முறை தருவதோடு, அந்நூலின் முறையைப் பின்பற்றியே எழுதுகிறார்.

"अथवा 'यद्भक्त्या पुण्डरीकाक्षम्' इत्यादिमूलस्य तद्भाष्यस्य च श्रीधरवेङ्कटेशशास्त्रिभिः भगवन्नामभूषणेऽभिहितोऽर्थ एवास्तु ।"

நாமாம்ருதரஸாயனம், தஞ்சை பூர்ணசந்த்ரோதய அச்சுக்கூடப்பதிப்பு, 21-ஆம் பக்கம்.

"अस्याः श्रुतेरर्थः श्रीधरवेङ्कटेश्वरशास्त்रिभिः भगवन्नामभूषणे विस्तरेणोक्तः ।"

ஷை பக்கம் 29.

"अनयोः श्रुत्योरर्थः श्रीधरवेङ्कटेश्वरशास्त्रिभिः भगवन्नामभूषणे विस्तरेणोक्तः ।"

ஷை பக்கம் 34.

இம்மேற்கோள்களிலிருந்து பகவந் நாமாவின் மாஹாத்ம்யத்தைப் பற்றியும் அதை ஓதவேண்டிய முறைகளைப் பற்றியும் 'பகவந் நாம பூஷணம்' என்ற நூலொன்றை அய்யாவாள் செய்தார் எனத் தெரிகிறது. இந்த நாம ஸித்தாந்த நூல்களில் சொல்லப்பட்டக் கொள்கைகளைப் பின்பற்றியே எழுதப்பட்ட நூல் இங்கு வெளியாக்கப்படும் 'ஆக்யாஷஷ்டி' என்ற அய்யாவாளின் ஸ்தோத்ரம்.

1—8—44 வே. ராகவன்

ஸ்ரீ குருப்யோ நம:

# நாம ஸித்தாந்தம்

பெயரில் என்ன இருக்கிறது என்பார்கள்; பெயரில் தான் எல்லாம் இருக்கிறது; பெயரே புகழ்; பெயரைச் சொல்லியே பிழைக்கவேண்டியிருக்கிறது.

ஒருவனிடம் கோபங்கொண்டால் அவனைப் பெயர்கள் கூவித் தூற்றுகிறோம்; அன்புகொண்டால் பெயர்கள் சொல்லிப் போற்றுகிறோம். இன்பமேலீட்டிலோ, துன்பமேலீட்டிலோ நம் உள்ளத்திலிருந்தெழுவது வெறும் பெயரே; குண தோஷங்களை விரித்துரைக்கவோ, துயரத்தை விவரிக்கவோ அவ்வெல்லேநிலையில் இடமில்லை; வெளிவரும் இரண்டொரு நாமாக்களிலேயே அவ்வளவு ஆவலும் ச்ரமமும் அடைக்கப் பட்டு நிற்கிறது.

குணங்களை ஸாரமாய்ச்செய்து மாத்திரை ரூபமாய் செய்துகொடுப்பது நாமாக்கள்; **यानि नामानि गौणानि** (விஷ்ணு ஸஹஸ்ரநாமம்); **नामान्यनन्तस्य यशोऽङ्कितानि** (பாகவதம் 1-5-11). ஒவ்வொரு நாமாவும் பகவானுடைய ஒரு குணத்தைத்தரும் ஒரு குடிகை; அனந்தமான குணங்களோடு ப்ரகாசிக்கும் பகவானுடைய நாமாக்களும் அனந்தம்.

வேதங்களில் ஸம்ஹிதா பாகங்களில் அக்னி, இந்த்ரன் முதலிய தைவங்களைப் பேர்சொல்லியும், குணங்களைப் பாடியும் ரிஷிகள் அழைக்கின்றனர். சதருத்ரீயத்தில் பல நாமாக்களைச் சொல்லி சிவன் போற்றப்படுகிறார். உபநிஷத் பாகங்களிலும் நிர்குணமான ப்ரமத்தின் ஸ்வரூபத்தை விளக்கும் சொற்களான ஸத்யம், ஞானம், அனந்தம் என்றவை ப்ரம்ம ஸ்வரூபானுஸந்தானத்துக்கு உதவுமாறு பரப்ரம்மவாசக

மான நாமாக்களாக யோகிகளால் கருதப்படுகின்றன[1]. இந்த நாமாக்களைத் திரும்பத் திரும்பச் சொல்லும்போது அவற்றின் பொருளான குணங்களும், ரூபங்களும் த்யானத்துக்கு வரும் (यतस्तद्विषया मतिः—பாகவதம்).

கர்மயோகம் என்பது நான் செய்கிறேன், இந்தப் பலன் இதிலிருந்து எனக்கு வேண்டும் என்ற அஹங்கார, பலாபிஸந்திகளாகிய இரு ஆக்ரஹங்களில்லாமல் பகவத் கிங்கரனாகவும், பகவதர்ப்பணமாகவும் ஸ்வதர்மானுஷ்டானம் முதலிய கர்மாக்களைச் செய்தல்; स्वकर्मणा तमभ्यर्च्य 'ஸ்வகர்மணா தம் அப்யர்ச்ய' என்றபடி இந்தப்ரகாரம் தூயதாய்ச் செய்யப்பட்ட கர்ம புஷ்பங்களைக்கொண்டு பகவதர்ச்சனம் நடத்துவது கர்மயோகம்; वासुदेवः सर्वमिति 'வாஸுதேவ: ஸர்வமிதி' என்றபடி எங்கும் கடவுளைப்பார்ப்பதும், எல்லாவற்றிலும் தன்னையும், தன்னுள் எல்லாவற்றையும் காண்பதும் (सर्वभूतस्थमात्मानं सर्वभूतानि चात्मनि—ஸர்வபூதஸ்தமாத்மானம் ஸர்வபூதானி சாத்மனி) ஞானயோகம். இவ்விரண்டிற்கும் அவச்யமான ஸந்தியாயிருப்பது பகவானுடைய நிரந்தரமான அனுஸந்தானமாகிய பக்தியோகம்; பகவானிடத்திலிருந்து கிளம்பிவிடாமல் நம் எண்ணத்தை இருத்திவைக்கக்கூடிய ஸாதனம் இடைவிடாது அவருடைய நாமாவை ஆவர்த்தனம் செய்துகொண்டிருத்தல். நாமாவென்ற ஆணியைக்கொண்டுதான் ஒரு ரூபத்தை நம் புத்தியில் அடித்துவைத்துக்கொள்ள முடியும்.

பகவத் குணங்களை விரிவாய் வர்ணித்துப் புகழ்வது ஒருவகையான ஸ்தோத்ரம்; பகவத்குண ப்ரகாசகமான

---

1. ஸ்ரீ ஸதாசிவப்ரம்மேந்த்ரர்களின் குரு ஸ்ரீ பரமசிவேந்த்ர ஸரஸ்வதிகள் இந்தப் பரப்ரம்மவாசியான சொற்களை 'உபநிஷந் நாம ஸஹஸ்ரம்' என்று உரையுடன் தொகுத்திருக்கிறார்; இந்த நூல் ஏட்டுப்ரதியில் பல ஏட்டுப்ரதி நூல் நிலயங்களில் இருக்கிறது.

நாமாக்களையே சொல்லுவது மற்றொருவகையான ஸ்தோத்ரம். முன் சொன்னதைவிட மேன்மை குறைந்ததன்று பின் சொல்லியது; ஆனாலும் முன்சொல்லியதைவிடப் பின்சொல்லியது மிகவும் எளியது. அதிக அறிவு இல்லாதவரும் நாம ஸ்தோத்திரத்தைச் சொல்லலாம். அதிலும் பல நாமாக்களால் ஆகிய ஸஹஸ்ரநாமம் 'முதலியவற்றைச்சொல்ல எவ்வளவு அறிவும், ப்ரயாஸமும் வேண்டுமோ அதைவிட மிகக்குறைவான அறிவும், முயற்சியுமே, 'சிவ, சிவ' என்று ஒரே நாமாவை ஆவர்த்தனம் செய்வதற்கு வேண்டும்.

கர்ம ஞான மார்க்கங்களைக்காட்டிலும் எளியதாய்ப் பண்டித பாமர ஸாதாரணமாய்; உலகிற்கு உதவும்பொருட்டுக் காட்டப்பட்ட பக்திமார்க்கத்திலும், முழுதும் ஈடுபட்டு இடைவிடாத ஈச்வரத்யானம், ஈச்வரஸேவை முதலியவற்றைச் செய்ய இயலாத பலர் இருக்கின்றனர்; அவர்களும் உய்யுமாறு எளிதிலும் எளியதாய் எழுந்தது இந்த பகவந் நாமகீர்த்தனம் என்ற வழி. இவ்வுண்மை மஹாபாரதத்தில் அநுசாஸன பர்வத்தில் பீஷ்மரை யுதிஷ்டிரர் கேட்கும் கேள்வியிலும், அதற்குப் பீஷ்மர் பதிலாகச்சொல்லும் விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரத்திலும் அதன் முகவுரைச்லோகங்களிலும், அவற்றின்மேல் ஆதி சங்கர பகவத்பாதர்கள் அருளிச்செய்த பாஷ்ய வாக்யங்களிலும் நன்கு காணப்படுகின்றது. பின் தென்னாட்டிலும், வடநாட்டிலும் தோன்றிய பக்தர்களால் இந்தப் பஜனம், நாமஸங்கீர்த்தனம் என்ற மார்க்கமானது மிகவும் வளர்க்கப்பட்டு நாடெங்கும் பரவி, கலியில் கடைத்தேறக் கடவுளின் நாமகானம் ஒன்றே ஸாதனம் என்று நிலைபெற்றது. முன் ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடிய நம் நாட்டிலே, பிற்காலத்தில் த்யாகய்யர் முதலிய மஹான்கள் மூலம் இந்த நாமபஜனம் ஸங்கீதத்துடன் கலந்து கலைக்குப்புத்துயிர் அளித்து, தானும் புத்துயிர் பெற்றது.

முக்யமாய்ச் சங்கரபகவத்பாதர்களின் விஷ்ணு ஸஹஸ்ர நாமபாஷ்யத்தை ஆதாரமாய்க்கொண்டு பல அத்வைத ஸந்நியாஸிகள் இந்த நாமஸித்தாந்தத்தை நூல்கள் மூலம் வளர்த்தனர். இந்த ஸித்தாந்தத்திற்கு ச்ருதி, ஸ்ம்ருதி, புராண ப்ரமாணங்களை இவர்களும் மற்றமதத்தைச்சார்ந்த பக்தரும் தம் பக்தி நூல்களில் எடுத்துத்தொகுத்தனர். கீதையும், புராணங்களில் முக்யமாய் விஷ்ணுபுராணமும், ஸ்ரீமத் பாகவதமும் இம்மதத்திற்கு மிகவும் உதவியான நூல்களாயின. நாமமாஹாத்ம்யம், நாமமே தாரகம் என்ற கொள்கைக்கும் இதற்குட்பட்ட அபிப்ராயங்களுக்கும் வரக்கூடிய ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானம், ப்ரமாண வாக்யங்கள்— இவைகளை விஷயமாகக்கொண்ட நாமஸித்தாந்த நூல்களில் சில பின்ருவமாறு :

| | |
|---|---|
| லக்ஷ்மீதரர் செய்த | பகவந் நாம கௌமுதீ |
| ,, ,, | நாம சிந்தாமணி |
| அநந்ததேவர் | பகவந் நாம கௌமுதீ வ்யாக்யானம் |
| ஹரிநாதர் | ,, ,, ,, |
| நரதேவர் | பகவந் நாம கௌமுதீ |
| கங்காதரர் | நாம கௌமுதீ |
| ரகுநாதர் | நாம சந்த்ரிகா |
| விட்டலேசர் | ,, |
| தேவகீநந்தனர் | நாம ரத்ன விவரணம் |
| முரலீதரதாஸர் | பகவந் நாம உர்பணம் |
| ,, | பகவந் நாம வைபவம் |
| புருஷோத்தமதேவர் | பகவந் நாம மாஹாத்ம்யம் |
| ஆச்ரமஸ்வாமி | நாம மாஹாத்ம்யம் |
| நிரஞ்ஜனயதி | பகவந் நாம மாஹாத்ம்ய ஸங்க்ரஹம் |
| ரகுநாதேந்த்ரயதி | ,, ,, ,, |
| உபநிஷத்ப்ரம்மயோகி | உபேய நாம விவேக வ்யாக்யா |
| அப்பாதீக்ஷிதர் புத்ரர் வேங்கடக்ருஷ்ணார்யர் | பகவந் நாம சிந்தாமணி |
| போதேந்த்ரர் | நாமாம்ருதரஸாயனம் |

போதேந்த்ரர் — நாமாம்ருத ரஸோதய:

,, — நாமாம்ருத ஸூர்யோதய: (மைஸூர் புத்தகாலயம்)

போதேந்த்ரருடைய நாமாம்ருதரஸாயனத்தில் மேற்கோளாகக் காணப்படுவதும், அவரே இயற்றியதுபோல் தோன்றுவதுமான

பகவந் நாமாம்ருதார்ணவம்

ஷை நூலிலேயே மேற்கோளாய்க் காணப்படும் — நாமதரங்கம்; இது ஸ்ரீ பாலக்ருஷ்ணநந்த ஸ்வாமிகளின் புருஷார்த்த ரத்னாகரம் என்ற நூலின் ஒரு பாகம்.

ஸ்ரீ அய்யாவாள் அருளிச்செய்த — பகவந் நாம பூஷணம்

இயற்றியவர் பெயர் தெரியாத பல நாமமாஹாத்ம்ய நூல்களும் இருக்கின்றன:

| | |
|---|---|
| நாம ஸித்தாந்தம் | பகவந் நாம மஹிமா |
| நாம கீர்த்தன மாஹாத்ம்யம் | பகவந் நாம ரத்னாவளீ |
| நாம கௌஸ்துபம் | பகவந் நாம வைபவம். |

இவற்றைத் தவிர, நூற்றுக் கணக்கான பக்தி மீமாம்ஸா நூல்களும் இந்த நாமஸங்கீர்த்தனத்தின் விவரங்களை எடுத்துரைக்கின்றன.

இந் நூல்களில் நாமவிஷயமாய்க் கொடுக்கப்படும் புராண வசனங்களுக்குக் கணக்கில்லை; புராணங்களைத் தவிர பல பக்திபரமான ஸம்ஹிதைகளும் உதாஹரிக்கப்படுகின்றன; இவ் வாதாரங்களில் மிகவும் முக்யமானவை விஷ்ணு புராணமும், ஸ்ரீமத் பாகவத புராணமும், பகவத்கீதையும். இந்த நாம ஸித்தாந்தத்திற்கு ஆதாரமாய் ஸகுணபரமான பல உபநிஷத்துகளைத் தவிர, ஸம்ஹிதாபாகங்களிலிருந்து சில மந்த்ரவாக்யங்கள் ப்ரமாணமாய்ச் சொல்லப்படுகின்றன; அவற்றில் முக்யமான வாக்யம்—

"आस्य जानन्तो नाम चिद्विवक्तन
महस्ते विष्णो सुमतिं भजामहे ।" (ऋग्वेदे २.२.२६.)

என்றது.

இந்த நாமஸித்தாந்தத்தின் முக்யமான சில கொள்கைகள் பின்வருமாறு :

பல வகையிலும் மனுஷ்ய சக்தி குன்றிப்போயிருக்கும் கலியுகத்திற்கு ஏற்ற ஸாதனம் நாமகீர்த்தனம் ஒன்றே; இதே கலியுகமானிடருக்கு எவ்வித ஸித்தியை அடைவதற்கும் போதுமான ஸாதனம்; இதற்கென்றே கலிஸந்தரணோபநிஷத் என்ற நாமோபநிஷத்தும் ப்ரவர்த்திக்கப்பட்டிருக்கிறது.

ध्यायन् कृते यजन् यज्ञैः त्रेतायां द्वापरेऽर्चयन् ।
यदाप्नोति तदाप्नोति कलौ संकीर्त्य केशवम् ॥

(விஷ்ணு பு. 6-2-17).

हरेर्नामैव नामैव नामैव मम जीवनम् ।
कलौ नास्त्येव नास्त्येव नास्त्येव गतिरन्यथा ॥

(ப்ருஹந் நாரதீய புராணம் 1-41-15).

இப்படிப்பட்ட லகு உபாயத்தைத் தருவதினால் கலிகாலமே சிறந்ததெனவும் கருதப்படுகிறது:

कलेर्दोषनिधे राजन् अस्ति ह्येको महान् गुणः ।
कीर्तनादेव कृष्णस्य मुक्तसंगः परं व्रजेत् ॥

(பாகவதம் 12-3-51).

कलिं सभाजयन्त्यार्याः गुणज्ञाः सारभागिनः ।
यत्र संकीर्तनेनैव सर्वः स्वार्थोऽभिलभ्यते ॥

(பாகவதம் 11-5-36).

இந்த நாமஜபம் மற்ற பலவிதமான தேவதாராதனைகளைக் காட்டிலும் பல வகைகளில் சிறந்தது; முதலில், இது எளியது; இதற்கு பல ஸாதனங்கள் வேண்டாம்; இதில் பரஹிம்ஸை இல்லை; இதற்குக் காலதேச த்ரவ்ய நியமங்கள் இல்லை.

एष मे सर्वधर्माणां धर्मोऽधिकतमो मतः ।
यद्भक्त्या पुण्डरीकाक्षं स्तवैरर्चेन्नरः सदा ॥

(விஷ்ணு ஸஹஸ்ரநாமஸ்தோத்ரம், 8).

'अस्य स्तुतिलक्षणस्य अर्चनस्य आधिक्ये किं कारणम् ? उच्यते– हिंसादिपुरुषान्तरद्रव्यान्तरदेशकालादिनियमानपेक्षत्वमाधिक्ये कारणम् ।' (ஷை ச்லோகத்தின் சங்கரபாஷ்யம்).

यज्ञानां जपयज्ञोऽस्मि । (பகவத் கீதை 10-25).

நாமமே அக்ஷரரூபமான பகவத்ரூபம்; ரூபகோஸ்வாமி தம் நாமாஷ்டகம் என்ற ஸ்தோத்ரத்தில் நாமாவுக்கு வாச்யம், வாசகம் என்று இரு உருவங்கள் என்றும், பகவத் ரூபம் வாச்யம், பகவந்நாமா வாசகம் என்றும், மத்ஸ்ய வராஹாதிகள்போல பகவானுக்கு நாமாவும் சைதன்யமய மான ரூபம்தான் என்றும் சொல்லுகிறார். உபாயநாமா, உபேயநாமா என்றும் உபநிஷத்ப்ரம்மம் தம் நாமவலித் தாந்த நூலில் விவரிக்கிறார். விக்ரஹத்தைவிட்டு, நாம மய மான ரூபத்தையே அய்யாவாளும் தம் ஆக்யா ஷஷ்டியில் விசேஷித்துப் போற்றுகிறார்.

இந்தப் பகவந் நாமோச்சாரணத்திற்கு எவனும் அதி காரி; எக்காலத்திலும் நாமாவைச் சொல்லலாம்; எந்தக் கார்யத்தையும் மனிதன் செய்துகொண்டிருக்கும்போதே நாமாவையும் சொல்லிக்கொண்டே இருக்கலாம்; எந்தத் தவறுதலுக்கும் நாமோச்சாரணமே சிறந்த ப்ராயச்சித்தம்.

किं जपन् मुच्यते जन्तुः (விஷ்ணுஸஹஸ்ரநாமம், 3).

'जन्तुः जननधर्मा । अनेन जन्तुशब्देन जपार्चनस्तवनादिषु यथा-योग्यं सर्वप्राणिनामधिकारं सूचयति ।'

(ஷை ச்லோகத்தின் சங்கரபாஷ்யம்).

न देशकालकर्तॄणां नियमः कीर्तने स्मृतः ।

(ஸாத்வததந்த்ரம் 5, 37).

नो देशकालनियमः शौचाशौचविनिर्णयः ।
परं संकीर्तनादेव रामरामेति मुच्यते॥ (வைச்வாநரஸம்ருதி)

न देशनियमो राजन् न कालनियमस्तथा ।
विद्यते नात्र सन्देहो विष्णोर्नामानुकीर्तने ॥

गच्छंस्तिष्ठन् स्वपन् वापि पिबन् भुंजन् नमंस्तथा ।
कृष्ण कृष्णेति संकीर्त्य मुच्यते पापकञ्चुकात् ॥
ध्यायेन्नारायणं देवं स्नानादिषु च कर्मसु ।
प्रायश्चित्तं हि सर्वस्य दुष्कृतस्येति वै श्रुतिः ॥
प्रायश्चित्तान्यशेषाणि तपःकर्मात्मकानि वै ।
यानि तेषामशेषाणां कृष्णानुस्मरणं परम् ॥ (விஷ்ணு பு. 2. 6.)
यस्य स्मृत्या च नामोक्त्या तपोयज्ञक्रियादिषु ।
न्यूनं संपूर्णतामेति सद्यो वन्दे तमच्युतम् ॥

எந்தச் சொல்லுக்கும் பரமான பொருள் ஈச்வரனு யிருக்கும் போது, ஈச்வரனுடைய பெயரையே எச்சொல்லுடன் கலந்து சொன்னல் என்ன? ஈச்வரநாமாவை எந்த வ்யாஜத்தால் உச்சரித்தால் என்ன? எவ்விதத்திலும் அது நம்மைக் காக்கும்.

अवशेनापि यन्नाम्नि कीर्तिते सर्वपातकैः ।
पुमान् विमुच्यते सद्यः सिंहत्रस्तैर्मृगैरिव ॥
(விஷ்ணு பு. 6, 8, 19).

हरिर्हरति पापानि दुष्टचित्तैरपि स्मृतः ।
अनिच्छयापि संस्पृष्टो दहत्येव हि पावकः ॥
(பிரஹ. நா. பு. 1-11-100).

ज्ञानतोऽज्ञानतो वापि वासुदेवस्य कीर्तनात् ।
तत्सर्वं विलयं याति तोयस्थं लवणं यथा ॥
(வி. ஸ. நாம சங்கரபாஷ்யத்திலுள்ள மேற்கோள்).

"स्त्रीपुंनपुंसकान्यतमेन येनकेनचिज्जनेनावशेन वा उन्मादेन वा श्रद्धया वा श्रद्धां विना वा चोरव्याघ्ररोगादिकृतार्तिनाशाय वा धर्मार्थकामान्यतमात्मकानित्यफलाय वा अन्यप्रयोजनाय वा यथाकथञ्चित् कृतनामकीर्तनेन सकलपापक्षयो मुक्तिश्च भवत्येवेत्यर्थो दर्शितः ॥'
(போதேந்த்ரர்: நாமாம்ருதரஸாயனம், 18-ம் பக்கம்).

ப்ராயச்சித்தங்களுக் கெல்லாம் ஒரே முடிவான ப்ராயச்சித்தம் நாமோச்சாரணம் என்பதையும், அதை வ்யாஜமாய்ச் சொன்னலும் அது பயன்தரும் என்பதையும் விளக்கவே ஏற்பட்ட அஜாமிளோபாக்யானத்தில் பாகவதத்தில் காணப்படும் ச்லோகங்கள்—

स्तेनः सुरापो मित्रध्रुग्ब्रह्महा गुरुतल्पगः ।
स्त्रीराजपितृगोहन्ता ये च पातकिनोऽपरे ॥
सर्वेषामप्यघवतामिदमेव सुनिष्कृतम् ।
नामव्याहरणं विष्णोर्यतस्तद्विषया मतिः ॥
सांकेत्यं पारिहास्यं वा स्तोभं हेलनमेव वा ।
वैकुण्ठनामग्रहणमशेषाघहरं विदुः ॥
पतितः स्खलितो भग्नः सन्दष्टस्तप्त आहतः ।
हरिरित्यवशेनाह पुमान्नार्हति यातनाम् ॥
अज्ञानादथवा ज्ञानादुत्तमश्लोकनाम यत् ।
संकीर्तितमघं पुंसो दहेदेधो यथानलः॥ (பாகவதம் 6, 2, 9—18)

இவ்வளவு லகுவான 'சிவ', 'ராம', 'கிருஷ்ண' என்ற இரண்டே எழுத்துக்களைச் சொல்லவேண்டும்; சொல்வதற்கு வேண்டிய யோக்யதை என்ன? ஊமையில்லாத எவனும் சொல்லலாம்; இப்படி பகவந்நாமாவும், நாவும் நம் வசமிருக்க, ஜனங்கள் ஈச்வரனைப்பேசாது ஆயுளை வீணாக்கி, மேன்மேலும் ஸம்ஸாரத்தில் உழலுகின்றனரே, என்ன ஆச்சர்யம்!

नारायणेति शब्दोऽस्ति वागस्ति वशवर्तिनी ।
तथापि नरके घोरे पतन्तीत्येतदद्भुतम् ॥
अहो चित्रमहो चित्रमहो चित्रमहो द्विजाः ।
हरिनाम्नि स्थिते लोकः संसारे वर्तते पुनः ॥

மேலே சொல்லப்பட்ட நாம மாஹாத்ம்யத்தின் அர்த்தம் எல்லா தர்மகர்மாதிகளையும் விட்டுவிடலாம், பாபம் செய்து கொண்டு எவ்விதமாயும் இஷ்டப்படி இருக்கலாம் என்று அன்று; நாமஸித்தாந்திகள் நாமபஜனத்தில் பத்து நாமாபராதங்களை ஒப்புக்கொள்ளுகின்றனர். அவை பின்வருமாறு பத்மபுராணத்தில் சொல்லப்படுகின்றன:

1. सतां निन्दा नाम्नः परममपराधं वितनुते ।

ஸாது நிந்தை செய்தல், பிறரைத் தூற்றல் நாம பஜனத்திற்கு விரோதம்.

2. शिवस्य श्रीविष्णोः य इह गुणनामादिसकलं
धिया भिन्नं पश्येत्स खलु हरिनामाहितकरः ॥

சிவ விஷ்ணு முதலிய மூர்த்திபேதவாத வைஷம்யங்களில்லாமல் ஸமபுத்தியுடன் நாமபஜனம் செய்யவேண்டும்.

3. गुरोरवज्ञा 4. श्रुतिशास्त्रनिन्दनम्

நாம ஜபத்தைத் தான் செய்வதால் குரு, வேதம், சாஸ்த்ரங்கள் இவற்றை நிந்தனை செய்யலாம் என்று செய்யக்கூடாது.

5. तथा अर्थवादो हरिनामकीर्तने ।

நாமாவை ஸர்வதா நம்பி பஜனை செய்யவேண்டும்; நாம மாஹாத்ம்யம் அர்த்தவாதம் என்று நினைக்கலாகாது.

6. नाम्नो बलाद्यस्य च पापबुद्धिः

நாமாவைச் சொன்னால் பாபம்போகும் என்பது வாஸ்தவமே; இதனால், நாமா என்ற காப்பு இருக்கிறது, பாபத்தைச் செய்தால் குற்றமில்லை என்று நினைக்கக்கூடாது.

7. न विद्यते तस्य यमैर्विशुद्धिः ॥

அஹிம்ஸா, ஸத்யம், அஸ்தேயம், ப்ரம்ஹசர்யம், அபரிக்ரஹம் என்ற யமங்களால் பரிசுத்திவேண்டும்; இவை இல்லாமல் நாமபஜனம் செய்வதும் நாமாவுக்கு அபராதம் செய்ததாகும்.

8. धर्मव्रतत्यागहुतादिसर्वगुणक्रियासाम्यमपि प्रमादतः ।

எல்லா அநுஷ்டானங்களுக்கும் ஒப்பான நாமா போதும், அநுஷ்டானங்கள் வேண்டாமென்று அசட்டை செய்வதும் நாமாபராதம்.

9. अश्रद्दधाने विमुखेऽप्यशृण्वति यश्चोपदेशः ।

ச்ரத்தை யில்லாமல் அலக்ஷ்யம் செய்பவரிடம் நாமோபதேசம் செய்வது.

10. श्रुत्वापि नाममाहात्म्यं यः प्रीतिरहितोऽधमः ।
अहं ममेति परमो नाम्नः सोऽप्यपराधकृत् ॥

பத்தாவது நாமாபராதம் எல்லாவற்றையும் விடப்பெரிது; நாமாவில் நம்பியவர் அன்பில்லாதவராயும், அஹங்கார, மமகாரங்கள் உள்ளவராயும் இருத்தல் கூடாது.

ஆகையால் நாமபஜனம் ஆத்மானுபவ மில்லாமல் கேவலம் நாவின் நுனியில் செய்யப்படும் சுஷ்கமான சப்தமாத்ர பரிவ்ருத்தி யல்லவென்றும், ஞானியும் யோகியுமானவனே

நாமாவை உண்மையில் உபாஸித்தவனாவான் என்றும் ஏற்படு கிறது. பேத புத்தியும், த்வேஷமும், தான் என்ற துராக்ரஹமும் ஒழியவேண்டும். 'விச்வம்' என்ற முதல் நாமாவின் பாஷ்யத்தில் பகவத்பாதர்கள்

"इत्यादिवचनैश्च हिंसादिरहितेन स्तुतिनमस्कारादि कर्तव्यमिति।"

என்பதால் இவ்வபிப்ராயத்தை நன்கு உணர்த்தி இருக்கிறார்கள். இதனால்தான்,

नाविष्णुः कीर्तयेद् विष्णुम्, नारुद्रः कीर्तयेद् रुद्रम्

என்றும் சொல்லப்படுகிறது. இம்முறையில்தான் தத்வ ஸாக்ஷாத்காரம் பெற்ற ஸந்யாஸிகளும் பகவந் நாமானு ஸந்தானத்தில் ரமித்துக்கொண்டிருக்கின்றனர்.

'आत्मारामाश्च मुनयो निर्ग्रन्था अप्युरुक्रमे।
कुर्वन्त्यहैतुकीं भक्तिमित्थंभूतगुणो हरिः॥'

'गायन् विलज्जो विचरत्यसंगः'

என்று ஸ்ரீ சுகப்ரம்மமும் சொல்லுகிறார். நாமபாராயணத்தால் எல்லா நலன்களும் பெருகும்; பாபம் நிவ்ருத்தியாகும்; புண்யசீலம் ஏற்படும்; ஸ்வர்க ஸத்யாதி லோக போகங்களில் விரக்தி உண்டாகும்; குருபக்தி தோன்றும்; அதன்மூலம் ஈச்வர தத்வஞானம் உதயமாகும்; தத்வஞானத்தால் ஸம்ஸாரத்தின் மூலபீஜம் பொசுங்கிப்போகும்; ஸச்சிதாநந்த ஸ்வரூபத்தில் நிஷ்டையும் நிலைக்கும்.


विष्णोर्नामैव पुंसः शमलमपनुदत् पुण्यमुत्पादयच्च
ब्रह्मादिस्थानभोगाद्विरतिमथ गुरुश्रीपदद्वन्द्वभक्तिम्।
तत्त्वज्ञानं च विष्णोः इह मृतिजननभ्रान्तिबीजं च दग्ध्वा
पूर्णानन्दैकबोधे महति च पुरुषं स्थापयित्वा निवृत्तम्॥

(காசீ, மத்ஸ்ய புராணங்கள்).

இவ்வளவு நலன்களையும் பயக்கும் நாமாவை அதன் அன்பையும், ஔதார்யத்தையும், அதற்குப் பக்தர்பாலுள்ள அக்கரையையும் ஒட்டித தாயாய்ப் பாவித்து பின்வரும் 'ஆக்யாஷஷ்டி'யில் ஸ்ரீ அய்யாவாள் துதி செய்கிறார்.

1—8—44 வே. ராகவன்

## திருவிசநல்லூர்




ஸ்ரீ அய்யாவாள் ஸந்நிதி

॥ श्रीः ॥

# ॥ 'अय्यावाल्' इति ख्यातैः श्रीश्रीधरवेङ्कटेशाभिधैः कृता आख्याषष्टिः ॥

'அய்யாவாள்' என்ற ஸ்ரீ ஸ்ரீதர வேங்கடேசர்

அருளிய

# ஆக்யா ஷஷ்டி

शिवं परमकल्याणमव्याजकरुणानिधिम् ।
तदाख्यां सौख्यजननीं वन्दे वक्त्रार्तिहारिणीम् ॥ १ ॥

*ஶிவம் பரமகல்யாணமவ்யாஜகருணாநிதிம் |*
*த஦ாக்யாம் ஸௌக்யஜநநீம் வந்தே வக்த்ரார்த்திஹாரிணீம் ||*

**परम-कल्याणम्** (எல்லாவற்றையும்விட) உயர்ந்த மங்கள மாயும் **अव्याज-करुणा-निधिम्** நிர்ஹேதுகமான கருணையின் இருப்பிடமுமான **शिवम्** சிவனையும், **वक्तृ-आर्ति-हारिणीम्** தன்னைச் சொல்லுபவரின் இன்னலை நீக்குவதும், **सौख्य जननीम्** இன்பத்தை யுண்டுபண்ணுவதுமான **तद्-आख्याम्** அச்சிவனுடைய நாமாவையும் **वन्दे** வணங்குகிறேன்.

அழிவதெல்லாம் அமங்களம்; அழிவில்லாததே மங்களம்; சிவன் என்ற மங்களவாசியான பெயர் உலகனைத்தையும் அழித்து, தான் ஒருவனே அழிவின்றி மிஞ்சி நிற்கும் பரமேச்வரன் ஒருவனுக்கே பொருந்தும்; ஸர்வமங்களா என்ற தேவியின் பதியும் அவனே.

புண்யசாலிகளை அவர்களின் புண்யகர்மாக்களே காக்கும்; பாபிகளுக்கே ஈச்வரனின் அருள் அவச்யம்; அக்கரு

ணையும் இப்பாவிகளைக் குறித்துச் சென்றால்தான் தன் பெய ருக்கும் உரித்ததாகும்; இப்படிக் காப்பாற்றும் கருணையே வ்யாஜமற்றது; அப்படிப்பட்ட நிர்வ்யாஜ கருணைக்கடலே சிவன்; இக்கருணையைப்பற்றித் தனியாய்த் தன் தயாசதகத் தில் ஸ்ரீ அய்யாவாள் பாடியிருக்கிறார்.

இங்கு மங்களம் என்று பொருள்பட்ட சிவனுடைய நாமாவைப்பற்றிப் பாடுகிறார்; மேலே விரிவாய்ச் சொல்லப் படும் இந்த சிவநாம மஹிமை இங்கு இரண்டே விசேஷணங் களால் சுட்டிக் காட்டப்படுகிறது: அவை தன்னை ஓதுவா ரின் இன்னல்களை ஒழிக்கும், துயரக் கலப்பே இல்லாத இன்பமான மோக்ஷஸுகத்தை விளைவிக்கும் என்பன.

1. I bow to Siva, the supreme auspicious Being and the reservoir of unconditional compassion, and to His Name the remover of the misery of those who utter it and the source of happiness (for them).

शिवाख्ये नो जाने शिवमितरदेवानपि जन-
न्यये कामी क्वासावहमहह दिष्ट्या तु भवतीम् ।
समीक्षे मत्सर्वश्रममुषमिहामूकसुलभां
स्वलब्धृस्वाधीनाखिलभुवनसाम्राज्यविभवाम् ॥ २ ॥

ஶிவாக்யே நோ ஜாநே ஶிவமிதரதேவாநபி ஜந-
ந்யயே க்வாமீ க்வாஸாவஹமஹஹ திஷ்ட்யா து ஹவதீம் ।
ஸமீக்ஷே மத்ஸர்வஶ்ரமமுஷமிஹாமூகஸுலஹாம்
ஸ்வலப்த்ருஸ்வாதீநாகிலஹுவநஸாம்ராஜ்யவிஹவாம் ॥

हे शिव-आख्ये ஏ சிவநாமாவே! शिवम् சிவனையாவது इतर-देवान् अपि வேறு தெய்வங்களையாவது नो जाने நான் அறியேன்; अये जननि ஏ தாயே! अमी இந்த (சிவன் முதலிய தெய்வங்கள்) क्व எங்கே? असौ अहम् இந்த நான் क्व எங்கே? तु ஆனால் अहह ஆஹா! दिष्ट्या நல்ல வேளையாய் मत्-सर्व-श्रम-

**मुषम्** என்னுடைய எல்லாக் கஷ்டங்களையும் கொள்ளை கொண்டு போவதும் **इह** இவ்வுலகில் **अमूक-सुलभाम्** ஊமை யில்லாத எவனுக்குமே எளிதில் கிட்டக்கூடியதும் **स्व-लघु-स्वाधीन-अखिल-भुवन-साम्राज्य-विभवाम्** தன்னை அடைந்த வருக்கு ஸ்வாதீனமாகும் ஸர்வலோகாதிபத்ய ஐச்வர்யத் தோடு கூடியதுமான **भवतीम्** உன்னை **समीक्षे** பார்க்கிறேன்!

இந்த ஸ்தோத்திரத்திற்கு 'ஆர்யா ஷஷ்டி' என்று பெயர்; அதாவது ஆர்யையைப்பற்றிய அறுபது ச்லோகங்கள். 'ஆர்யா' என்றால் நாமா-பெயர்-என்று பொருள். ஆர்யா என்பது ஸ்த்ரீலிங்கபதம்; தன்னை நாடுபவருக்கு வேண்டிய வற்றை அன்புடன் அளிக்கவல்லதாகையால் இப்பெயரைத் தாய், ஜனனீ என்றே கவி அழைக்கிறார். துன்பப்படும் பொழுதோ, ஒன்று தனக்கு வேண்டும் என்றபொழுதோ, குழந்தை தாயை அணுகுவது ஸஹஜம். ஈச்வரனுக்கு தேவீ, லோகமாதா என்ற சக்தி ஒன்றுமட்டுமல்லாமல் கருணை, ஆர்யை என்று வேறு இரண்டு சக்திகளும் உண்டு. இவர் களும் நம் அன்னை.

சிவநாமா ஒன்றையே தாரகமாய்க் கைப்பிடித்த கவி சிவஸ்வரூபத்தையோ இதர தெய்வங்களையோ வழிபட வில்லை; அவர்கள் பெரியவர்கள்; தான் அணுகக்கூடியவ ரல்லர்; தியானபூஜாதிகளினால் கஷ்டப்பட்டு அவற்றை வழி படவேண்டும்; எளியோர் எளிய வழியை நாடுபவர் என்ற முறைப்படி கவி சிவ நாமாவை ஆச்ரயிக்கிறார்; ஊமை யில்லாத எவனுக்குமே கிட்டக்கூடியது இந்த நாமா; அடைய எளியதாயினும் பயன் கொடுப்பதில் பெரியதே; இதர வழிபாட்டினால் ஏற்படக்கூடும் துன்ப முடிவும் நற்பத அடைவும் இந்த நாம வழிபாட்டினாலேயே கிட்டும்.

2. O Name of Siva! I know not Siva or the other Gods; O Mother! where are they and where am I (this poor being)? But, ah! luckily I see you the remover of

all my troubles, you who are easy of access here to any one except the dumb and whose devotee becomes the master of the riches of the suzerainty of the entire universe.

स्वकीयैः स्रोतोभिर्जगदखिलमाक्रामति कलौ
निमग्नास्ते वर्णाश्रमनियमधर्माः स्फुटमिदम् ।
प्रलीना ध्यानादिर्भजनसृतिरेका पुनरये
परित्रातुं विश्वं पुरभिदभिधे त्वं विजयसे ॥ ३ ॥

ஸ்வகீயை: ஸ்ரோதோபிர் ஜகதகிலமாக்ராமதி கலௌ
நிமக்நாஸ்தே வர்ணாச்ரமநியமதர்மா: ஸ்புடமிதம் |
ப்ரலீநா த்யாநாதிர் பஜநஸ்ருதிரேகா புநரயே
பரித்ராதும் விச்வம் புரபிதபிதே த்வம் விஜயஸே || 3 ||

**स्वकीयैः** தன்னுடைய **स्रोतोभिः** வெள்ளங்களால் **कलौ** கலிகாலம் **अखिलं जगत्** உலகனைத்தையும் **आक्रामति सति** ஆக்ரமிக்கும்பொழுது **ते** (முன் வழங்கிவந்த) அந்த **वर्ण-आश्रम-नियम-धर्माः** வர்ணம் ஆச்ரமம் இவற்றிற்கு ஏற்பட்ட தர்மங்கள் **निमग्नाः** முழுகிப்போய்விட்டன ; **ध्यान-आदिः** தியானம் முதலிய **भजन-सृतिः** வழிபாடு **प्रलीना** மறைந்துபோய்விட்டது; **इदं स्फुटम्** இது தெளிவாய்த் தெரிகிறது ; **अये पुरभिद्-अभिधे** ஏ சிவநாமாவே ! **विश्वम्** உலகத்தை **परित्रातुम्** காப்பாற்ற **त्वं पुनः एका** நீ ஒருத்தியே **विजयसे** சிறந்து விளங்குகிறாய்.

வர்ணங்கள் ப்ரம்ம க்ஷத்ர வைச்ய சூத்ரர் என நான்கு; ஆச்ரமங்கள் ப்ரம்மசர்யம், கார்ஹஸ்த்யம், வானப்ரஸ்தம், ஸந்யாஸம் என நான்கு; இவற்றிற்கு உரியதான தர்ம கர்மானுஷ்டானங்களால் 'வழிபடுவது கர்மயோகம்; ப்ராணங்களை அடக்கி மனத்தை ஒருமுகமாய் வைத்து ஈச்வர ஸ்வரூபத்தை த்யானஞ்செய்வது த்யானயோகம்; கலியில் இக் கர்மானுஷ்டான யோகமும் த்யானயோகமும் க்ஷீணித்துப் போயின; அவற்றை இனிக் கடவுளுடைய வழிபாடாக

மக்கள் பின்பற்ற இயலாது; ஜனங்களுக்கு காலக்ரமத்தில் சக்தி குன்றிப்போக அவர்களைக் கைதூக்கிவிட எளிதான உபாயமும் ஏற்படவேண்டாமா? அவ்வுபாயமே நாமபஜனம் என்பது; இந்த நாமா ஒன்றே கலியில், நான் மக்களைக் காக்கிறேன் என்று கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறது.

विहितमखिलकर्म ब्राह्मणानां मुनीन्द्रैः
विधिनियमसमेतं शक्यते नैव कर्तुम् ।
तदखिलमपि हित्वा यो महादेवशब्दं
पठति फलमशेषं प्राप्नुयात् सोऽनवद्यम् ॥

என்று ப்ரஹ்ம கைவர்த்த புராணத்தில் காணப்படுகிறது.

3. When Kali is engulfing the whole world with its floods, the ordained Dharmas of Varna and Asrama are submerged and the path (s) of attaining God such as contemplation are silted up; this is clear. Ah! Name of Siva! you alone flourish in all glory (singly) to save the universe!

शिवाख्ये वाच्योऽर्थस्तव हि पुरभिद्वास्तु मुरभित्
स लोकानामीष्टामवतु च सुखेन श्रितजनम् ।
अलं नाहं तस्यानुसृतिषु स मा भूदपि च मे
श्रितोऽहं त्वां यच्चद्भवति मम कल्याणि तदलम् ॥ ४ ॥

ஶிவாக்யே வாச்யோऽர்த்தஸ்தவ ஹி புரபித்வாஸ்து முரபித்
ஸ லோகாநாமீஷ்டாமவது ச ஸுகேந ஶ்ரிதஜனம் |
அலம் நாஹம் தஸ்யாநுஸ்ருதிஷு ஸ மா பூதபி ச மே
ஶ்ரிதோऽஹம் த்வாம் யத்த்வத் பவதி மம கல்யாணி ததலம் ||

हे शिव-आख्ये ஏ சிவநாமாவே! तव हि (சிவ என்ற சப்தமான) உன்னுடைய वाच्यः अर्थः சொல்லால் ஏற்படும் பொருள் पुरभिद् वा अस्तु சிவன் தான் இருக்கட்டும் मुरभिद् (वा अस्तु) அல்லது விஷ்ணுதான் இருக்கட்டும்; स அப்படிப்பட்ட பொருளான அத் தைவம் लोकानाम् ईशाम् உலகங்

களைத் தான் ஈச்வரனுக ஆளத்தான் ஆளட்டும், **सुखेन च** ஸுகமாய் (அல்லது ஸுகத்தைத்தந்து) **श्रित-जनम्** நாடியவர்களை **अवतु** காக்கத்தான் காக்கட்டும்; **तस्य** (உன் பொருளாயிருக்கும்) அந்த தைவத்தின் **अनुसृतिषु** வழிபாடுகளில் **अहम्** நான் **नालम्** தகுதியற்றவன்; **अपि च** மேலும் **सः** அந்தத் தைவம் **मे** எனக்கு **मा भूत्** வேண்டவும் வேண்டாம்; **अहम्** நான் **त्वाम्** உன்னை **श्रितः** அடைந்திருக்கிறேன்; **हे कल्याणि** ஏ மங்களமான சிவநாமாவே! **त्वत्** உன்னிடமிருந்து **मम** எனக்கு **यद् भवति** எது ஏற்படுகிறதோ **तद् अलम्** அது போதும்.

புரபித் திரிபுராஸுரர்களை எரித்த சிவன்; முரபித் முரன் என்ற அஸுரனை அழித்த விஷ்ணு. சிவன் ஈச்வரன் என்ற தன் பெயருக்கேற்ப உலகத்தை ஆள்பவர். விஷ்ணு பாலனம் செய்து மக்களுக்கு இன்பமளிப்பவர். மூர்த்தி வழிபாடென நான் ஆரம்பித்தால் மூர்த்தியின் ஸ்வரூபம், தொழில், அதற்கேற்ற முறைகள், இவற்றை ஆராயவேண்டும்; இதற்கெல்லாம் நானல்லன்; மூர்த்தியே எனக்கு வேண்டாம்; நாமா ஒன்றே எனக்குப்போதும் என்று இங்கும் கவி நாமா வொன்றையே தாரகமாய்க் கருதுகிறார்.

4. O Name of Siva! let the meaning conveyed by you (the Name) be Siva or Vishnu; let the God so meant either be lord over the worlds or protect with happiness those that resort to Him; I am not equal to (the task of) propitiating that God; why, let Him never be for me; O Auspicious Name! I have sought you and what comes from you suffices for me.

स्वयंभूदैत्यारित्रिपुरमथनानीरितकृत-
स्त्रिलोकीसाम्राज्यं तदपि नयनादेशवशगम् ।
विधातुं त्वद्भाजस्त्वमलमलघुस्ते हि महिमा
महेशाख्ये वाचामतिसरणिमाचामतितराम् ॥ ५ ॥

ஸ்வயம்பூதைத்யாரித்ரிபுரமதநாநீரிதக்ருத-
ஸ்த்ரிலோகீஸாம்ராஜ்யம் ததபி நயநாதேசவசகம் |
விதாதும் த்வத்பாஜஸ்த்வமலமலகுஸ்தே ஹி மஹிமா
மஹேசாக்யே வாசாமதிஸரணிமாசாமதிதராம் || 5 ||

**हे महेश-आख्ये** ஏ பரமசிவனின் நாமாவே! **त्वद्-भाजः** உன்னை ஆச்ரயிப்பவருக்கு **स्वयंभू-दैत्यारि-त्रिपुरमथनान्** பிரம்ம விஷ்ணு ருத்ரர்களை **ईरित-कृतः** சொன்னதைச் செய்யும் வேலைக்காரராகவும் **तत् त्रिलोकी-साम्राज्यम् अपि** அந்த மூவுலகத்தின் ஏகாதிபத்யத்தையும் **नयन-आदेश-वशगम्** கண்ணின் கட்டளைக்கு அடிமையாகவும் **विधातुम्** செய்வதற்கு **त्वम्** நீ **अलम्** ஸமர்த்தை; **हि** ஏனெனில் **अलघुः** பெரிதான **ते** உன்னுடைய **महिमा** மஹிமை **वाचा-मति-सरणिम्** வாக்கு புத்தி இவைகளின் மார்க்கத்தை **आचामतितराम्** விழுங்கிவிடுகிறது.

அடைவதற்கு எளிதாயினும் வழிபடுபவற்குப் பயனளிப்பதில் எல்லாவற்றிலும் மேலானது நாமா வென்ற பாவத்தைக் கவிமேலும் சொல்லுகிறார்; நாமாவின் மஹிமை சொல்லவும் எண்ணவும் முடியாததால் வாக்கும் புத்தியும் செல்லக்கூடிய மார்க்கத்தைத் தாண்டி நிற்கிறது.

5. O Name of the Great Lord! Of him who seeks you, you are capable of making Brahma, Vishnu and Rudra the servants that do whatever they are bid, and of making the overlordship of the three worlds also his own at the beck and call of his eye; for, your great glory surpasses the range of speech and thought.

**करालाद्यत्क्ष्वेलाज्जगदवितवानिन्दुमकुटः**
**कृतान्ताद्दुर्दान्ताद्यदपि मुनिचूडामणिसुतम् ।**
**अनल्पैः किं जल्पैस्तदिदमवनीयस्य रसना-**
**कृतत्वत्सेवायाश्चरितमभिधे मन्मथरिपोः ॥ ६ ॥**

கராலாத் யத்க்ஷ்வேலாஜ்ஜகதவிதவாநிந்துமகுட:
க்ருதாந்தாத் துர்தாந்தாத் யதபி முநிசூடாமணிஸுதம்
அநல்பை: கிம் ஜல்பைஸ்ததிதமவநீயஸ்ய ரஸநா-
க்ருதத்வத்ஸேவாயாஶ் சரிதமபிதே மந்மதரிபோ: ॥ 6 ॥

**करालात्** கொடும் **क्ष्वेलात्** விஷத்திலிருந்து **जगत्** உலகை **इन्दु-मकुटः** சந்திரசேகரனை சிவன் **अवितवान् इति यत्** காப்பாற்றினன் என்ற எது உண்டோ **दुर्दान्तात्** கஷ்டப்பட்டும் அடக்கமுடியாத **कृतान्ताद् अपि** யமனிடமிருந்தும் **मुनि-चूडामणि-सुतम्** (மிருகண்டு) மஹரிஷியின் மைந்தனை மார்க்கண்டேயனை **अवितवान् इति यत्** காப்பாற்றினன் என்ற எது உண்டோ, **अनल्पैः** அதிகமான **जल्पैः** பேச்சுக்களால் **किम्** ஆவதென்ன? **तद् इदम्** அந்த இந்தக் காப்பாற்றுதல் **हे मन्मथ-रिपोः अभिधे** ஏ சிவனுடைய நாமாவே! **अवनीयस्य** உன்னல் காக்கத்தகுதியுள்ள பக்தனுடைய **रसना-कृत-त्वत्-सेवायाः** நாவினல் செய்யப்பட்ட உன் ஸேவையின் **चरितम्** நடத்தை.

அம்ருதத்திற்காகத் தேவாஸுரர்கள் பாற்கடலைக் கடையும்பொழுது கொடும் நஞ்சு வெளிவந்து உலகையே அழிக்கப் பார்த்தது; அப்போது தேவதைகள் சிவனைக்கூவ அவர் அதைத்தானுண்டு உலகைக் காப்பாற்றினர். பதினறு வயது ஆனதும் மார்க்கண்டேயனைப் பூஜையின் நடுவே யமன் பாசமிட்டு இழுக்க முனிகுமாரன் சிவலிங்கத்தைத் தழுவிக் கொண்டான்; லிங்கத்திலிருந்தெழுந்து சிவபிரான் காலனைக் காலாலுதைத்து மார்க்கண்டேயனைச் சிரஞ்சீவி ஆக்கினர். இவைபோன்ற சிவனருட் செயல்கள் எல்லாவற்றிலும் தன்பத்திற்கு ஆளானவர் 'சிவ' என்ற சிவநாமாவைச் சொல்லியே சிவனருளுக்குப் பாத்திரமானதால் இவ்வருட்செயல்களெல்லாம் சிவநாம உச்சாரணத்தின் பயன்களே என்று கவி இங்கு அபிப்பிராயப்படுகிறார்.

6. That Siva saved the world from the terrible poison, and the son of the eminent hermit (Markandeya)

6812
R65(வழி)



from unconquerable Death,—why speak much,—these (acts of protection), O Name of Siva! are your doings, you who have been adored by the tongue of the devotee deserving of protection.

शतं सन्त्वाम्नायाः शतमपि पुराणागमगणा
विहाय त्वामेते वितरितुमलं किं शिवधियम् ।
अशेषग्लानिं या हरति भवती तु श्रममृते
शिवाख्ये मातस्तामितरनिरपेक्षा वितरति ॥ ७ ॥

ஶதம் ஸந்த்வாம்நாயாஃ ஶதமபி புராணாகமகணா
விஹாய த்வாமேதே விதரிதுமலம் கிம் ஶிவதியம் |
அஶேஷக்லாநிம் யா ஹரதி ஹவதீ து ஶ்ரமம்ருதே
ஶிவாக்யே மாதஸ்தாமிதரநிரபேக்ஷா விதரதி || 7 ||

**आम्नायाः** வேதங்கள் **शतम्** நூற்றுக்கணக்காக **सन्तु** இருக்கட்டும்; **पुराण-आगम-गणा अपि** புராண ஆகமக் குவியல்களும் **शतम् सन्तु** நூற்றுக்கணக்காக இருக்கட்டும்; **या** எந்த (**शिवधीः**) (நல்ல புத்தி, சிவனைப்பற்றிய எண்ணம்) **अशेष-ग्लानिम्** அறவே எல்லாச் சிரமத்தையும் **हरति** போக்குகிறதோ **ताम्** அப்படிப்பட்ட **शिवधियम्** நல்ல புத்தியை-சிவனைப்பற்றிய எண்ணத்தை-**एते** இந்த வேத புராண ஆகமங்கள் **त्वाम् विहाय** உன்னையல்லாமல் (தாமே) **वितरितुम्** கொடுக்க **किम् अलम्** போதுமானவைகளா? **हे मातः शिवाख्ये** ஏ தாயே சிவநாமாவே! **भवती तु** நீயோ **श्रमम् ऋते** க்லேசம் இல்லாமலேயே **इतर-निरपेक्षा सती** வேறு ஒரு யோக்யதையை வேண்டாமல் **वितरति** கொடுக்கிறாய்.

வேதபுராண ஆகமங்கள் அநந்தமாய் இருக்கின்றன இவற்றை ஓதி உணர்ந்து ஒழுகுவது என்றால் மிகவும் சிரமமான காரியம்; அந்நூல்களிலும் பதே பதே சிவனுடைய நாமாவே பாடிப் புகழப்படுகிறது; அந்நூல்களுக்கு உயிரைக் கொடுப்பதும் இச்சிவநாமாவே; ஆகை-

காவிலூர் ஆண்டவர்
A. No.......

யால் வேதம் முதலியவற்றை ஓதும் சிரமம், அவற்றின் பொருளை உணர்ந்த அறிவு, அதன்படி நடந்த ஒழுக்கம், என்ற யோக்யதைகளும் இல்லாமல் சிவநாமா ஒன்றே " நாம வ்யாஹரணம் விஷ்ணோர் யதஸ்தத்விஷயா மதி:" என்று பாகவதத்தில் சொல்லியபடி தானாகச் சிவபுத்தியை நமக்குக் கொடுக்கவல்லது ; சிவநாமாவைச் சொல்லுவதற்குச் சிரமம் என்ன ? ஒரு யோக்யதை இல்லாதவர்களும் இதைச் சொல்லித் தேறலாம்.

7. Let there be hundreds of Vedas and likewise, heaps of Puranas and Agamas. Without you, are these capable of evoking that thought of Siva (that auspicious attitude) which (completely) removes all weariness (of spirit)? But, Oh Mother, Name of Siva! you grant that thought (attitude) without toil and irrespective of any other consideration.

त्रिणेत्रस्य ग्लानिस्त्रिपुरदनुजादीन्मुररिपो-
दशग्रीवप्रष्ठानपि दलयितुं हन्त कियती ।
नियन्त्री या तेषां निखिलजगतोऽप्याशु दलय-
स्यविद्यां निर्यत्नं निटिलनयनाख्ये जननि ताम् ॥ ८ ॥

த்ரிணேத்ரஸ்ய க்லாநிஸ்த்ரிபுரதநுஜாதீந் முராரிபோர்
தசக்ரீவப்ரஷ்டாநபி தலயிதும் ஹந்த கியதீ |
நியந்த்ரீ யா தேஷாம் நிகிலஜகதோऽப்யாசு தலய-
ஸ்யவித்யாம் நிர்யத்நம் நிடிலநயநாக்யே ஜநநி தாம் ‖ 8 ‖

त्रिपुर-दनुज-आदीन् த்ரிபுரர்கள் முதலிய அஸுரர்களை दलयितुम् முறிக்க त्रिणेत्रस्य சிவனுக்கு ग्लानिः சிரமம் कियती எவ்வளவு ? दशग्रीवप्रष्ठान् ராவணன் முதலானவர்களை दलयितुम् முறிக்க मुररिपोः अपि விஷ்ணுவுக்கும் ग्लानिः கஷ்டம் कियती எவ்வளவு ? हन्त அந்தோ ! हे जननि ! निटिल-

नयन-आख्ये த்ராயே சிவநாமாவே ! या எந்த (அவித்யை) तेषाम् அந்த த்ரிபுர ராவணுதி அஸுரர்களுக்கும் निखिल-जगतः अपि உலகனைத்திற்கும் नियन्त्री யஜமானியோ ताम् அந்த अविद्याम् அவித்யையை आशु சீக்கிரம் नियतम् அநாயாஸமாய் (அல்லது नियतम् यथा तथा அந்த அவித்யை தலையெடுக்கும் முயற்சி அற்றவளாயாகும்படி) दलयसि ஒழிக்கிறுய்.

சிவநாமஸ்மரணத்திலிருந்து சிவபுத்தி ஏற்படுகிறதென்று முன் ச்லோகத்தில் சொல்லப்பட்டது; சிவநாமஸ்மரணம் செய்யாததால் சிவபுத்தி ஏற்படாமல் துர்புத்தி ஏற்படுகிறது; துர்புத்தியிலிருந்து விளைவதே அஸுரத்தனம்; அஸுரத்தன்மை பழுத்துப்போனுல் அதை ஒழிப்பதற்கு மிகவும் பாடுபடவேண்டும்; ஆகையால் அடியிலேயே துஷ்டத்தனத்தின் மூலகாரணமான அவித்யையின் கிளர்ச்சி ஏற்படாதபடி சிவநாமபஜனம் பண்ணவேண்டும்.

8. What an amount of trouble (it was) for Siva to destroy Asuras like Tripura and for Vishnu to destroy those like Ravana? Alas! O Mother, Name of Siva! that Ignorance which holds sway over these demons and the entire world as well, you quickly destroy, without effort (or rendering it inert for further mischief).

भवत्याः पन्थानः शतमखमुखश्रीभिरभितः
सुधासारैः सिक्ताः कुसुमसमवायैश्च निचिताः ।
क्रियन्ते निर्याहि स्मरभिदभिधे दीयत इतः
करालम्बो जाग्रद्विनयभरया मुक्तिरमया ॥ ९ ॥

ஹவத்யா: பந்தாந: ஶதமகமுகஶ்ரீபிரபித:
ஸுதாஸாரை: ஸிக்தா: குஸுமஸமவாயைஶ்ச நிசிதா: |
க்ரியந்தே நிர்யாஹி ஸ்மரபிதபிதே தீயத இத:
கராலம்போ ஜாக்ரத்விநயபரயா முக்திரமயா || 9 ||

हे स्मरभिद्-अभिधे ஏ சிவநாமாவே! भवत्याः உன்னுடைய पन्थानः மார்க்கங்கள் अभितः நான்கு பக்கங்களிலும் शत-मुख-मुख-श्रीभिः இந்திரன் முதலானவர்களுடைய செல்வங்களாலும் सुधा-सारैः அம்ருதவர்ஷத்தினுலும் सिक्ताः நனைக்கப்பட்டனவாயும் कुसुम-समवायैः (கல்ப விருக்ஷ) புஷ்பக் குவியல்களால் निचिताः च நிரப்பப்பட்டனவாயும் क्रियन्ते செய்யப்படுகின்றன; निर्याहि கிளம்பிவா; इतो இதோ जाग्रद्-विनय-भरया எழும் வணக்கமிகுதியோடுகூடிய मुक्ति-रमया முக்தியென்ற லக்ஷ்மியால் कर-आलम्बो கைலாக்கு दीयते (உனக்கு) கொடுக்கப்படுகிறது.

இந்த ச்லோகத்தில் சிவாக்யையை பவனிக்கு எழுந்து வரும் மஹாதேவியென வர்ணிக்கிறார் கவி. அவளுடைய பாதைகள் தேவலோகவாஸிகளால் தம் செல்வங்களால் அலங்காரஞ் செய்யப்பட்டு, அம்ருதத்தால் நீர் தெளிக்கப்பட்டு, நந்தனவன புஷ்பங்களால் தூவப்பட்டும் இருக்கின்றன; முக்தியென்ற லக்ஷ்மியே ஸகிபோல் பணிவுடன் கைலாக்குக் கொடுக்கிறாள்; அதாவது சிவ நாமாவுக்கு முக்தி தானே அடிமையாகிறது; ஸ்வர்க்கபோகங்களை அது பொருட்படுத்தாது மிதித்து மேலே செல்லுகிறது என்று பாவம்.

9. O Name of Siva! your paths are sprinkled on all sides with the riches of gods like Indra and the shower of nectar, and strewn with heaps of (heavenly) flowers. Come forth! Here is the hand extended to you by the Lakshmi of Mukti in all her great humility.

शिवाख्ये जिह्वायां वदति भवतीं यस्तमखिलं
शरद्राकाचन्द्रद्युतिमसितकण्ठं त्रिणयनम् ।
विधून्मीलन्मौलिं विरचयसि केयं व्यसनिता
विहन्तुं ते जीवेष्वहह शिवभावासुलभताम् ॥ १० ॥

ஶிவாக்யே ஜிஹ்வாயாம் வஹதி ஹவதீம் யஸ்தமகிலம்
ஶரத்ராகாசந்த்ரத்யுதிமஸிதகண்டம் த்ரிணயநம் |
விதூந்மீலந்மௌளிம் விரசயஸி கேயம் வ்யஸநிதா
விஹந்தும் தே ஜீவேஷ்வஹஹ ஶிவபாவாஸுலபதாம் ||

**हे शिव-आख्ये** ஏ சிவநாமமே ! **यः** எவன் **भवतीम्** உன்னை **जिह्वायाम्** தன் நாவில் **वहति** தாங்குகிறானோ **तम् अखिलम्** அந்த எல்லா மக்களையுமே **शरद्-राका-चन्द्र-द्युतिम्** சரத்கால பூர்ண சந்த்ர காந்தி உடையவராகவும் **असित-कण्ठम्** கருங்கழுத்து உடையவராகவும் **त्रिणयनम्** முக்கண்ணராகவும் **विधु-उन्मीलन्-मौलिम्** சந்த்ரனால் பிரகாசிக்கும் தலையையுடையவராகவும் (அதாவது சிவனாகவே) **विरचयसि** செய்துவிடுகிறாய் ; **अहह** ஹாஹா ! **जीवेषु** ஜீவர்களிடம் **शिव-भाव-असुलभताम्** சிவத் தன்மை (ஸாரூப்யம்) கிடைத்தல் அரிது என்றதை **विहन्तुम्** ஒழிக்க, **ते** உனக்கு **का इयं व्यसनिता** இதென்ன அபிநிவேசம்!

சிவநாம உச்சாரணத்தினால் உச்சரிப்பவனுக்கு 'சிவ ஸாரூப்யம் திண்ணமாய்க் கிடைக்கிறது என்பது இங்கு சொல்லப்படுகிறது.

சிவனுடைய ரூபத்தில் இங்குக் கவி குறிப்பிட்டுள்ள நான்கு அம்சங்களும் கவனிக்கத்தக்கன : சந்த்ரிகைபோன்ற வெண்மேனி ஸத்வகுணத்தைக் குறிக்கின்றது; விஷம் உண்ட கரும் கழுத்துத் தீங்கை ஜரிக்கக்கூடிய சக்தியைக் காண்பிக்கின்றது ; முக்கண்ணன் என்றதால் காமனை எரித்த வைராக்யம் த்வனிக்கின்றது ; தலையில் உள்ள சந்திரகலை ஞானகலையைக் காண்பிக்கின்றது ; சிவபாவம் என்ற நற் தன்மைக்கு இந்நான்கும் அவசியம்.

10. O Name of Siva ! Everybody who bears you on his tongue, you convert into One of a lustre like that of the autumnal moon, of a dark neck, of three eyes and a head gleaming with the moon. Ah ! what is this preoccupation of yours to put an end to the difficulty of people attaining Sivahood.

समाचक्षाणस्य स्मरभिदभिधे देवि भवती-
महो यस्यां यस्यां हरिति नयनान्तोऽवतरति ।
हरास्तस्यां तस्यामलिकनयनाश्चन्द्रमकुटाः
शरज्ज्योत्स्नागौराः सह गिरिजयोद्यन्ति शतशः ॥ ११ ॥

ஸமாசக்ஷாணஸ்ய ஸ்மரபிதபிதே தேவி பவதீம்
அஹோ யஸ்யாம் யஸ்யாம் ஹரிதி நயநாந்தோऽவதரதி |
ஹராஸ்தஸ்யாம் தஸ்யாமலிகநயநாஶ்சந்த்ரமகுடா:
ஶரஜ்ஜ்யோத்ஸ்நாகௌரா:ஸஹ கிரிஜயோத்யந்தி ஶதஶ:

**हे देवि ! स्मरभिद्-अभिधे** ஏ தேவி சிவநாமாவே ! **भवतीम्** உன்னை **समाचक्षाणस्य** சொல்லுகிறவனுடைய **नयन-अन्तः** கடைக்கண் **यस्यां यस्याम्** எந்த எந்த **हरिति** திக்கில் **अवतरति** விழுகிறதோ **तस्यां तस्याम् (हरिति)** அந்த அந்த திக்கில் **अहो** ஆச்சரியம் ! **अलिक-नयनाः** நெற்றிக்கண்ணரும் **चन्द्र-मकुटाः** மதிமுடியரும் **शरद्-ज्योत्स्ना-गौराः** சரத் சந்திரிகைபோன்ற வெண்மேனியருமான **हराः** பரமசிவன்கள் **गिरिजया सह** பார்வதியுடன் கூடியவர்களாய் **शतशः** நூற்றுக்கணக்காய் **उद्यन्ति** எழுந்திருக்கிறார்கள்.

முன் ச்லோகத்தில் சிவநாமாவைச் சொல்லுபவர்கள் தாம் சிவஸாரூப்யமடைகிறார்கள் என்று சொல்லப்பட்டது; இதில் சிவஸாரூப்ய மடைந்த அவர்களுக்குச் சிவனுடைய சக்தியும் அருளும் ஏற்படுகின்றனவென்றும் அவர்கள் கடாக்ஷத்திற்குப் பார்த்தமாத்திரத்தில் சிவஸாரூப்யம் அளிக்கும் சக்தி ஏற்படுகிறது என்றும் சொல்லுகிறார் கவி.

11. O Goddess Name of Siva ! In whichever quarter falls the glance of the devotee who utters you, ah, there do arise in hundreds and in the company of Parvati(s), forehead-eyed, moon-crested Sivas, white like autumnal moonlight.

शिवः कामं क्रोधाकुलमतिरजैषीत्त्वदनुगै-
जितः कामः क्रोधोऽप्यथ मुनिकुमारं यमभयात् ।
शिवोऽरक्षीदेकं सयतनमिमे तद्भयहृतो-
ऽखिलस्येक्षामात्राज्जितमिह शिवाख्ये त्वदनुगैः ॥ १२ ॥

*ஶிவ: காமம் க்ரோதாகுலமதிரஜைஷீத் த்வதநுகைர்*
*ஜித: காம: க்ரோதோऽப்யத முநிகுமாரம் யமபயாத் ॥*
*ஶிவோऽரக்ஷீதேகம் ஸயதநமிமே தத்பயஹ்ருதோ-*
*ऽகிலஸ்யேக்ஷாமாத்ராஜ்ஜிதமிஹ ஶிவாக்யே த்வதநுகை:*

**हे शिव-आख्ये** *ஏ சிவநாமாவே!* **शिवः** *சிவன்* **क्रोध-आकुल-मतिः (सन्)** *கோபத்தால் கலங்கிய புத்தியுடையவராய்* **कामम्** *காமனை* **अजैषीत्** *வென்றார்;* **त्वद्-अनुगैः** *உன்னைப் பின்பற்றிய பக்தர்களாலோ* **कामः** *காமமும்* **क्रोधोऽपि** *கோபமும்* **जितः** *வெல்லப்பட்டது;* **अथ** *மேலும்* **यम-भयात्** *யமபயத்திலிருந்து* **एकम् मुनि-कुमारम्** *ஒரு முனி மைந்தனை (மார்க்கண்டேயன் ஒருவனையே)* **शिवः** *சிவன்* **सयतनम्** *முயற்சி எடுத்துக்கொண்டு* **अरक्षीत्** *காப்பாற்றினார்;* **इमे** *இந்த உன் பக்தர்கள்* **ईक्षा-मात्रात्** *பார்த்தமாத்திரத்திலேயே* **अखिलस्य** *எல்லோருடைய* **तद्-भय-हृतः** *அந்த ம்ருத்யுபயத்தைப் போக்குகிறார்கள்;* **इह** *இவ்வுலகில்* **त्वद्-अनुगैः** *உன்னைப் பின்பற்றிய பக்தர்களால்* **जितम्** *வெற்றியுடன் இருக்கப்படுகிறது.*

*சிவன் ஒன்று சிரமப்பட்டுச் செய்தவிடத்தில் பலவற்றை அநாயாஸமாய்ச் செய்து சிவனைவிடப் பெரியதாய் வெற்றியுடன் இருக்கிறது சிவநாமா.*

12. O Name of Siva! With a mind perturbed by anger, Siva vanquished Kama (Passion). Passion and Anger too are vanquished by your followers. And then with effort, Siva saved but one hermit-son from the fear

of Death; these, your adherents, by their mere glance, remove that fear of Death for everybody. (Verily), your adherents are victorious in this world.

चरन्तीं त्वच्छायां शशिवदुपवाराशि वसती-
त्यदोमुख्यासूक्तिष्वपि रसनया संकलयतः ।
परागं ब्रह्माद्याः पदकलितमञ्चन्ति शिरसा
शिवाख्ये त्वन्निष्ठैर्जितमिति किमम्बाद्भुतमिदम् ॥ १३ ॥

சரந்தீம் த்வச்சாயாம் ஶஶிவது³பவாராஶி வஸதீ
த்யதோ³முக்²யாஸூக்திஷ்வபி ரஸநயா ஸங்கலயத: |
பராக³ம் ப்³ரஹ்மாத்³யா: பத³கலிதமஞ்சந்தி ஶிரஸா
ஶிவாக்²யே த்வந்நிஷ்டை²ர்ஜிதமிதி கிமம்பா³த்³பு⁴தமித³ம்

हे शिव-आख्ये ஏ சிவநாமாவே! शशिवत्-ச சிவத்-சந்திரன் போலிருக்கிறது (इति என்றும்) उप-वाराशि वसति इति உபவாரா சிவ ஸதி-'ஸமுத்ரக்கரையில் வஸிக்கிறான்' என்றும் अदो-मुख्यासु இது முதலான उक्तिषु अपि பேச்சுக்களிலே கூட चरन्तीम् புழங்குகிற त्वच्-छायाम् உன் பிரதிபிம்பம் போல் தோன்றும் சிவ என்ற எழுத்துக்களை रसनया நாவினால் संकलयतः சேர்த்து வழங்கும் ஒருவனுடைய पद-कलितम् காலில் பட்ட परागम् தூசியை ब्रह्म-आद्याः ப்ரம்மா முதலியோர் शिरसा தலையால் अञ्चन्ति தாங்குகிறார்கள்; हे अम्ब! ஏ தாயே! (சிவநாமாவே!) त्वन्-निष्ठैः உன் பக்தியிலேயே நிலைபெற்றவர்களால் जितम् इति ஸர்வோத்க்ருஷ்டமாயிருக்கப்படுகிறது என்ற इदम् இது अद्भुतम् किम् விந்தையா?

"सांकेत्यं पारिहास्यं वा स्तोभं हेलनमेव वा ।
वैकुण्ठनामग्रहणमशेषाघहरं विदुः ॥" (பாகவதம் 6-2-14)

வ்யாஜமாயும், பரிஹாஸமாயுங்கூடப் பகவந்நாமா வாக்கில் அடிபட்டால், அது எல்லாப் பாபத்தையும் போக்கும்

என்று ஸ்ரீ சுகப்ரம்மத்தின் அருள். அந்தக் கொள்கையை யநுஸரித்து யத்ருச்சையாய் வேறுபேச்சுப் பேசும்போது தான் அறியாமல் ஒருவன் பேசும் வார்த்தைகளில் 'சிவ' என்ற சொற்றொடர் வாய்த்துவிடுவதற்கு உதாஹரணமாய் இரண்டை இங்குக் கவி சொல்லிக் காட்டுகிறார்: மாடியில் நிலவில் உட்கார்ந்துகொண்டு தன் பிரியையின் முகத்தைப் பார்த்து அது சந்திரனைப்போ லிருக்கிறது - சசிவத்-என்று சொல்லும்போது அவன் அறியாமல் அவன் வாயில் 'சிவ' என்ற அக்ஷரங்கள் தோன்றிவிடுகின்றன; அதுபோல் ஸமுத்ரக்கரையில் வஸிப்பவர் ஒருவரை அவர் எங்கு வஸிக்கிறார் என்று கேட்டதற்கு 'உபவாரா சிவஸதி' என்று எழும் பதிலிலும் 'சிவ' என்ற பெயர் தானய் வந்து சேருகிறது; இப்படி 'மராமரம்', 'ரா-மா' என்று பௌராணிகர்கள் பல உதாஹரணங்கள் சொல்லுவர்; இந்த நியாயத்தை ஒட்டி யாத்ருச்சிகமாகச் சிவநாம உச்சாரணம் செய்தவரே பிரம்மா முதலிய தேவர்களால் கௌரவிக்கப்படுவர் என்றால் சிவநாம ஜபத்திலேயே நிஷ்டிதராய் இருப்பவரைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

13. O Name of Siva! Gods like Brahma bear on their heads the dust of the feet of one who, with his tongue, deals in what is but your semblance in utterances like 'sa-*siva*-t' and 'upavara-*siva*-sati.' O Mother! is it a wonder that those who have established themselves in you are all victorious?

भवत्यां स्पृष्टायां बत पुरहराख्ये रसनया
करालेन ग्रीवा भवति गरलेनास्य कलिता ।
हुताशेनाश्लिष्टो भवति च करोऽङ्गानि भुजगै-
र्भवन्ति क्रान्तानि श्रितकुशलदा त्वं तु विदिता ॥ १४ ॥

ஹவத்யாம் ஸ்ப்ருஷ்டாயாம் ஹத புரஹராஹ்வே ரஸநயா
கராலேந க்ரீவா ஹவதி கரலேநாஸ்ய கலிதா |
ஹுதாசேநாச்லிஷ்டோ ஹவதி ஹ கரோऽங்காநி புஜகை:
ஹவந்தி க்ராந்தாநி ச்ரிதகுசலதா த்வம் து விதிதா || 14

**हे पुरहर-आह्वये** ஏ சிவநாமாவே! **बत** அந்தோ! **रसनया** நாவினால் **भवत्याम्** நீ **स्पृष्टायाम्** **(सत्याम्)** தொடப்பட்டமாத்திரத்தில் **अस्य** அப்படி உன்னை உச்சரிப்பவனுடைய **ग्रीवा** கழுத்து **करालेन** கொடும் **गरलेन** விஷத்தால் **कलिता** சூழப்பட்டதாக **भवति** ஆகிறது; **करः** கையும் **हुताशेन** நெருப்பினால் **आश्लिष्टः** அணைந்துகொள்ளப்பட்டதாக் **भवति** ஆகிறது; **अङ्गानि** மற்ற அங்கங்கள் **भुजगैः** பாம்புகளால் **क्रान्तानि** ஆக்ரமிக்கப்பட்டனவாய் **भवन्ति** ஆகின்றன; **त्वं तु** ஆனால் நீயோ **श्रित-कुशल-दा** ஆச்ரயித்தவருக்கு நன்மையைக் கொடுக்கிறவள் என்று **विदिता** அறியப்பட்டிருக்கிறாய்.

சிவநாமாவைச் சொன்னவர் சிவஸாரூப்யம் என்ற பெரும் க்ஷேமத்தை அடைகின்றனர் என்ற விஷயத்தையே இங்குக் கவி அலங்காரமாய் விரோதத்தைக் காட்டிச்சொல்லுகிறார்; நீ பக்தருக்கு நன்மை செய்கிறவளானால் உன்னை உச்சரித்தமாத்திரத்திலேயே பக்தனின் தொண்டையில் விஷத்தை ஏத்தி, கையில் தீயை இட்டு, உடம்புமேல் பாம்புகளைப் போட்டுவிடுகிறாயே? இப்படி விஷத்தாலும், நெருப்பாலும், பாம்புகளாலும் அவர்களின் சரீரத்தைத் தீங்குக்கு ஆளாக்கலாமா? உண்மையில் விஷங்கொண்ட கழுத்து, நெருப்புத் தாங்கிய கை, பாம்பணிந்த அங்கங்கள் சிவரூபத்தின் லக்ஷணங்கள் என்று விரோத பரிஹாரம் செய்து கொள்ளவேண்டும்.

14. O Name of Siva! Alas! as soon as one but utters you with his tongue, his neck becomes enveloped with terrible poison, his hand becomes clasped by fire

and limbs overrun with serpents; and you are known as one affording safety to those that resort to you!

दशायामन्त्यायां दलितबलदीनेन्द्रियततौ
महेशाख्ये जिह्वां श्रवणमपि वा संश्रितवती ।
भवत्येकैवास्य प्रतिभवति भद्राय महते
तदा केनान्येनोन्मिषतु कणिका वाऽप्युपकृतेः ॥ १५ ॥

தசாயாமந்த்யாயாம் தளிதபலதீநேந்த்ரியததௌ
மஹேசாக்யே ஜிஹ்வாம் ச்ரவணமபி வா ஸம்ச்ரிதவதீ |
பவத்யேகைவாஸ்ய ப்ரதிபவதி பத்ராய மஹதே
ததா கேநாந்யேநோந்மிஷது கணிகா வாப்யுபக்ருதே: || 15

**दलित-बल-दीन-इन्द्रिय-ततौ** முறிந்துபோன வலிமையோடும் குன்றிப்போன புலன்களோடும் கூடிய **अन्त्यायां दशायाम्** கடைசி தசையில் **हे महेश-आख्ये** ஏ சிவநாமாவே! **जिह्वाम्** (ஒருவனுடைய) நாவையாவது **श्रवणम् अपि वा** காதையாவது **संश्रितवती** அடைந்த **भवती** நீ **एका एव** ஒருத்தியே **अस्य** அவனுக்கு **महते भद्राय** பெரும் நலமான மோக்ஷத்தின் பொருட்டு **प्रतिभवति** ஜாமீன் கொடுப்பவளாய் இருக்கிறாய்; **तदा** அந்த ஸமயத்தில் **अन्येन केन** வேறு எவனால் **उपकृतेः कणिका** உதவியின் திவிலைகூட **उन्मिषतु** ஏற்படக்கூடும்?

ப்ரதிபூ என்றால் ஜாமீன் (Surety), அதற்கு நான் ஜவாப் என்று நிற்பவர்; ஒருவன் பலம், புலனறிவு முதலியவற்றை இழந்து மரணாவஸ்தையில் இருக்கும்போது அவனுக்கு வேறு ஒருவரிடமிருந்தும் உபகாரலேசமும் ஏற்படுவதில்லை; இவன் தானே உச்சரிக்கப்பட்டோ, பிறர் உபதேசித்துக் காதால் கேட்கப்பட்டோவிருக்கும் சிவநாமா ஒன்றே இவனுக்குப் பரகதிக்குத் தான் உத்தரவாதி என்று முன்வந்து நிற்கிறது.

15. In that last stage when strength has been broken and the senses have all become feeble, O Name of Siva ! you alone stand surety for the Great Welfare (of Moksha) to him whose tongue or ear you have approached. From whom else, at that time, could even an iota of help come forth ?

मनागप्यस्पृष्टा गहनदहनेनेह विषया-
भिधानेनानेन क्षितिधरसुतानेतुरभिधे ।
रमन्ते कामं ते कतिचिदधिकल्लोलितसुधा-
झरायां धारायां शिशिरशिशिरायां सुकृतिनः ॥ १६ ॥

மநாகப்யஸ்ப்ருஷ்டா கஹநதஹநேநேஹ விஷயா-
பிதாநேநாநேந க்ஷிதிதரஸுதாநேதுரபிதே |
ரமந்தே காமம் தே கதிசிததிகல்லோலிதஸுதா-
ஜராயாம் தாராயாம் ஶிஶிரஶிஶிராயாம் ஸுக்ருதிந: ||

**इह** இவ்வுலகில் **विषय-अभिधानेन** சிற்றின்பமென்கிற **अनेन गहन-दहनेन** இந்தக் காட்டுத் தீயினால் **मनाग् अपि** ஒருபோதும் **अस्पृष्टाः** தீண்டப்படாதவராய் **कतिचित्** சில **सुकृतिनः** புண்ணியசாலிகள் **क्षितिधर-सुता-नेतुः अभिधे** ஏ சிவநாமாவே! **कल्लोलित-सुधा-झरायाम्** - அலைமோதும் அம்ருதப்பெருக்கோடு கூடிய **शिशिर-शिशिरायाम्** மிகவும் குளிர்ந்ததான **ते धारायाम्** உன் இடைவிடாத கீர்த்தனப் ப்ரவாஹத்தில் **कामम्** யதேச்சையாய் **रमन्ते** விளையாடுகிறார்கள்.

உலகவாழ்க்கையில் உழலுபவர்கள் உணர்ச்சிக்குக் குளிமையென நாடும் இன்பவகைகள் உண்மையில் காட்டுத் தீக்கு ஒப்பானவை; சிவ ஸங்கீர்த்தனத்தின் குளிர்ச்சியை ரஸித்தவர் அவற்றை நாடமாட்டார்; சிவநாமாவை இடைவிடாது ஓதுவதான தாராவாஹிகமான பாவப்ரவாஹம் மிகவும் குளிர்ந்த அம்ருத நதிபோன்றது; விஷயவிஷாக்னியில் தபிப்பவர் அதில் அமிழ்ந்து முழுகி இன்புற்றிருக்கலாம்.

16. Untouched even slightly by this forest-fire of sense-pleasures here, some blessed ones, O Name of Siva, sport as they please in the ceaseless flow of your recitation billowing with its ambrosial current and exceedingly cool.

वधूटीपुत्रादीन्वसुविसरमानम्रनृपति-
च्छटाचूडारत्नच्छविकवचिताशां श्रियमपि ।
जहत्येके धन्या जगति मदनद्रोग्धुरभिधे
विहारे सोत्कण्ठा विहतिरहिते त्वल्लहरिषु ॥ १७ ॥

வதூடீபுத்ராதீந் வஸுவிஸரமாநம்ரந்ருபதி-
ச்சடாசூடாரத்நச்சவிகவசிதாஶாம் ஶ்ரியமபி |
ஜஹத்யேகே தந்யா ஜகதி மதநத்ரோக்துரபிதே
விஹாரே ஸோத்கண்டா விஹதிரஹிதே த்வல்லஹரிஷு ||

**हे मदन-द्रोग्धुः अभिधे** - ஏ சிவநாமாவே! **त्वत्-लहरिषु** உன்னைச் சொல்லிக்கொண்டேயிருப்பது என்ற அலைகளில் **विहति-रहिते** இடையூறில்லா **विहारे**-விளையாடுவதில் **स-उत्कण्ठाः** விருப்பமுள்ள **एके** சில **धन्याः** நற்பேறுபெற்றவர்கள் **वधूटी-पुत्र-आदीन्** மனைவி மக்கள் முதலியவரையும் **वसु-विसरम्** செல்வப்பெருக்கையும் **आनम्र - नृपति - च्छटा - चूडा - रत्न-च्छवि-कवचित-आशाम्** தலை வணங்கிய சிற்றரச ஸமூஹங்களின் முடி மணியொளிகளால் வியாபிக்கப்பட்ட திக்குக்களோடுகூடிய **श्रियम् अपि** ராஜலக்ஷ்மியையும் **जहति** விட்டு விலகுகிறார்கள்.

சிவநாம ஜபத்தின் ருசியை அனுபவித்து மேன்மேலும் அந்த இன்பத்திற்கே ஏங்கியிருப்பவருக்கு இல்லறமோ தனஸம்ருத்தியோ ராஜகர ஸேவா ஸம்மானங்களோ வேண்டியிருக்கமாட்டா.

17. O Name of Siva! Some blessed souls who long for the unimpeded sport in the waves of your recitation, shun wife, sons and the like, shun extensive riches and

shun also the royalty that is covered all round with the dazzle of the diadem-gems of multitudes of prostrating princes.

अजस्रं तन्वानाः श्वसितुमपि मामक्षममिमं
कदा वा क्रामन्तु प्रतिहतकरालोपहतयः ।
पुरारातेराख्ये पुरभिदनुभूत्यूर्मिलसुख-
प्रतीपेभध्वंसप्रबलहरयस्त्वल्लहरयः ॥ १८ ॥

*அஜஸ்ரம் தன்வாநா: ஶ்வஸிதுமபி மாமக்ஷமமிமம்*
*கதா வா க்ராமந்து ப்ரதிஹதகராலோபஹதய: |*
*புராராதேராக்யே புரபிதநுபூத்யூர்மிலஸுக-*
*ப்ரதீபேபத்வம்ஸ ப்ரபலஹரயஸ்த்வல்லஹரய: || 18 ||*

**हे पुराराते: आख्ये** ஏ சிவநாமாவே! **प्रतिहत-कराल-उपहतयः** கடும் தடைகளையும் தொலைத்து **पुरभिद्-अनुभूति-ऊर्मिल-सुख-प्रतीप-इभ-ध्वंस-प्रबल-हरयः** சிவானுபவமாகிற அலைமோதுமின்பத்திற்கு எதிரான யானைகளை யொழிப்பதில் வலுத்த சிங்கங்களா யிருப்பவைகளுமான **त्वल्-लहरयः** உனது உச்சாரணப் பெருக்குகள் **कदा वा** எப்பொழுதோ **इमं माम्** இந்த என்னை **श्वसितुम् अपि** மூச்சுவிடக்கூட **अक्षमम्** முடியாதவனாய் **तन्वानाः** செய்பவைகளாய் **आक्रामन्तु** ஆக்ரமிக்கும்?

மூச்சுவிடுவது எப்படி இடைவிடாது உயிருடன் உள்ள ஜீவனுக்கு இயல்பாய் அது இல்லாத இடைவெளியே இல்லாதபடி இருக்கிறதோ அப்படியும், அதற்கும்மேலே எனக்கு மூச்சுவிடக்கூட முடியாதபடி என்னை முழுதும் வியாபித்துக்கொண்டு ப்ரவர்த்திக்கவேண்டும் இச்சிவநாம பாராயணம் என்று கவி வேண்டிக்கொள்ளுகிறார்; சிவனை இடைவிடாது நினைத்துக்கொண் டிருப்பதற்கு இடையூறுகள் வந்தால் அவற்றை மனதிலிருந்து துரத்த சிவநாமாவின் உச்சாரணமே உபாயம்; மூச்சுவிடக்கூட முடியாதபடி இந்த

ஜபம் எனக்கு ஏற்படவேண்டுமென்றதால் ப்ராணாயாம புரஸ்ஸரமான சிவத்யானத்துடன் இது ஏற்படட்டும் என்றும் த்வனிக்கிறது.

18. O Name of Siva! the torrents of your recitation which beat back (all) terrible obstacles and are like fierce lions in destroying the elephant-like obstacles to the billowing bliss of Siva-enjoyment —when will they swamp me, rendering me unable even to take breath?

शिवाख्ये त्वत्स्रोतस्ततिषु विहृतिं बाधिषत मा
ममाशक्त्यालस्यारतिगदनिहत्याद्यभिभवाः ।
प्रकामं बाधन्तामितरमखिलं तेऽभित इमे
प्रणामास्ते सन्तु प्रविरचय मत्काङ्क्षितमिदम् ॥ १९ ॥

ஶிவாக்யே த்வத்ஸ்ரோதஸ்ததிஷு விஹ்ருதிம் பாதிஷத மா
மமாஶக்த்யாலஸ்யாரதிகதநிஹத்யாத்யபிபவா: |
ப்ரகாமம் பாதந்தாமிதரமகிலம் தேऽபித இமே
ப்ரணாமாஸ்தே ஸந்து ப்ரவிரசய மத்காங்க்ஷிதமிதம் ॥ 19 ॥

हे शिव-आख्ये ஏ சிவநாமமே! अशक्ति-आलस्य-अरति-गद-निहति-आदि-अभिभवाः வலிவின்மை, சோம்பல், ஒன்றிலும் ருசியற்றிருப்பது, பிணி, துயரம் முதலிய இடையூறுகள் त्वत्-स्रोतस्-ततिषु உன் உச்சாரண வெள்ளத்தில் मम என்னுடைய विहृतिम् விளையாட்டை मा बाधिषत கெடுக்கவேண்டாம்; त इमे அந்த இடையூறுகளான இவைகள் अभितः நாலாபக்கங்களிலும் इतरम् மற்ற अखिलम् எல்லாவற்றையும் प्रकामम् बाधन्ताम् நன்றாய்த் தொலைக்கட்டும்; ते உனக்கு प्रणामाः என் வணக்கங்கள் सन्तु இருக்கட்டும்; इदम् இந்த मत्-काङ्क्षितम् என் விருப்பத்தை प्रविरचय செய்து கொடு.

மனிதஉடலும் நிலைமையும் எப்பொழுதும் பிணி, துயரம் முதலிய துன்பங்களுக்கு ஆளானவை; இவையின்றி மனிதன்

முழு வலிமையோடு இருந்து செய்யக்கூடியகாலம் ஸ்வல்பமே மனத்தை தியானத்தில் நிலைநிறுத்தியோ, உடலால் உழைத்துப் பூஜை, ஆலய தர்சனம் முதலியவற்றைச் செய்தோ சிவ வழிபாடு முடியாதபடி இருக்கும் காலங்களிலும் படுத்த படுக்கையிலும் கிடந்த கிடைக்கையிலும்கூட சிவநாமாவை ஜபிப்பது ஸுலபம்; பேசுவதற்கு, அதிலும் 'சிவ' என்று மிருதுவான ஈரெழுத்துகளைச் சொல்லுவதற்கு, தளர்ந்த உடம்பானால் என்ன? சோம்பலிலும் இது செய்யக்கூடிய எளிய விஷயம்; பிணி முதலியவற்றால் என் மற்ற வீண் தொழில்கள் நன்றாய்த் தடைப்பட்டே போகட்டும்; அவ்வளவுக்கவ்வளவு சிவநாம ஜபத்திற்காக நான் லாபமே அடைந்தேனென வைத்துக்கொள்ளுகிறேன்.

19. O Name of Siva! Weakness, laziness, aversion, illness, dejection, let not such overpowering conditions obstruct my sport in the waves of your recitation; let these, by all means, impede everything else all around; my salutations to you, carry out this wish of mine!

किमन्यन्मन्यन्ते जगति न तृणायापि कतिचि-
त्पदं मातः शातक्रतवमपि वैरिञ्चमपि वा।
प्रधावन्ति त्यक्त्वा दहनमिव तत्प्रत्युत मनो-
भवारातेराख्ये त्वदमृतरसास्वादरसिकाः ॥ २० ॥

கிமன்யந் மந்யந்தே ஜகதி ந த்ருணாயாபி கதிசித்
பதம் மாத: ஶாதக்ரதவமபி வைரிஞ்சமபி வா |
ப்ரதாவந்தி த்யக்த்வா தஹநமிவ தத்ப்ரத்யுத மநோ-
பவாராதேராக்யே த்வதம்ருதரஸாஸ்வாதரஸிகா: ॥ 20 ॥

हे मातः मनो-भव-अरातेः आख्ये - ஏ தாயே சிவநாமாவே! किम् अन्यत् வேறென்ன சொல்லவேண்டும்? त्वद्-अमृत-रस-आस्वाद-रसिकाः உன் அம்ருத ரஸத்தை அநுபவிப்பதில் ருசி

கொண்ட **कतिचित्** சிலர் **जगति** ப்ரபஞ்சத்தில் **शातक्रतवं पदम् अपि** இந்த்ரபதவியையும் **वैरिञ्चं (पदम्)अपि वा** பிரம்ம பதவியையும்கூட **तृणाय अपि** துரும்புக்குக்கூட **न मन्यन्ते** மதிப்பதில்லை; **प्रत्युत** அதுமட்டுமல்லாமல் **तत्** அந்த பதவியை **दहनम् इव** நெருப்பைப்போல **त्यक्त्वा** விட்டு **प्रधावन्ति**-ஓடுகிறார்கள்.

சிவநாமாவின் மூலம் சிவப்ரேமையின் ரஸத்தை உணர்ந்த ரஸிகர்கள் இந்த்ரலோக ஸுகத்தையோ ப்ரம்ம லோக ஸுகத்தையோ பெரிதெனக் கருதமாட்டார்கள்; அவைகளெல்லாம் ஸாதிசயமும், ஸாந்தமுமானவை; அதாவது மனிதரின் ஸுகத்தைவிட சற்று உயர்ந்தது தேவ ஸுகம், அதைவிட சற்று உயர்ந்தது ப்ரம்மஸுகம், என்று தனக்குமேல் பெரியதாய் ஒன்றையுடைய ஸுகங்களே; அந்தம், முடிவும், உள்ளவை; சிவானுபவஸுகமோ அதை விஞ்சியதொன்று மில்லாதது, அதற்கு இறுதியு மில்லை; புண்ணிய க்ர்மாக்கள் செய்து நாம் அடைந்து சற்று அனுபவித்தபிறகு இந்தத் தேவாதிலோகங்களிலிருந்து மறுபடியும் விழவேண்டும்; இப்படி முடிவில் துக்ககரமாய் முடிவன இந்தச் சில்லரை இன்பங்கள்; இந்தக் கீழ்பட்ட ஸுகங்களின் மற்றொரு இயல்பு என்னவெனில் இவற்றை அனுபவிக்க அனுபவிக்க இவற்றின் தாகம் அதிகரிக்குமே யொழியத் தீராது.

**न जातु कामः कामानाम् उपभोगेन शाम्यति ।**
**हविषा कृष्णवर्त्मेव भूय एवोपचीयते ॥**

ஆகையால் இவற்றையும் துக்ககோடியிலேயே சேர்த்துத் தீயதென விலக்குவர் விவேகிகள்.

20. What more (need be said), O Name of Siva Some who have known the taste of the nectar of your recitation do not, in this universe, care even a straw for

the position of Indra (the lord of the heavens) or Brahma (the creator); on the other hand, they flee leaving them even as fire.

दिवं क्षोणीं क्षोणीं दिवमपि निरिन्द्रं जगदिदं
तथान्येन्द्रं वीतद्रुहिणमपि वान्यद्रुहिणकम् ।
प्रगल्भन्ते कर्तुं प्रसवविशिखद्रोग्धुरभिधे
प्रपन्नास्त्वां शान्त्यापि तु सहजयोदासत इमे ॥ २१ ॥

*திவம் க்ஷோணீம் க்ஷோணீம் திவமபி நிரிந்த்ரம் ஜகதிதம்*
*ததாந்யேந்த்ரம் வீதத்ருஹிணமபி வாந்யத்ருஹிணகம் |*
*ப்ரகல்பந்தே கர்தும் ப்ரஸவவிஶிகத்ரோக்துரபிதே*
*ப்ரபந்நாஸ்த்வாம் ஶாந்த்யாபி து ஸஹஜயோதாஸத இமே ||*

**हे प्रसव-विशिख-द्रोग्धुः अभिधे** ஏ சிவநாமாவே! **त्वाम्** உன்னை **प्रपन्नाः** கதியாக அடைந்தவர்கள் **दिवम्**-ஸ்வர்க்கத்தை **क्षोणीम्** பூமியாகவும் **क्षोणीम् अपि** பூமியையும் **दिवम्** ஸ்வர்கமாகவும் **इदं जगत्** இந்த-ப்ரபஞ்சத்தை **निरिन्द्रम्** இந்திரன் அற்றதாகவாவது **तथा** அப்படியே **अन्य-इन्द्रम्** வேறொரு இந்திரனைக் கொண்டதாகவாவது **वीतद्रुहिणम्** அகற்றப்பட்டபிரம்மனோடு கூடியதாகவாவது **अपि वा** அல்லது **अन्यद्रुहिणकम्** மற்றொரு பிரம்மனைக் கொண்டதாகவாவது **कर्तुम्** செய்ய **प्रगल्भन्ते**-சக்தர்களாகிறார்கள். **अपि तु** ஆனால் **सहजया** இயற்கையான **शान्त्या** அமைதியால் **इमे** இந்த உன் பக்தர்கள் **उदासते** அலக்ஷ்யமாயிருக்கிறார்கள்.

நாமபஜனம்செய்து ஸித்திபெற்றவர்களுக்கு தைவ சக்தியுண்டாகி எதையும் ஸ்ருஷ்டிசெய்யவோ ஸம்ஹாரம் செய்யவோ முடியுமானாலும், அவர்களுக்கு இவ் வதிசயங்களைக் கையாளுவது குறைவாய்த்தோன்றும்; அவர்களுக்கு அமைதி யொன்றே பெரிது; வேறொன்றையும் அவர் பொருட்படுத்துவதில்லை.

21. O Name of Siva! Your devotees are capable of making Earth into Heaven and Heaven into Earth, and of making the Universe Indra-less and Brahma-less or have a new Indra and a new Brahma; but in their innate quietude, they are indifferent.

**घनाः केऽपीशाख्ये त्वदमृतरसासारविसरै-**
**जगत्कल्युद्दामज्वलदनलशान्त्या शिशिरताम् ।**
**नयन्तस्तन्वन्तः समुचितफलस्याप्युपचितिं**
**क्षमाभूषा भान्ति क्षपितहरिदुद्वेलतिमिराः ॥ २२ ॥**

*கனா: கேபீஶாக்யே த்வதம்ருதரஸாஸாரவிஸரை:*
*ஜகத்கல்யுத்தாமஜ்வலதநலஶாந்த்யா ஶிஶிரதாம் |*
*நயந்தஸ்தந்வந்த: ஸமுசிதபலஸ்யாப்யுபசிதிம்*
*க்ஷமாபூஷா பாந்தி க்ஷபிதஹரிதுத்வேலதிமிரா: ‖ 22*

**हे ईश-आख्ये** ஏ சிவநாமாவே! **त्वद्-अमृत-रस-आसार-विसरैः**-உன்னுடைய அம்ருதரஸத்தினுடைய பெருமழையால் **कलि-उद्दाम-ज्वलद्-अनल-शान्त्या** கலியாகிற பெரிய கொழுந்துவிட்டெரியும் தீயை அணைப்பதால் **जगत्** உலகை **शिशिरताम् नयन्तः** குளிரச்செய்வதாயும் **समुचित-फलस्य अपि** தக்க பலத்தினுடைய **उपचितिम्** விருத்தியை **तन्वन्तः** செய்வதாயும் **क्षपित-हरिद्-उद्वेल-तिमिराः** போக்கப்பட்ட திக்குக்களுடைய கும்மிருட்டுக்களோடு கூடியவையும் **क्षमा-भूषाः** பூமிக்கு அலங்காரமாயும் உள்ள (பொறுமையை அணியாகக் கொண்ட) **केऽपि घनाः** (உன் பக்தர்களான) அத்புத மேகங்கள் **भान्ति** நன்கு விளங்குகின்றன.

இந்தச் சுலோகத்தில் சிவநாம பக்தர்களை மேகங்கள் என வர்ணிக்கிறார் கவி. இந்தப் பக்தமேகங்கள் பெய்வது நாமரஸம் என்ற மழை; இம் மழையால் கலி வெப்பம் கொண்ட மாநிலம் குளிர்ச்சி யடைகிறது; சிவநாமரஸம்

பாய்ந்த நிலத்தில் தக்க சிவஸாயுஜ்யாதி பலம் என்ற பயிர் செழிக்கிறது ; ஸாதாரண மேகங்கள் கூடினால் திக்குக்கள் இருள் மூடிப்போகும் ; இந்தச் சிவநாம பக்தமேகங்கள் கூடினாலோ அஞ்ஞானம் என்ற இருள்மூட்டம் அகலும் என்று வ்யதிரேகம்; மேகோதயத்தால் எப்படி அழகு ஏற்படுகிறதோ அதுபோல் இந்தப் பக்தர்கள் தோன்றுவதால் உலகிற்கே அழகு ஏற்படுகிறது. 'க்ஷமாபூஷாः' என்ற பதத்தில் பொறுமையையே அணியாக உடையவர் பக்தர்கள் என்ற சிலேஷையையும் வைத்துக்கொள்ளலாம். சிவநாம ஜபத்தால் தாபத்ரயநிவிருத்தியும் அவித்யாநிவிருத்தியும் சிவபதப் ப்ராப்தியும் சொல்லப்பட்டன.

22. O Name of Siva! Some indescribable clouds (*viz.*, your devotees) shine forth as ornaments to the world, cooling the earth by putting down the blazing and uncontrollable fire of Kali through the downpour of your ambrosial bliss, making for the plentiful growth of the proper fruit (s) and destroying the dense darkness in the quarters.

शिवाख्ये त्वद्वर्णद्वितयपरमाद्वैतरसिकाः
प्रियप्राप्तौ शर्माप्रियसमुपलम्भे शुचमपि ।
भयं वा कस्माच्चिद्भयजनकतां कस्य च तथा
न विन्दन्ते ब्रह्माद्यसुलभपरानन्दभरिताः ॥ २३ ॥

ஶிவாக்யே த்வத்வர்ணத்விதய பரமாத்வைதரஸிகா:
ப்ரியப்ராப்தௌ ஶர்மாப்ரியஸமுபலம்பே ஶுசமபி |
பயம் வா கஸ்மாச்சித் பயஜநகதாம் கஸ்ய ச ததா
ந விந்தந்தே ப்ரம்மாத்யஸுலபபராநந்தபரிதா: || 23 ||

हे शिव-आख्ये ஏ சிவநாமாவே! त्वद् - वर्ण - द्वितय - परम - अद्वैत - रसिकाः முற்றும் இரண்டாவதில்லாத உன் இரண்டு

எழுத்தாகிற ஏகதத்துவத்தில் ருசி கொண்டவர்கள் ब्रह्म-आदि-असुलभ-पर-आनन्द-भरिताः பிரம்மன் முதலியோருக்கும் கிட்டுதற்கும் அரிதான பேரானந்தத்தால் நிறைந்தவர்களாக प्रिय-प्राप्तौ வேண்டியது கிட்டுவதில் शर्म களிப்பையோ अप्रिय-समुपलम्भे வேண்டாதது கிட்டுவதில் शुचम् अपि துயரத்தையோ कस्माच्चित् ஒருவரிடத்திலிருந்து भयं वा அச்சத்தையோ तथा அதேமாதிரி कस्य ஒருவருக்கும் भय-जनकतां च அச்சம் உண்டுபண்ணும் தன்மையையோ न विन्दन्ते அடைகிறதில்லை.

'சிவ' என்ற இரண்டு எழுத்துக்கள் இரண்டற்ற ஒன்றான தத்வம் என்று ஒரு சமத்காரத்துடன் கவி தொடங்குகிறார். வேறொரு ஈடுபாடின்றி இந்தச் சிவநாமம் ஒன்றிலேயே லயித்தவருக்கு ஏற்படும் பேரின்பம் மேலே 21-வது ச்லோகத்தில் சொன்னபடி பிரம்மாதிகளுக்கும் கிட்டாதது; இந்தச் சிவநாம அநுஸந்தானம் என்ற யோகத்தில் நிலைபெற்றவர் இவ்வுலகில் அடையவேண்டியது வேறொன்றுமில்லாமல் க்ருதக்ருத்யர் ஆவதால் அவர்கள் ப்ரியம்-அப்ரியம் என்ற த்வந்தத்வத்தைக் கடக்கிறார்கள்; வேண்டியது வந்தாலும் களிப்பில்லை; வேண்டாதது வந்தாலும் வருத்தமில்லை; அவர் எதிர்பார்ப்பது ஒன்றுமில்லாததால் ஒரிடத்திருந்தும் அவருக்குப் பயமில்லை; இவரிடத்திலிருந்தும் ஒருவருக்கும் பயமில்லை; எதற்காக எவரை இவர் துன்புறுத்தவேண்டும்?

को हि स्यादीदृशो लोके यादृशस्त्वमरिन्दम ।
न त्वां प्रव्यथयेद्दुःखं प्रीतिर्वा न प्रहर्षयेत् ॥

रामायण. अयोध्या. 106. 2.

दुःखेष्वनुद्विग्नमनाः सुखेषु विगतस्पृहः ।
वीतरागभयक्रोधः स्थितधीः मुनिरुच्यते ॥

भगवद्गीता. 2. 56.

यस्सर्वत्रानभिस्नेहः तत्तत्प्राप्य शुभाशुभम् ।
नाभिनन्दति न द्वेष्टि तस्य प्रज्ञा प्रतिष्ठिता ॥ भगवद्गीता. 2. 57.

न प्रहृष्येत्प्रियं प्राप्य नोद्विजेत्प्राप्य चाप्रियम् ।
स्थिरबुद्धिरसंमूढो ब्रह्मविद्ब्रह्मणि स्थितः ॥ भगवद्गीता. 5. 20.

यस्माद् नोद्विजते लोकः लोकान्नोद्विजते च यः ।
हर्षामर्षभयोद्वेगैः मुक्तो यः स च मे प्रियः ॥ भगवद्गीता. 12. 15.

तुल्यप्रियाप्रियो धीरः । भगवद्गीता. 14. 24.
नोद्विजेत जनाद्धीरो जनं चोद्वेजयेन्न तु ।
भागवत. 11. 18. 31.

द्वितीयाद्वै भयं भवति बृ. उ. 1. 4. 2.
अभयं वै जनक प्राप्तोऽसि बृ. उ. 4. 2. 4

என்ற பல சான்றுகளையும் இங்கு ஆராய்ந்து கொள்ளலாம்.

23. O Name of Siva! Those that delight in your two letters (Si-va) as the sole absolute truth and have (thereby) become laden with that supreme bliss which is hard of access even to gods like Brahma, do not have either pleasure in getting the desirable or pain in getting the undesirable; neither do they have fear from anybody nor do they become the source of fear for anyone.

जनो धत्ते यो मां जगति रसनायां श्रवसि वा
दिगीशा धाता वा दिशमपि तदीयां परुषया ।
दृशा जातु द्रष्टुं किमलमिति कामध्रुगभिधे
त्वदीयप्रस्थानध्वनिभरमिषाद्गर्जसि मुहुः ॥ २४ ॥

ஜநோ யத்தே யோ மாம் ஜகதி ரஸநாயாம் ஶ்ரவஸி வா
திகீஶா தாதா வா திஶமபி ததீயாம் பருஷயா ।
த்ருஶா ஜாது த்ரஷ்டும் கிமலமிதி காமதுக்ரபிதே
த்வதீயப்ரஸ்தாநத்வநிபரமிஷாத் கர்ஜஸி முஹு: ॥ 24

हे कामधुग्-अभिधे ஏ சிவநாமாவே! "जगति உலகில் यः जनः எவன் माम् என்னை रसनायाम् நாவிலாவது श्रवसि वा செவியிலாவது धत्ते தாங்குகிறுனே तदीयाम् அவனுடைய தான दिशम् अपि திக்கைக்கூட दिग्-ईशाः திக்பாலகர்களான இந்திராதிகளோ धाता वा பிரம்மாவோ परुषया கடுமையான दृशा பார்வையால் द्रष्टुम् பார்ப்பதற்கு अलं किम् ஸமர்த்தர்களோ?" इति என்று त्वदीय-प्रस्थान-ध्वनि-भर-मिषात् உன்னுடைய பஜனையின் பேரொலியின் வியாஜமாய் मुहुः அடிக்கடி गर्जसि நீ கர்ஜித்துக் கொண்டிருக்கிறுய்.

நாம கோஷம் எவ்விடத்தில் நிறைந்து நிற்கிறதோ அந்தத் திக்கிலேயே ஒருவிதமான ஆதிதைவிகம் முதலிய பீடைகள் இரா.

கடும் தவம் புரிபவர்கள் இந்திரலோகத்தையும் பிரம்ம லோகத்தையும் ஜயித்துவிடுவர் என்று பயந்தும் கோபித்தும் இந்திராதிகள் தவத்தைக் கெடுக்க ஆரம்பிப்பர்; நாமபஜனையென்ற தவத்திலீடுபட்டவர்களிடம் இவ்விந்திராதிகளின் விஷமம் செல்லாது; அவர்களும் இந்திராதி லோகங்களைத் துச்சமாயெண்ணினவர்.

24. "Are Indra and other lords of the quarters or Brahma capable of (even) casting a harsh look in the direction of one in this world who holds me on his tongue or in his ear"—thus do you, O Name of Siva, often roar under the guise of the great sounds of your recitals.

निबन्धारस्तेऽमी मम नियतमात्मीयरसना-
भुवीति त्वं त्रासादिव कुसुमचापध्रुगभिधे ।
तृणं मेरुं मेरुं तृणमिति विलासव्यवहृती-
रपि द्रागेतेषामयि सफलयन्ती विहरसे ॥ २५ ॥

நிபந்தாரஸ்தேऽமீ மம நியதமாத்மீயரஸநா-
புவீதி த்வம் த்ராஸாதிவ குஸுமசாபத்ருகபிதே |
த்ருணம் மேரும் மேரும் த்ருணமிதி விலாஸவ்யவஹ்ருதீ-
ரப்யேதேஷாம் ஸபலயந்தீ விஹரஸே ॥ 25 ॥

**हे कुसुमचापध्रुग्-अभिधे** ஏ சிவநாமாவே! '**ते अमी** அந்தப் பக்தர்களான இவர்கள் **आत्मीय-रसना-भुवि** தன் நாக்கு ப்ர தேசத்தில் **नियतम्** திண்ணமாய் **मम निबन्धारः** என்னைக் கட்டிவிடுவார்கள்' **इति** என்று **त्रासाद् इव** பயத்தாற்போல **त्वम्** நீ '**तृणम्** துரும்பை **मेरुम्** மேருமலையாகவும், **मेरुम्** மேரு பர்வதத்தை **तृणम्** துரும்பாகவும் (செய்வோம்)', **इति** என்று **एतेषाम्** இந்தப் பக்தர்களுடைய **विलास-व्यवहृतीः अपि** விளை யாட்டுப் பேச்சுக்களைக் கூட **सफलयन्ती** பயன்படச்செய்து கொடுப்பவளாய் **विहरसे** விளையாடுகிறாய்.

என்னை இவர்கள் தம் நாவில் கட்டி விடுவர் என்ற அச்சத்தினாற்போல் சிவனுடைய ஆக்யை தன் பக்தருடைய எந்தப் பேச்சையும் கேட்டு அதன்படி செய்து வைக்கிறாள்; அவ்வளவு தூரம் பக்தருக்கு அடிமையாகிறாள்; யாதொன் றும் வேண்டாமென்றும் வேண்டுமானால் எதையும் ஸம்பா தித்துக் கொள்வோம் என்றிருக்கும் சிவநாம பக்தர்கள் புல்லையும் பொன்மலையும் ஒன்றாய்க் கருதும் லீலை இங்குச் சொல்லப்படுகிறது.

25. "These devotees will certainly bind me to their tongue"—as if in fear of this, O Name of Siva! You sport rendering fruitful even their playful remarks that they will make a blade of grass into the Golden Mountain and the Golden Mountain into a blade of grass.

परित्यज्याशेषं जननि भवतीमेव भजतां
त्वमेवेशानाख्ये यदभिलषितं दैवतवरम् ।
तदाकृत्या दृष्टिं श्रुतिमपि तदुक्त्या सफलतां
नयन्ती धत्से नन्ववधिविधुरां निर्वृतिधुराम् ॥ २६ ॥

பரித்யஜ்யாசேஷம் ஜநநி ஹவதீமேவ ஹஜதாம்
த்வமேவேஶாநாக்யே யதபிலஷிதம் தைவதவரம் |
த்ருஶம் தத்தந்மூர்த்யா ஶ்ருதிமபி தது-க்த்யா ஸபலதாம்
நயந்தீ யத்ஸே நந்வவதிவிதுராம் நிர்வ்ருதிதுராம் || 26

**हे जननि ईशान-आख्ये** ஏ தாயே சிவநாமாவே! **अशेषम्** அறவே எல்லாவற்றையும் **परित्यज्य** விட்டுவிட்டு **भवतीम् एव** உன்னைமட்டுமே **भजताम्** வழிபடுகிறவர்களுக்கு **यद् दैवत-वरम्** எந்த சிறந்த தேவதை **अभिलषितम्** விரும்பப்பட்டதோ **तत्-तन्-मूर्त्या** அந்தந்த தேவதைகளின் உருவத்தால் **दृशम्** அந்த பக்தர்களின் கண்ணையும் **तद्-उक्त्या** அந்தந்த தேவதைகளுக்குரிய பேச்சால் **श्रुतिम् अपि** அவர்களுடைய காதையும் **स-फलताम् नयन्ती** பயன்படச் செய்து **अवधि-विधुराम्** எல்லையற்ற **निर्वृति-धुराम्** பேரின்பத்தை **धत्से ननु** பயக்கின்றாய் அல்லவா?

மற்ற எந்த ஸங்கங்களையும் வழிபாடுகளையும் தைவங்களையும் நாடாது சிவநாமா ஒன்றையே கைப்பிடித்து வரும் ஏக பக்தருக்கு மற்றெல்லா தேவதைகளும் ப்ரத்யக்ஷமே; எந்தத் தைவத்தால் எந்தக் கார்யம் ஆகவேண்டுமானாலும் சிவநாமாவின் மஹிமையால் அந்தத் தைவம் ப்ரத்யக்ஷமாகி, கார்யத்தை நடத்திவைக்கும்; அப்படிப் பல தெய்வங்கள் ரூபமாய்த் தோன்றி பலவிதமாய் பேசுவதும் இந்தச் சிவ தத்வம் ஒன்றே.

26. O Mother, Siva's Name! Whichever great deity is desired by those who worship you only, abandoning everything completely, do you not yourself gratify the eyes and ears (of those devotees) with the forms and talks of those respective deities, and create (for them) the great bliss that has no end?

श्रुता ये स्वर्धेनुत्रिदशतरुमुख्यास्त्वदनुगा-
नुगानां भ्रूवल्लीवलनवशगास्ते जगति तान् ।
तवौदार्ये मातर्धरणिधरजानेतुरभिधे
कथंकारं तुल्यान्कथयतु सलज्जो यदि जनः ॥ २७ ॥

*ஶ்ருதா யே ஸ்வர்தேநுத்ரிதஶதருமுக்யாஸ்த்வதநுகா-*
*நுகாநாம் ப்ரூவல்லீவலநவஶகாஸ்தே ஜகதி தான் |*
*தவௌதார்யே மாதர்தரணிதரஜாநேதுரபிதே*
*கதங்காரம் துல்யான் கதயது ஸலஜ்ஜோ யதி ஜந: || 27 ||*

**हे मातः धरणिधरजानेतुः अभिधे** ஏ தாயே சிவநாமாவே! **जगति** உலகில் **ये** எந்த **स्वर्धेनु-त्रिदशतरु-मुख्याः** காமதேனு, கல்பகவிருக்ஷம் முதலியவை **श्रुताः** (ப்ரஸித்தியுள்ளவையாக) கேள்விப்படுகின்றனவோ **ते** அவைகள் **त्वद्-अनुग-अनुगानाम्** உன் அடிமைகளுக்கும் அடிமைகளானவர்களுடைய **भ्रूवल्ली-वलन-वशगाः** புருவ அசைவுக்கு அடிமைகள்; **जनः** (ஒரு) மனிதன் **स-लज्जो यदि** வெட்கமுள்ளவனாயிருந்தால் **कथङ्कारम्** எவ்வகையில் **औदार्ये** உதாரத்தில் **तान्** அவைகளை **तव** உனக்கு **तुल्यान्** ஒப்பானவைகளாக **कथयतु** சொல்லக்கூடும்?

விரும்பியதைக் கொடுக்கும் காமதேனு கல்பக வ்ருக்ஷம் முதலியவற்றைவிடப் பெரிய வள்ளல் உன் நாமா.

27. O Mother, Siva's Name! If man has yet the sense of shame, how could he mention as equal in the matter of your generosity those well-known objects in this universe like the divine cow and tree which are at the beck and call of the motion of the eye-brow of your servants' servants?

विधातुं संत्रातुं विलयमपि नेतुं जगदलं
भवन्तोऽपीशाख्ये प्रशमसमुपेतास्त्वदनुगाः ।
उपेक्ष्या लोकस्यावमतसकलाः सन्ति जगति
त्वयैवैके तुष्टास्तव खलु त एते रसविदः ॥ २८ ॥

விதாதும் ஸந்த்ராதும் விலயமபி நேதும் ஜகதலம்
ஹவந்தோऽபீமாக்யே ப்ரமமஸமுபேதாஸ்த்வதநுகா: |
உபேக்ஷ்யா லோகஸ்யாவமதஸகலா: ஸந்தி ஜகதி
த்வயைவைகே துஷ்டாஸ்தவ வலு த ஏதே ரஸவிதः ॥ 28

हे ईश-आख्ये ஏ சிவநாமாவே! जगत् உலகை विधातुम् ஆக்குவதற்கும் सन्त्रातुम् காப்பதற்கும் विलयं नेतुम् अपि அழிப்பதற்கும் अलं भवन्तोऽपि ஸமர்த்தர்களாயிருந்தும் त्वद्-अनुगाः உன் தொண்டர்கள் प्रशम-समुपेताः அமைதியையடைந்தவர்களாயும் अवमत-सकलाः ஒன்றையுமே பொருட்படுத்தாதவர்களாயுமிருந்துகொண்டு लोकस्य உலகிற்கு उपेक्ष्याः सन्ति அலக்ஷ்யம் செய்யப்படக்கூடியவர்களாக இருக்கிறார்கள்; जगति உலகில் एते இந்த சிலர் त्वया एव உன்னால் மாத்திரம் तुष्टाः திருப்தியடைகிறவர்கள்; त एते அந்த சிலர்கள் तव रस-विदः खलु உன் சுவையைக் கண்டவர்களல்லவா?

நாம ஜபஞ்செய்து ஸித்தி யடைந்தவர்களுக்கு ஆக்கவும் காக்கவும் அழிக்கவும் ஆற்றலிருந்தும் அவர்களுக்கு ஆகவேண்டியதொன்றில்லாததால் அமைதியிலேயே அமிழ்ந்திருப்பார்கள்; யாரிடம் கௌரவம் பெறத் தம் சக்தியை அவர் காட்டவேண்டும்? இந்தச் சில்லரை அதிசயங்களைக் காட்டும் 'செப்படி' வித்தையில் அல்பமான ஆசை அவர்களுக்கு உண்டாகாது; இப்படி நிரீஹர்களாயிருக்குமிவரைப் பாமரலோகம் உதாஸீநம் செய்யும்; அப்படி நன்கு உதாஸீநமே செய்யட்டும்; இவர்களை கவனிப்ப

தாய் நினைத்துக்கொண்டு இவர்களுடைய அமைதியான வாழ்க்கையில் விழுந்து குளறவேண்டாம்; இவர்கள் நாம ரஸத்தின் சுவையை யுணர்ந்து, நாவிற்கு வேறொரு ருசியும் ஏறாமல் உன் நாம ஜபத்திலேயே இன்புற்றிருப்பார்கள்.

28. O Name of Siva! Your devotees, though capable of creating, protecting and destroying the universe, having attained to quietude and repudiated everything, come to be ignored by the people; these few get satisfied with you alone in this world; (for) have these not known your delectation?

शिवाख्ये त्वद्वर्णद्वितयमयि धत्ते श्रितवतां
मुखे धर्मब्रह्मप्रमितिकरसर्वाक्षरगणम् ।
पदे धत्ते वेधःप्रभृतिविभवान्नात्र तु रति-
र्विनैषां त्वद्वर्णद्वितयमिह कोऽयं मधुरिमा ॥ २९ ॥

ஶிவாக்யே த்வத்வர்ணத்விதயமயி தத்தே ஶ்ரிதவதாம்
முகே தர்மப்ரஹ்மப்ரமிதிகரஸர்வாக்ஷரகணம் ।
பதே தத்தே வேத:ப்ரப்ருதி விபவாந்நாத்ர து ரதிர்
விநைஷாம் த்வத்வர்ணத்விதயமிஹ கோऽயம் மதுரிமா ॥

**अयि शिव-आख्ये** ஏ சிவநாமாவே! **त्वद्-वर्ण-द्वितयम्** உன் இரண்டு எழுத்துக்கள் **श्रितवताम्** அவைகளை நாடியவர்களுடைய **मुखे** முகத்தில் **धर्म-ब्रह्म-प्रमिति-कर-सर्व-अक्षर-गणम्** தர்மம் பிரம்மம் இவ்விரண்டின் அறிவை யுண்டுபண்ணும் அக்ஷரங்கள் அனைத்தையும் (வேதம் முழுவதையும்) **धत्ते** இருக்கச் செய்கிறது; **पदे** காலடியில் **वेधः-प्रभृति-विभवान्** பிரம்மன் முதலியோரின் ஐச்வர்யங்களை **धत्ते** வைக்கிறது; **तु** ஆனால் **एषाम्** இந்த உன் பக்தர்களுக்கு **त्वद्-वर्ण-द्वितयं विना** உன்னிரு எழுத்துக்களைவிட்டு **अत्र** இந்தக் கர்மத்திலே பிரம்மத்திலோ (பிரம்மாதி லோகங்களிலோ) **रतिः** இன்பம்

न இல்லை ; इह உன்னிரு எழுத்துக்களில் உள்ள **अयं मधुरिमा** இந்த இனிமை कः என்னதாஹோ ?

சிவநாமாவின் மாதுர்யத்தைச் சுவைத்து அந்த நாமா ஒன்றே தாரகமென நாடியவர்க்கு வேறொன்றிலும் ருசி ஏற்படாது ; கர்ம காண்டத்திலும் ஞான காண்டத்திலும் கொண்டாடப்படுவது சிவநாமாவே ; சிவநாமா விலகியிருப்பின் அவை நிஸ்ஸாரங்களே ; அவற்றிற்கு ருசி கொடுக்கும் ஸத்தும் நீயே ; பரந்த சொற்றொடரில் கலந்து நிற்கும் இந்த நாமாவென்ற ஸத்து (vitamin) 'சிவ' என்ற இரு எழுத்துக்களான மாத்திரையில் (tablet) ஏகக(வ)னமாய் (concentrated) இருக்கிறது ; உண்மை உணர்ந்தவர் இதை நேரில் உட்கொள்வார்கள்.

29. O Name of Siva! Your two letters (Si-va) place on the mouth of those who have resorted to you the entire literature that gives one the knowledge of Karman and Brahman (*i.e.*, the two parts of the Vedas); and at their feet, they place the riches of Brahma and others; but leaving your two letters, these devotees have no pleasure in these (Karma or Brahman); Oh, what is this sweetness that is in you ?

**महेशाख्ये जिह्वाञ्चलकलनमात्रात्तनुभृतां**
**समस्ताघच्छेत्त्रीं सकलसुखदात्रीं च भवतीम् ।**
**अवष्टभ्यैवाहुर्भगवति महाकारुणिकतां**
**शिवस्य त्वां हित्वा कथय कतमो निर्वहतु ताम् ॥ ३० ॥**

*மஹேஶாக்யே ஜிஹ்வாஞ்சலகலநமாத்ராத்தநுப்ருதாம்*
*ஸமஸ்தாகச்சேத்த்ரீம் ஸகலஸுகதாத்ரீம் ச பவதீம் |*
*அவஷ்டப்யைவாஹுர் பகவதி மஹாகாருணிகதாம்*
*ஶிவஸ்ய த்வாம் ஹித்வா கதய கதமோ நிர்வஹது தாம் || 30*

हे भगवति महेश-आख्ये - ஏ தேவி! சிவநாமாவே! जिह्वा-अञ्चल-कलन-मात्रात् நாவின் நுனியில் உன்னைத் தொட்டமாத்திரத்தில் तनुभृताम् ஜீவன்களுடைய समस्त-अघ-च्छेत्रीम् எல்லாப் பாபங்களையும் ஒழிப்பவளாயும் सकल-शुभ-दात्रीम् च எல்லா நன்மைகளையும் வழங்குகிறவளாயுமிருக்கிற भवतीम् உன்னை अवष्टभ्य एव தாங்கலாகக்கொண்டே शिवस्य சிவனுக்கு महाकारुणिकताम् பெரும்கருணையுள்ளவரென்ற தன்மையை आहुः சொல்லுகிறார்கள்; त्वाम् உன்னை हित्वा விட்டு कतमः எவன் தான் ताम् அந்தக் கருணையுள்ளவன் என்ற நிலையை निर्वेढु நிர்வஹிப்பான்? कथय சொல்லு.

சிவனை வழிபட்டு நாம் அடைவது துக்கநாசம், ஸுக ப்ராப்தி இரண்டும்; இவற்றை நமக்குச் சிவன் அருளுமாறு செய்வது சிவனுடைய கருணை; அக்கருணை சிவனுக்குப் பெருகுமாறு செய்வது நாம் 'சிவ' என்று கூப்பிடும் நாமோச்சாரணம்.

30. O Goddess, Name of Siva! It is by depending on you who destroy all sin and extend everything beneficent to those who but merely touch you by the tip of their tongue, that people speak of the great graciousness of Siva; without you, tell me, who could manage to maintain that position (of being the great gracious Being)?

शिवाख्ये स्वाख्यासु त्रिपुरमथनः कैटभरिपु-
स्तदीयान्या मूर्ती रघुपतिरपि त्वां समदधुः ।
अमीष्वाद्यस्यैव प्रभवति भवत्या व्यवहृति-
स्तदीयस्तादृक्षः सुकृतपरिपाको विजयते ॥ ३१ ॥

ஶிவாக்யே ஸ்வாக்யாஸு த்ரிபுரமதந: கைடபரிபு:
ததீயாந்யா மூர்த்தீ ரகுபதிரபி த்வாம் ஸமதது: ।
அமீஷ்வாத்யஸ்யைவ ப்ரபவதி பவத்யா வ்யவஹ்ருதி:
ததீயஸ்தாத்ருக்ஷ: ஸுக்ருதபரிபாகோ விஜயதே ॥ 31 ॥

हे शिव-आख्ये ஏ சிவநாமாவே! त्रिपुरमथनः சிவனும் कैटभरिपुः விஷ்ணுவும் तदीया அந்த விஷ்ணுவினுடையதான अन्या मूर्तिः மற்ெறாரு ரூபமான रघुपतिः अपि-ராமனும் त्वाम् உன்னை स्व-आख्यासु தம் பெயர்களில் समदधुः (ஒன்றாய்) வைத்துக்கொண்டார்கள்; (ஆனால்) अमीषु அவர்களில் आद्यस्य एव முதலில் சொல்லிய சிவனுக்கே भवत्या உன்னால் व्यवहृतिः சொல்லப்படும் தன்மை प्रभवति உரியதாயிருக்கிறது; तादृक्षः அம்மாதிரியதாய் तदीयः அச்சிவனுடைய सुकृत-परिपाकः நற்பயன் विजयते விளங்குகிறது.

விஷ்ணுஸஹஸ்ரநாம ஸ்தோத்திரத்தில் 27-வதும் 600-வதுமான நாமாக்கள் 'சிவ:' என்றிருக்கின்றன; இப்படி ராமஸஹஸ்ர நாம ஸ்தோத்திரத்திலும் 'சிவ' என்ற பெயர் காணப்படலாம்; ஆனாலும் 'சிவ' என்ற மங்களவாசகமான பெயர் சிவன் ஒருவருக்கே உரியது; இம்மூவரில் 'ஆத்யஸ்ய'-முதல்வனுக்கே - என்றபதத்திலுள்ள ச்லேஷையால் சிவனே சிறந்த தெய்வமென்றும் ஏற்படுகிறது.

31. O Name of Siva! Siva, Vishnu and the other form of that Vishnu, Rama, all these placed you among their own names; but of these (three), reference through you is possible only for the first (*viz.* Siva); all glorious indeed is such a fortune of Siva!

अशेषब्रह्माण्डाविरतचरिताशेषदुरिता-
न्यलं ते संतृप्तिं न हि घटयितुं तां घटयितुम् ।
मदीयैरेनोभिर्मदनमथनाख्ये बत यते
ममागः सोढव्यं तदिदमयि तुभ्यं नम इदम् ॥ ३२ ॥

அசேஷப்ரம்மாண்டாவிரதசரிதாசேஷது₃ரிதா-
ந்யலம் தே ஸந்த்ருப்திம் ந ஹி க₄டயிதும் தாம் க₄டயிதும்
மதீ₃யைரேனோபி₄ர்மத₃னமத₂னாக்₂யே ப₃த யதே
மமாக₃: ஸோட₄வ்யம் ததி₃த₃மயி துப்₄யம் நம இத₃ம் ॥ 32 ॥

हे मदनमथन-आख्ये ஏ சிவநாமாவே! अशेष-ब्रह्माण्ड-अविरत-चरित-अशेष-दुरितानि ப்ரபஞ்சம் முழுவதாலும் இடைவிடாது செய்யப்பட்ட எல்லாப் பாபங்களும் ते உனக்கு सन्तृप्तिम् பூர்ணத்ருப்தியை घटयितुम् செய்துவைக்க न अलं हि போதாதல்லவா? ताम् அத்த்ருப்தியை मदीयैः एनोभिः என்னுடைய பாபங்களைக்கொண்டு घटयितुम् செய்ய यते நான் முயலுகிறேன். बत அந்தோ! मम तद् इदम् आगः என்னுடைய அந்த இப்பாபம் सोढव्यम् (உன்னால்) பொறுத்துக்கொள்ளப் படவேண்டும்; तुभ्यम् உனக்கு इदं नमः இந்த(என்) நமஸ்காரம்.

சிவநாமாவின் பெருமை அளவற்றதான சிவனருளைக் கிளப்பி அதன்மூலம் பாபங்களையெல்லாம் அறவே ஒழித்துவிடுவது என்பதே; இப்படிப் பாபங்களை விழுங்கிவிடுவது என்று கிளம்பிய சிவநாமாவின் பசிக்குப் போதுமான பாபங்கள் இம்மூவுலகிலு மில்லை.

नाम्नोऽस्ति यावती शक्तिः पापनिर्हरणे हरेः।
तावत्कर्तुं न शक्नोति पातकं पातकी जनः॥

என்று புராணதிநூல்களில் சொல்லப்படுகிறது. அப்படி இருக்க, 'நான் ஒரு எளியவன், சிவநாமாவிற்கு இருக்கும் பசியை என் பாபங்களை இரையாகக்கொடுத்துத் தணிப்பது என்று முன்வந்த துணிபிற்காக என்னை மன்னிக்கவேண்டும்' என்று கவி வேண்டிக்கொள்ளுகிறார். 'நான் கடும் பாபங்களைக் கணக்கில்லாமல் செய்தவனே; நீயோ உலகனைத்தும் விடாமல் செய்துவந்தால் எவ்வளவு பாபங்கள் குவியுமோ அவ்வளவையும் விழுங்கிவிடுவாய்; அப்படி இருக்க என் பாபங்களைச் சற்றுச் சிற்றுண்டி செய்துவிடு' என்று தாத்பர்யம்.

32. O Name of Siva! All the sins done ceaselessly by the entire Universe are themselves not sufficient to

give you gratification; that gratification I endeavour to give (you) with my sins! alas! salutations be to you! bear with me this sin of mine in trying to do so.

अये जिह्वापीठे जननि समवस्थाप्य भवतीं
ममाघौघं तुभ्यं मयि समुपहर्तुं व्यवसिते ।
तव स्मृत्यैवासौ बत कबलितः किंनु करवै
क्षमस्वेमं मन्तुं भगवति पुरां भेत्तुरभिधे ॥ ३३ ॥

அயே ஜிஹ்வாபீடே ஜநநி ஸமவஸ்தாப்ய ஹவதீம்
மமாவௌவம் துஹ்யம் மயி ஸமுபஹர்தும் வ்யவஸிதே |
தவ ஸ்ம்ருத்யைவாஸௌ ஹத கஹளிதஃ கிம் நு கரவை
க்ஷமஸ்வேமம் மந்தும் ஹஹவதி புராம் ஹேத்துரஹியே || 33 ||

**अये पुरां भेत्तुः अभिधे** *ஏ சிவநாமாவே!* **जननि** *தாயே!* **भवतीम्** *உன்னை* **जिह्वा-पीठे** *நாவென்ற ஆஸனத்தில்* **समवस्थाप्य** *உட்கார வைத்து* **मम** *என்னுடைய* **अघ-ओघम्** *பாபக் குவியலை* **तुभ्यम्** *உனக்கு* **समुपहर्तुम्** *அர்ப்பணம் செய்ய* **मयि व्यवसिते सति** *நான் நிச்சயித்ததும்* **बत** *ஆச்சரியம்!* **तव** *உன்னுடைய* **स्मृत्या एव** *நினைவிலேயே* **असौ** *அந்தப் பாபக் குவியல்* **कबलितः** *விழுங்கப்பட்டு விட்டது;* **किं नु करवै** *என் செய்வேன்?* **हे भगवति** *ஏ தேவி!* **इमं मन्तुं** *இந்தப் பாபத்தை* **क्षमस्व** *பொறுத்துக்கொள்.*

*சிவநாம உச்சாரணம் செய்ய நினைத்த மாத்திரத்தில் எல்லாப் பாபங்களும் நசித்துப்போம்.*

33. O Mother, Name of Siva! when I made up my mind to establish you on the seat of my tongue and offer you the heap of my sins, lo! by the very thought of you has all that heap been devoured; what shall I do? O Goddess! forgive me this failing of mine.

निवेशो जिह्वायां निरवधिकपुण्योच्चयजुषां
निसर्गप्राप्तस्ते निटिलनयनाख्ये भवतु तत् ।
निवेशं जिह्वायां मम यदि न धत्से जननि ते
नितान्तं पापिष्ठोऽवित इति न सिद्ध्येन्ननु यशः ॥ ३४ ॥

*நிவேஶோ ஜிஹ்வாயாம் நிரவதிகபுண்யோச்சயஜுஷாம்*
*நிஸர்கப்ராப்தஸ்தே நிடிலநயநாக்யே ஭வது தத் |*
*நிவேஶம் ஜிஹ்வாயாம் மம யதி ந தத்ஸே ஜநநி தே*
*நிதாந்தம் பாபிஷ்டோऽவித இதி ந ஸித்த்யேந் நநு யஶஃ || 34 ||*

हे निटिलनयन-आख्ये *ஏ சிவநாமாவே!* निरवधिक-पुण्य-उच्चय-जुषाम् *அளவற்ற புண்யச் சேர்க்கையுடையவர்களுடைய* जिह्वायाम् *நாவில்* निवेशः *இருப்பு* तव *உனக்கு* निसर्ग-प्राप्तः *தானக ஏற்பட்டது;* तद् भवतु *அது இருக்கட்டும்;* हे जननि *ஏ தாயே!* मम जिह्वायाम् *என் நாவில்* निवेशम् न धत्से यदि *வாஸத்தை நீ வைத்துக் கொள்ளாவிடில்* नितान्तं पापिष्ठः *மிகவும் பெரிய பாபி (ஒருவன்)* अवितः *காக்கப்பட்டான்* इति *என்ற* यशः *புகழ்* ते *உனக்கு* न सिद्ध्येत् ननु *கைகூடாதல்லவா?*

*புண்யசாலிகளை அவர்களின் புண்ணிய கர்மாக்கள் காப்பாற்றி விடுகின்றன; அவர்கள் உன்னை ஓதி வருவதும் அவர்களுடைய இயற்கை; என் போன்ற மஹா பாபியின் நாவில் சற்றுவந்து நீ வந்து காப்பாற்றினல் வழியில்லாப் பாதகி யொருவனைக் காப்பாற்றிய கீர்த்தி ஏற்படும்; அப்படிப்பட்டவனையும் நீதான் காப்பாற்றமுடியும்.*

34. O Name of Siva! Residence in the tongue of those who have accumulated endless good happens to you in natural course; let that be; O Mother! if you do not dwell on my tongue, the fame that the greatest sinner has been saved would not accrue to you!

शिवाख्ये मातस्त्वं ननु शशिवदित्यादि फणिति-
च्छलादप्याविश्य श्रमभरमकस्मात्तनुभृताम् ।
हरस्येवं कर्तुं हरिरथ हरो वा स किमलं
तदीयं माहात्म्यान्तरमपलपामस्तु न वयम् ॥ ३५ ॥

ஶிவாக்யே மாதஸ்த்வம் நநு ஶஶிவதித்யாதி ஃபணிதி-
ச்சலாதப்யாவிஶ்ய ஶ்ரமபரமகஸ்மாத்தநுப்ருதாம் |
ஹரஸ்யேவம் கர்த்தும் ஹரிரத ஹரோ வா ஸ கிமலம்
ததீயம் மாஹாத்ம்யாந்தரமபலபாமஸ்து ந வயம் || 35 ||

**हे मातः शिव-आख्ये** ஏ தாயே சிவ நாமாவே! **त्वम्** நீ **शशिवद्-इत्यादि-फणिति-छलाद् अपि** சசிவத்-சந்திரனைப்போல்-என்பது முதலான சொற்களின் வ்யாஜத்தாலேயே **आविश्य** (நாவின்) உட்புகுந்து **अकस्मात्** காரணமின்றி **तनूभृताम्** மக்களின் **श्रमभरम्** துன்பத்தின் பளுவை **हरसि ननु** போக்குகிறாய் அல்லவா? **एवं कर्तुम्** இப்படிச் செய்வதற்கு **हरिः** விஷ்ணுவோ **अथ स हरो वा** இல்லை அந்தச் சிவனேயோ **अलं किम्** ஸமர்த்தரா? **तदीयम्** அவர்களுடைய **माहात्म्या-अन्तरम्** வேறு பெருமையை **वयम्** நாம் **न अपलपामः** மறுக்கவில்லை.

முன் 13-வது ச்லோகத்தில் சொன்னபடி ஸாங்கேத்யமான முறையிலாவது சிவ என்ற எழுத்துக்கள் சேர்ந்து ஒருவர் வாயில் வந்துவிட்டால் அதே போதுமென்று கருதிச் சிவநாமா அவரைக் காக்க முன் வருகிறது; இப்பெருமை மூர்த்திகளுக்கு இல்லை; சிவன் உருவை வழிபடுவதாயிருந்தால் உருவைத்தான் வழிபடவேண்டும்; சிவ என்ற ஈரெழுத்துக்களே தாரகம் என்றால் அவ்வெழுத்துக்கள் எப்படி வாய்த்தால் என்ன? வ்யாஜமாய் வாய்த்தாலும், நம்மைக் காக்கும்படியான அவ்வளவு ஸுலபமானது இந்த நாம பாராயணம்.

தனது 'சிவபக்தி கல்பலதிகை' என்ற ஸ்தோத்திரத்தில் "'ஹர' என்று நேரே சொல்லாதபோனாலும் 'ஆஹர' 'ப்ரஹர' என்று சொன்னாலும் போதுமே, அவனை இதோ காப்பாற்றி விடுகிறேன் என்று காக்க நீயே வழி தேடிக் கொள்ளுகிறாயே, என்ன பெரும் கருணைக் கடல் நீ" என்கிறார் ஸ்ரீ அய்யாவாள்.

'अप्याहरप्रहरसंहरवाग्वदस्य
त्रातास्म्युपात्तममुना मम नाम हीति ।
एवं विभो तनुभृतामवनेऽप्युपाया-
न्वेषी कथं परमकारुणिकोऽसि न त्वम् ॥" (6)

35. O Mother, Name of Siva! Entering in even through the pretext of utterances like 'sa-*siva*-t' (like the moon), don't you, for no (other) reason, relieve people of the weight of their distress? Is Vishnu or even that Siva capable of doing this? Their other glories, however, we do not deny.

पितृभ्यां त्यक्तोऽसावहमतिदुरात्मेति गिरिजा-
गिरीशाभ्यां त्यक्तो ननु जननि लोकेन च तथा ।
ममास्त्यन्या काचिज्जगति न गतिर्यामि शरणं
शिवाख्ये त्वामेकामयि जहिहि वा मां बिभृहि वा ॥ ३६ ॥

பித்ருப்யாம் த்யக்தோஸாவஹமதிதுராத்மேதி கிரிஜா-
கிரீசாப்யாம் த்யக்தோ நநு ஜநநி லோகேந ச ததா |
மமாஸ்த்யந்யா காசிஜ்ஜகதி ந கதிர்யாமி சரணம்
சிவாக்யே த்வாமேகாமயி ஜஹிஹி வா மாம் பிப்ருஹி வா ॥ 36 ॥

हे शिव-आख्ये ஏ சிவ நாமாவே! गिरिजा-गिरीशाभ्याम् பார்வதீ பரமேச்வரர்களால் त्यक्तः விடப்பட்ட अहम् நான் 'असौ இவன் अति-दुरात्मा மிகவும் கெட்டவன், पितृभ्याम्

தாய் தந்தையர்களால் त्यक्तः விடப்பட்டவன்,' इति என்று लोकेन च உலகத்தாலும் तथा ननु அப்படியே விடப்பட்டும் போனேன் அல்லவா? जगति உலகில் मम எனக்கு अन्या काचित् गतिः வேறு கதியொன்றும் न இல்லை; अयि जननि ஏ தாயே! त्वाम् एकाम् உன்னை ஒருத்தியையே शरणं यामि சரணமடைகிறேன்; माम् என்னை जहिहि वा விட்டாலும் விடு; विभृहि वा தாங்கினாலும் தாங்கு.

வேறு உபாஸநா மார்க்கங்களைக் கையாளுவதென்றால் மனிதன் பலவகைகளில் யோக்யனு யிருக்கவேண்டும். துராத்மாவான எனக்கு அப்மார்க்கங்கள் கிட்டா; நான் கைப்பிடிக்கக் கூடியது நாம பஜனம் ஒன்றே; அதையே நான் நம்பியிருக்கிறேன்.

36. O Name of Siva! Having been abandoned by Parvati and Siva, have I not been given up by the world also as an exceedingly evil being who had been cast away (even) by his parents? I have no other go in this world; O Mother! I take refuge in you alone; abandon me or support me (as you please).

परित्याज्यं सर्वेऽप्यभिदधति पापिष्ठमयि ते
शिवाख्ये संग्राह्यः स जयति तवैतत्समुचितम् ।
प्रपन्ना त्वं किं नोदयिनि गरले चामृतरसे
पयोधेस्तत्राद्यग्रहणरसिकं तं प्रभुमणिम् ॥ ३७ ॥

பரித்யாஜ்யம் ஸர்வேऽப்யபிதததி பாபிஷ்ட்டமயி தே
ஶிவாக்யே ஸம்க்ராஹ்ய: ஸ ஜயதி தவைதத் ஸமுசிதம் |
ப்ரபந்நா த்வம் கிம் நோதயிநி கரலே சாம்ருதரஸே
பயோதேஸ்தத்ராத்ய க்ரஹணரஸிகம் தம் ப்ரபுமணிம் || 37

अयि शिव-आख्ये ஏ சிவ நாமாவே! सर्वे अपि எல்லோருமே पापिष्ठम् மிகவும் தீயோனை परित्याज्यम् விடத்தக்கவன்

என்று अभिदधति சொல்லுகிறார்கள்; स அத்தியோன் ते உனக்கு संग्राह्यः ஏற்றுக்கொள்ளத் தக்கவனாக जयति விளங்குகிறான்; तव உனக்கு एतत् இது समुचितम् நன்கு பொருந்தியதே; पयोधेः கடலிலிருந்து गरले விஷமும் अमृत-रसे च அம்ருத ரஸமும் उदयिनि கிளம்புங்கால் त्वम् நீ तत्र அவ்விரண்டில் आद्य-ग्रहण-रसिकम् முதலாவதான நஞ்சை எடுத்துக் கொள்வதில் ஈடுபட்ட तम् அப்படிப்பட்ட प्रभुमणिम् தலைவர்கோனை किं न प्रपन्ना அடைந்தவள் இல்லையா?

சிவபெருமானின் லீலா விபூதிகளில் மிகவும் சிறந்ததான விஷபான லீலையைக் கவி இங்கு எடுத்துக் கொள்ளுகிறார்; ப்ரபு என்றால் தீங்கில் காக்கும் ஆற்றலும் ஆவலும் உள்ளவராய் இருக்கவேண்டும்; நன்மை நேர்ந்தால் அதை மட்டும் பெற்றுக்கொள்ளும் ப்ரபு ப்ரபு அல்லர்; ‘एतावान् हि प्रभोरर्थो यद्दीनपरिपालनम्’ (8-8-38) என்று இதே அம்ருத மதன கட்டத்தில் பாகவதத்தில் தேவியிடம் சிவன் சொல்லுகிறார்; பாற்கடலை அஸுரரும் தேவரும் கடையும் பொழுது அப்ஸரஸ்ஸுகளும் கற்பக காமதேன்வாதிகளும் அம்ருதமும் எழும்போது தேவர்கள் இவற்றைத் தங்களுக்கென எடுத்துக் கொண்டனர்; மஹாலக்ஷ்மியை விஷ்ணு பாணிக்ரஹணமும் வக்ஷாக்ரஹணமும் செய்துகொண்டார்; இப்படிப் போகமூர்த்திகளாய் தேவதைகள் விளங்க, மூவுலகையும் பொசுக்கும்படியான கொடும் நஞ்சு, காலகூடம், பொங்கி எழ, அதிலிருந்து உலகைக் காக்கக் கருணை ஸாஹஸ மூர்த்தியான பரமேச்வரன் தோன்றி அந்தத் தீய விஷத்தைத் தாமுண்டு உலகை விஞ்ச வைத்தார். அந்த நஞ்சின் நீலமே அவர் கழுத்தில் ‘यच्चकार गले नीलं तच्च साधोः विभूषणम्’ (பாகவதம் 8. 8. 43) ‘திருவாய் அமைந்து அவருடைய கருணைக் கொடிபோலப் பிரகாசிக்கிறது. இச்சக்தி வாய்ந்தவரல்லவா ப்ரபு மணி! கவி நீலகண்ட தீக்ஷிதரும் சொல்லுகிறார்:

दृष्ट्वा कौस्तुभमप्सरोगणमपि प्रक्रान्तवादा मिथो
गीर्वाणाः कति वा न सन्ति भुवने भारा दिवः केवलम् ।
निष्क्रान्ते गरले द्रुते सुरगणे निश्चेष्टिते विष्टपे
मा भैष्टेति गिराविरास धुरि यो देवं तमेव स्तुमः ॥

(நீலகண்ட விஜய சம்பூ)

'கௌஸ்துப மணியையும் அப்ஸரக்கூட்டத்தையும் பார்த்து 'உனக்கு' 'எனக்கு' என்று தமக்குள் சச்சர விட்டுக்கொண்டு கேவலம் ஸ்வர்க்கத்திற்கு பாரமாயிருக்கும் தேவர்கள் உலகில் எவ்வளவு பேர்தானில்லை? விஷம் வெளி வந்ததும்; தேவக்கூட்டங்கள் ஓடிப்போனதும், ப்ரபஞ்சமே செயலற்றுப் போனதும், 'பயப்படாதீர்கள்' என்ற வார்த்தையோடு எவர் முன் வந்தாரோ, அந்தக் கடவுளையே நாம் புகழுகிறோம்,'' என்று; அப்படிப்பட்ட தீயதிலிருந்து ஓடாத உத்தம ரக்ஷகரான சிவனைத் தர்ம பத்னியாய் அடைந்து, அவருடன் ஸஹதர்மசரணம் செய்பவளல்லவா நீ? ஆகையால், நஞ்சையும் மிஞ்சிய தீயோனான என்னை ஏற்று அருளவேண்டும் நீ என்று கவி சிவ நாமாவை வேண்டிக் கொள்ளுகிறார்.


37. O Name of Siva! Everybody says that the evil one has to be shunned; to you that evil is acceptable; this is but most proper in you; are you not one who has taken to that gem of a Lord who eagerly took the first of the two when poison and the ambrosial essence issued out of the ocean?

ममाजस्रं दोषान्समुपघटयन्तोऽन्तररयो
जयन्तीशः पश्यन् हृदि वसति मद्दौःस्थ्यमखिलम् ।
अथैवं सत्यागोऽखिलमपलपन्त्यम्ब बिभृषे
कथं मामीशाख्ये कथय तव कः स्तौतु विभवम् ॥ ३८ ॥

மமாஜஸ்ரம் தோஷாந் ஸமுபகடயந்தோऽந்தரரயோ
ஜயந்தீச: பச்யந் ஹ்ருதி வஸதி மத்தௌஸ்த்யமகிலம் |
அதைவம் ஸத்யாகோऽகிலமபலபந்த்யம்ப விப்ருஷே
கதம் மாமீசாக்யே கதய தவ க: ஸ்தௌது விபவம் || 38 ||

**हे अम्ब ईश-आख्ये** ஏ தாயே சிவ நாமாவே! **अन्तर्-अरयः** உட்சத்ருக்களான (காமக்ரோதாதிகள்) **मम** எனக்கு **अजस्रम्** எப்பொழுதும் **दोषान्** குற்றங்களை **समुपघटयन्तः** விளைவிக்கின்றனவாய் **जयन्ति** வலுத்து வருகின்றன; **अखिलम् मद्-दौस्थ्यम्** என் கெட்ட நிலை முழுமையும் **पश्यन्** பார்த்துக்கொண்டே **ईशः** கடவுள் **हृदि** (என்) ஹ்ருதயத்தில் **वसति** வஸிக்கிறார்; **अथ एवं सति** இப்படி இருந்தும் **अखिलम् आगः** (என்) எல்லாப் பாபத்தையும் **अपलपन्ती** மறுதலித்துக் கொண்டு **कथम्** எப்படி **माम्** என்னை **बिभृषे** தாங்குகிறாய்? **तव** உன் **विभवम्** பெருமையை **कः** எவன் **स्तौतु** புகழக்கூடும்? **कथय** சொல்லு.

காம, க்ரோத, லோப, மோஹ, மத, மாத்ஸர்யம் என்ற ஆறு உட்பகைவர் மூலம் நான் செய்யும் தவறுகள் இடைவிடாதிருக்கின்றன; என் குற்றங்களை நான் மறைவாய்ச் செய்தாலும் அவற்றை மனத்தினுள்ளே ஸாக்ஷியாய் எப்பொழுதும் வீற்றிருக்கும் சிவனிடமிருந்து மறைக்க முடியாது; அப்படிக் கண்முன் கண்ட தீர்மானமான பாபியான என்னுடைய குற்றங்களை இல்லாதவையாகவே கொண்டு என்னை ரக்ஷிக்கிறாயே! இப்பெருமையை என்னென்று வர்ணிப்பது! 'இவன் பாபி இதோ இந்தக் காமக் குற்றம் செய்தான், இதோ இந்தக் க்ரோதக் குற்றம் செய்தான், என்று சிவன் அடிக்கு அடி சித்ரகுப்தன்போல் சொல்லிக் கொண்டிருக்க, கருணாமூர்த்தியான நீ இல்லை, அப்படி யொன்றும் செய்துவிடவில்லையே!' என்று மறுத்து என்னைக் காப்பாற்றுகிறாய் என்று சிவனுக்கும் சிவநாமா




அக்ரஹாரத்தில் ஸ்ரீ மடம்

வென்ற தேவிக்கும் ஸம்வாதம்போல் ச்லோகத்தில் தோன்றுகிறது.

KARAIKUDI 630 301

38. O. Name of Siva ! Lust and other internal enemies, which create incessantly acts of wrong for me, go on flourishing; and the Lord lives in my heart seeing all my ugly passes; when that is so, how is it, Mother, you support me, denying every sin of mine? Tell me, who can praise your magnanimity ?

स्फुटायां द्वारीशेतरमितरया साधु नयते
  यथा प्राप्यस्थानं सुहृदिह मनोजध्रुगभिधे ।
स्वकर्मादावीशेतरमिममखेदं शिवपदं
  तथा कल्याणि त्वं ननु कलयसि त्वत्कलनया ॥ ३९ ॥

ஸ்ஃபுடாயாம் த்வாரீசேதரமிதரயா ஸாது நயதே
  யதா ப்ராப்யஸ்தாநம் ஸுஹ்ருதிஹ மநோஜத்ருகபிதே |
ஸ்வகர்மாதாவீசேதரமிமமகேதம் சிவபதம்
  ததா கல்யாணி த்வம் நநு கலயஸி த்வத்கலநயா ‖ 39 ‖

**हे मनोजध्रुग्-अभिधे** சிவநாமாவே ! **इह** இவ்வுலகில் **द्वारि** (ஒரு ப்ரபுவின்) வீட்டு முன் வாசல் **स्फुटायाम्** திறந்திருக்கும் போதும் **ईश-इतरम्** தானும் ப்ரபு இல்லாத ஒருவனை **इतरया** (**द्वारा**) வேறு எளிய வழியாய் **प्राप्य-स्थानम्** அடைய வேண்டிய இடத்தை **यथा** எப்படி **सुहृत्** (ஒரு) நண்பன் **साधु नयते** நன்கு அடையும்படி செய்கிறனோ **तथा** அப்படி **स्व-कर्म-आदौ** தன் கர்மா முதலியவற்றில் **ईश-इतरम्** சக்தனல்லாத **इमम्** இந்த என்னை **हे कल्याणि** ஏ நன்மைசெய்யும் (அன்னையே) ! **त्वं** நீ **शिव-पदम्** மங்களமான சிவனுடைய ஸ்தானத்தை **अखेदम्** சிரமமின்றி **त्वत्-कलनया** உன் குறுக்கு வழியால் **कलयसि ननु** அடையவைக்கிறயல்லவா ?

5

சிவபதத்தின் முன் வாசல் நேரே நுழையும் யோக்யதையை ஸம்பாதித்துக் கௌரவமாயுள்ளவருக்கே உரியது; அப்படிப்பட்டவரிலும் பலர் அங்கு நெருக்கடியில் சிரமப்பட்டுக் கொண்டிருப்பர்; ஆனால் அவ்வாசலுக்கருகில் ஒரு நண்பன் இருந்தால் அவன் நேரே நுழைய வேண்டிய யோக்யதையோ ச்ரமமோ நமக்குத் தேவையில்லாமல் பக்கத்து வழி ஒன்றின் மூலம் உள்ளே அழைத்துக்கொள்வான்; அத்தோழனின் உபகாரச் செயலை சிவநாமா நமக்குச் செய்கிறது.

39. O Name of Siva! Just as in this world, when the main door (of a rich man's house) is open (for the entry of other rich men only), a friend (there) successfully leads a poor man through another way to the desired place, even so, don't you, O Promoter of Welfare, lead to Siva's place, through your own byway and without strain, this person incapable of performing his own ordained duties?

स्वकर्मादावीशं जनमपि भवत्येव बिभृते
विना त्वां तस्यापि स्वविरचितसाद्गुण्यविरहात् ।
बुभूषोः सर्वस्य त्वमसि तदुपास्या किमपरं
त्वयास्ते लब्धात्मा भगवति शिवाख्ये स च शिवः ॥४०॥

ஸ்வகர்மாதாவீசம் ஜநமபி பவத்யேவ பிப்ருதே
விநா த்வாம் தஸ்யாபி ஸ்வவிரசிதஸாத்குண்யவிரஹாத் |
புபூஷோ: ஸர்வஸ்ய த்வமஸி தது பாஸ்யா கிமபரம்
த்வயாஸ்தே லப்தாத்மா பகவதி சிவாக்யே ஸ ச சிவ: ||

**हे भगवति शिव-आख्ये** ஏ தேவி சிவநாமாவே! **स्व-कर्म आदौ** தன் கர்மாமுதலியவற்றில் **ईशम्** சக்தியுள்ள **जनम् अपि** மனிதனையும் **भवती एव** நீ தான் **बिभृते** காப்பாற்று

கிறாய்; **त्वां विना** உன்னையல்லாமல் **तस्य अपि** அந்த கர்ம அனுஷ்டாதாவுக்கும் **स्व-विरचित-साद्गुण्य-विरहात्** தான் செய்த கர்மாவின் சிறப்பு ஏற்படாததால், **बुभूषोः** நன்றாயிருக்க விரும்பும் **सर्वस्य अपि** எல்லோருக்குமே **त्वम्** நீ **उपास्या असि** உபாஸிக்கவேண்டியவளாயிருக்கிறாய்; **तत्** ஆகையால் **अपरं किम्** வேறு என்ன (சொல்லவேண்டும்)? **स शिवश्च** அந்தச் சிவனும் **त्वया** உன்னால் **लब्ध-आत्मा** தன் ஈச்வர ஸ்வரூபத்தைப் பெற்றவராக **आस्ते** இருக்கிறார்.

முன் ச்லோகத்தில் கர்மானுஷ்டானமில்லாத தன்னைப் போன்றவருக்கு ஏற்பட்ட குறுக்குவழி நாமஸங்கீர்த்தனம் என்று சொன்னார் கவி; இந்த ச்லோகத்தில் கர்மாநுஷ்டாதாவுக்கும் கர்மஸாத்குண்யத்தைக் கொடுப்பதும் சிவ நாமாவே என்கிறார் கவி; கர்மாவுக்குப் பலன் கொடுக்கும் சிவனுக்கும் அந்தத் தானசக்தியை அளிப்பது சிவனுடைய நாமாவே.

கர்மா என்பது அனுஷ்டிக்க மிகவும் சிரமமானது; செய்யும்போது தோஷங்கள் ஏற்பட்டால் அவற்றுக்கு ப்ராயச்சித்தமான வேறு கர்மாக்கள் செய்யவேண்டும்; அந்த ப்ராயச்சித்தமான கர்மாக்களில் தோஷங்கள் நேரிட்டால் அவற்றிற்கு ப்ராயச்சித்தமான கர்மாக்கள் என்று முடிவில்லாமல் போகும்; ஆகையால் கர்மாக்களில் ஏற்படும் ஓட்டைகளை மூட, கடைசியான உபாயம் கடவுளின் நாமாவே என்று நம் பெரியோர் கண்டு நம் கர்மாக்களின் முடிவில் ஸர்வப்ராயச்சித்தமான பகவன் நாம ஜபத்தை வைத்திருக்கின்றனர்.

**प्रायश्चित्तान्यशेषाणि तपःकर्मात्मकानि वै ।**
**यानि तेषामशेषाणां श्रीकृष्णानुस्मरणं परम् ॥**

**40. O Goddess, Name of Siva! It is you who protect even him who is capable of observing his ordained**

Karma; as without you even he is deprived of the meritoriousness of the act performed by him, you are the object of worship for everybody who desires to do well; hence, what more need be said? Even that Siva justifies himself only through you.

न कर्माध्वन्योऽहं भगवति न वा भक्तिपथिको-
ऽस्म्युपादेयः कोऽपि स्फुरति गुणलेशोऽपि न मयि ।
असंख्याता दोषाः किमत इह दौरात्म्यमितर-
त्तदम्ब त्वत्तोऽन्या न जगति शिवाख्ये मम गतिः ॥४१॥

ந கர்மாத்4வந்யோऽஹம் ப4க3வதி ந வா ப4க்திபதி2கோ-
ऽஸ்ம்யுபாதே3ய: கோऽபி ஸ்பு2ரதி கு3ணலேஶோऽபி ந மயி
அஸங்க்2யாதா தோ3ஷா: கிமத இஹ தௌ3ராத்ம்யமிதர-
த்தத3ம்ப3 த்வத்தோऽந்யா ந ஜக3தி ஶிவாக்2யே மம க3தி: ॥ 41

**हे भगवति शिव-आख्ये !** ஏ தேவி சிவநாமாவே! **अहम्** நான் **कर्म-अध्वन्यो न** கர்மமார்க்கத்தைப் பின்பற்றியவன் அல்ல; **भक्ति-पथिको वा न अस्मि** பக்திமார்க்கத்தைப் பற்றியவனும் இல்லை; **मयि** என்னிடம் **उपादेयः** எடுத்துக்கொள்ளக்கூடிய **कोऽपि गुणलेशोऽपि** ஏதாவது ஒரு குணத்திவலையும் **न स्फुरति** விளங்கவில்லை; (ஆனால்) **दोषाः** (என்னிடமுள்ள) குற்றங்களோ **असंख्याताः** கணக்கற்றவை; **इह** இவ்வுலகில் **अतः** இதைக்காட்டிலும் **इतरत्** வேறு **किं दौरात्म्यम्** என்ன கெட்டத்தனம் வேண்டும்; **तत्** ஆகையால் **हे अम्ब !** ஏ தாயே! **जगति** உலகில் **त्वत्तः** உன்னைக்காட்டிலும் **अन्या** வேறான **गतिः** போக்கு **मम** எனக்கு **न** இல்லை.

எனக்குக் கர்மபக்தி மார்க்கங்களில் ஒரு யோக்யதையுமில்லை; ஞானம் அறவே இல்லை என்பதைச் சொல்லவே வேண்டாம்; குணங்கள் ஒன்றும் வேண்டாம், தோஷமற்ற

வனாகவாவது இருக்கிறேனா என்றால், என்னிடம் கணக்கிட முடியாத தோஷங்கள்; இப்படி வகையின்றியிருக்கும் ஒருவனுக்கு நாமாவே தாரகம்.

41. O Goddess, Name of Siva! I am not a follower of the path of Karma or of Devotion; not even a speck of acceptable merit shines in me; my faults are innumerable; what more depravity than this could there be in this world? Hence, O Mother, there is no go for me in this world other than yourself.

सुतस्याख्यां नारायणगिरमुपादत्त यदजा-
मिलस्तं तद्भीतास्तपनसुतदूताः प्रविजहुः ।
त्वमीशाख्ये भीतिं नयसि विमतांस्ते मुदमथा-
नुगान्कारुण्यार्द्रास्त्वहह निखिले ते त्वदनुगाः ॥ ४२ ॥

ஸுதஸ்யாக்²யாம் நாராயணகி³ரமுபாத³த்த யத³ஜா-
மிலஸ்தம் தத்³பீ⁴தாஸ்தபநஸுததூ³தா: ப்ரவிஜஹு: |
த்வமீஶாக்²யே பீ⁴திம் நயஸி விமதாம்ஸ்தே முத³மதா²-
நுகா³ந் காருண்யார்த்³ராஸ்த்வஹஹ நிகி²லே தே த்வத³நுகா³: ||

**हे ईश-आख्ये** ஏ சிவநாமாவே! **सुतस्य** (தன்) பிள்ளையின் **आख्याम्** பெயரான **नारायण-गिरम्** 'நாராயண' என்ற சொல்லை **यत्** எந்தக் காரணத்தால் **अजामिलः** அஜாமிளன் என்றவன் **उपादत्त** சொன்னானோ **तत्** அக்காரணத்தால் **भीताः** பயந்து போனவர்களான **तपनसुत-दूताः** யமதூதர்கள் **तम्** அந்த அஜாமிளனை **प्रविजहुः** விட்டுவிட்டார்கள்; (அந்த மாதிரி) **त्वम्** நீ **विमतान्** சத்துருக்களை **भीतिं नयसि** பயமடையச் செய்கிறாய்; **अथ** பின்னும் **ते** உன்னுடைய **अनुगान्** பக்தர்களை **मुदं नयसि** ஆனந்தத்தையடையச் செய்கிறாய்; **अहह** ஆச்சரியம்! **ते** அந்த **त्वद्-अनुगास्तु** உன்பக்தர்களோவெ

னில் **निखिले** எல்லோரிடமும் **कारुण्य-आर्द्राः** கருணையுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

முன் வ்யாஜமாகப் பகவந் நாமாவை உச்சரித்தாலும் போதுமென்று சொல்லப்பட்டது; அதற்கு உதாஹரணமாய் ஸ்ரீமத் பாகவதத்தில் 6-வது ஸ்கந்தத்தில் 1-3 அத்தியாயங்களில் அஜாமிளன் என்றவனின் உபாக்யானம் சொல்லப்பட்டிருக்கிறது; அதை இங்கு உதாஹரிக்கிறார் கவி: தாஸியுடன் இல்லறம் நடத்தி ஸம்ஸார வாழ்க்கையிலேயே உழலும் அஜாமிள ப்ராம்மணனுக்கு முடிவுகாலம் வந்த போது அவன் தன் கடைசிக் குழந்தையான நாராயணனிடம் உள்ள அளவற்ற அன்பினால் 'நாராயண' என்று கூவ, 'நாராயண' என்பது பகவந் நாமாவாதலால் அதை உச்சரிப்பவரிடம் போகாதீர்கள் என விஷ்ணு தூதர் யம தூதரைத் தடுக்க, தர்மராஜன் ஆக்ஞையும் அப்படியே இருக்க, யமபடர்கள் அஜாமிளனை விட்டு விலகினார்கள்; 'நாராயண' என்ற பகவந்நாமா யமபடர்களான விரோதிகளை விரட்டிற்று; அஜாமிளனுக்கு அபயஸூகம் அளித்தது; அதுபோலவே சிவ நாமாவும் விரோதிகளிடமிருந்து பக்தனை ரக்ஷிக்கும்; பக்தனுக்கு ஆநந்தத்தை அளிக்கும்; ஒருவனிடமிருந்தும் பகவத் பக்தனுக்குப் பயமில்லாததால், அவன் யாரையும் சினப்பட்டு எதிர்க்க வேண்டியதில்லை; ஆதலால் அவன் எல்லோரிடமும் கருணை பெருகும் மனதுடையவனாக விளங்குவான்.

42. O Name of Siva! Because Ajamila uttered the word Narayana which was the name of his son, the emissaries of Death got afraid and abandoned that Ajamila; (even so) you (God's name) give fright to the enemies (like Death's messengers) and happiness to your devotees; and Ah! your adherents are full of compassion towards all!

सुरभिशरभिदाख्ये सुन्दरे त्वज्झरेऽस्मि-
न्निरुपहति विहर्तुं नित्यमुद्ग्रीविताशम् ।
अपनयसि किमेवं हन्त मामन्तरायै-
र्मनसि न कुरु मातर्मामकान् देवि मन्तून् ॥ ४३ ॥

ஸுரபிஶரபிதாக்யே ஸுந்தரே த்வஜ்ஜரேऽஸ்மிந்
நிருபஹதி விஹர்த்தும் நித்யமுத்க்ரீவிதாஶம் |
அபநயஸி கிமேவம் ஹந்த மாமந்தராயைః
மநஸி ந குரு மாதர்மாமகாந் தேவி மந்தூந் || 43 ||

**हे देवि सुरभिशरभिद्-आख्ये** ஏ தேவி சிவநாமாவே! **सुन्दरे** அழகிய **अस्मिन्** இந்த **त्वद्-झर** உன் ப்ரவாஹத்தில் **निरुपहति** தடையின்றி **विहर्तुम्** விளையாட **नित्यम्** எப்பொழுதும் **उद्ग्रीवित-आशम्** ஆவல் கொண்டிருக்கும் **माम्** என்னை **अन्तरायैः** இடையூறுகள்மூலம் **एवम्** இம்மாதிரி **हन्त** அந்தோ! **किं अपनयसि** ஏன் விலக்குகிறாய்? **हे मातः** ஏ தாயே! **मामकान् मन्तून्** என் குற்றங்களை **मनसि** மனதில் **मा कुरु** வைத்துக் கொள்ளாதே.

இடைவிடாது நாமபஜனம் செய்வது குளிர்ந்த ப்ரவாஹத்தில் நீராடிக்கொண்டே இருப்பதுபோல் அவ்வளவு போக்யமானது. அப்படி விளையாட எனக்கு எப்பவும் ஏக்கமிருந்தும் பற்பல விக்னங்கள் குறுக்கிட்டு நாமபஜனத்தைக் கெடுத்துவிடுகின்றன. இடையூறின்றி உன்னை பஜிப்பதற்கும் உன் அருளே தேவையாதலால் நீ எக்குற்றங்களை என்னிடம் கண்டு அதற்காக என்னைத் தடை செய்கிறாயோ, அக்குற்றங்களை மன்னித்து பஜனப்ரவாஹத்தில் நான் இடைவிடாது விளையாடும்படி அருளவேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறார் கவி.

43. O Goddess Name of Siva! Me who am always anxiously longing for sporting uninterruptedly in the beautiful current of your recitation, alas! why do you

thus take away through impediments? O Mother! don't bear in mind my failings.

किमकुरुत मुदे मे कर्म वर्णाश्रमार्हं
किमभजत मदङ्घ्रिं किं व्यधादेष को वा ।
इति निजसमितौ मामीक्षमाणे गिरीशे
मदनुग इति मातर्गर्ज धीरं शिवाख्ये ॥ ४४ ॥

கிமகுருத முதே மே கர்ம வர்ணாஶ்ரமார்ஹம்
கிமஹஜத மதங்க்ரிம் கிம் வ்யதாதேஷ கோ வா |
இதி நிஜஸமிதௌ மாமீக்ஷமாணே கிரீஶே
மதநுக இதி மாதர்கர்ஜ தீரம் ஶிவாக்யே || 44 ||

"मे मुदे என் த்ருப்திக்காக एषः இவன் वर्ण-आश्रम-अर्हम् தன் வர்ணம் ஆச்ரமம் இவற்றிற்குரிய कर्म கர்மாவை अकुरुत किम् அனுஷ்டித்தானா? मद्-अङ्घ्रिम् என் அடியை अभजत किम् ஸேவித்தானா? किं व्यधात् என்ன செய்தான் (இவன்)? को वा (இவன்)யார்?" इति என்று निज-समितौ தன் ஸபையில் गिरीशे சிவன் माम् என்னை ईक्षमाणे கவனித்துப் பார்க்கும் போது हे मातः शिव-आख्ये ஏ தாயே சிவ நாமாவே! मद्-अनुगः इति (இவன்) என்னைப் பின் பற்றியவன் என்று धीरम् தைர்யமாய் गर्ज நீ கர்ஜனை செய்.

சிவனுடைய மூர்த்தி தன் ப்ரஸாதத்தை யருளக் கர்ம பக்தி யோக்யதைகளை விசாரணை செய்யும்; சிவ நாமா தன் அருளால் வேறு யோக்யதை இல்லாதவனைச் சிவ ஸந்நிதானத்திற்குக் கொண்டு போய்ச் சேர்க்கும்.

44. "Did this man perform for my gratification the Karma proper to his Varna and Asrama? Did he worship my feet? What has he done? Who is he?" When Siva scrutinises me thus in his assembly, O Mother, Name of Siva! you boldly thunder forth that I am your follower.

जगति वशिगिरा त्वद्व्यत्ययेनोल्लसन्त्या
जननि परिगृहीतांस्त्वं स्वकर्मादिनिष्ठान् ।
न किमवसि शिवाख्ये हा तयानादृतं मा-
मवितुमिह विलम्बः कस्त्वदेकावलम्बम् ॥ ४५ ॥

ஜகதி வஶிகிரா த்வத் வ்யத்யயேனோல்லஸந்த்யா
ஜநநி பரிக்ருஹீதாம்ஸ்த்வம் ஸ்வகர்மாதிநிஷ்டாந் |
ந கிமவஸி ஶிவாக்யே ஹா தயாநாத்ருதம் மாம்
அவிதுமிஹ விலம்பஃ கஸ்த்வதேகாவலம்பம் || 45 ||

**हे जननि शिव-आख्ये** ஏ தாயே சிவ நாமாவே! **जगति** உலகில் **त्वद्-व्यत्ययेन** சிவ என்ற உன் எழுத்துக்களின் முன் பின் மாறுதலால் **उल्लसन्त्या** விளங்குகிற **वशि-गिरा** 'வசி' (இந்திரிய நிக்ரஹம் உள்ளவர்) என்ற சொல்லால் **परिगृहीतान्** பிடித்துக்கொள்ளப்பட்ட **स्व-कर्म-आदि-निष्ठान्** ஸ்வகர்மாநுஷ்டானம் பக்தி, ஞானம், என்ற மார்க்கங்களில் நிலைத்தவரை **अवसि न किम्**? நீ காப்பாற்றுகிற தில்லையா? **हा** அந்தோ! **तया** அந்த மாறுதலான சொல்லால் **न आदृतम्** அங்கீகரிக்கப் படாதவனையும் **इह** இவ்வுலகில் **त्वद्-एक-अवलम्बम्** உன்னை ஒருவனையே பிடிப்பாய் கொண்டவனுமான **माम्** என்னை **अवितुम्** காப்பாற்ற **विलम्बः कः** என்ன தயக்கம்?

புலன்களை வென்று நன்னெறி யொழுகி, பக்தியும் ஞானமும் நிறைந்தவரை நீ காப்பாற்றுகிறாய்; அவர்கள் வேறு மார்க்கங்களைக் கடைப் பிடித்தவர்; நான் அம்மார்க் கங்களை நாடாது, நாடமுடியாமல், உன்னையே நாடினவன்; என்னை நீ காக்க ஏன் முன்வரவில்லை? 'சிவ' என்ற பதத்தைத் திருப்பினால் 'வசி', இந்த்ரிய நிக்ரஹமுள்ளவன், என்றாகும்; உன்னைத் தலைகீழாய் வைத்தவரைக் காப்பாற்று கிறாயே, உன்னை ஸரிவர வைத்திருக்கும் என்னைக் காப்பதில் என்ன தாமஸம்? என்று கேட்கிறார் கவி.

45. O Mother, Name of Siva! Don't you protect those people who are supported by the expression 'Vasi' (those who have sense-control), which shines forth by turning you (Siva) upside down, and those who are well-established in the paths like the performance of one's own Karma? Alas! why this hesitation to protect me who am slighted by that word Vasi (who have no sense-control) and who have you as the only prop in this world?

**अम्ब त्वदीयमहिमाम्बुधिशीकराणु-**
**वेदी सुधीस्त्वयि निरन्तरवृत्त्यलाभे ।**
**ईशाभिधे भुवि समेतु न किं पिपासो-**
**रभ्यर्णगेऽम्भसि निरुद्धगतेरवस्थाम् ॥ ४६ ॥**

அம்ப த்வதீயமஹிமாம்புதிஶீகராணு-
வேதீ ஸுதீஸ்த்வயி நிரந்தரவ்ருத்த்யலாபே |
ஈஶாபிதே புவி ஸமேது ந கிம் பிபாஸோ-
ரப்யர்ணகேऽம்பஸி நிருத்தகதேரவஸ்தாம் || 46 ||

**हे अम्ब ईश-अभिधे** ஏ தாயே சிவ நாமாவே! **त्वदीय-महिम-अम्बुधि-शीकर-अणु-वेदी** உன்னுடைய பெருமையாகிற கடலின் திவலையின் திவலையை உணர்ந்த **सुधीः** புத்திமான் **त्वयि** உன்னிடத்தில் **निरन्तर-वृत्ति-अलाभे** இடைவிடாத இருப்பு இல்லாதபோனால் **भुवि** உலகில் **अम्भसि** நீர் **अभ्यर्ण-गे** அருகாமையிலிருக்க **निरुद्ध-गतेः** நடை தடைப்பட்டுப் போன **पिपासोः** தாகம் கொண்டவனுடைய **अवस्थाम्** நிலையை **न समेतु** அடைய மாட்டானா என்ன?

உன் நாம மாஹாத்ம்யத்தை முழுதும் உணர்ந்தும் இடையூறுகளால் இடைவிடாது அவற்றைப் பாடமுடியாமற் போனால் உன் பக்தன் படும்பாடு, தாகங்கொண்ட ஒருவன் நீரும் கிட்டே இருக்க அதனை நடந்து அடையமுடியாமற் போனால் என்ன பாடுபடுவானோ அதற்கு ஒப்பாகும்.

46. O Mother, Name of Siva! Does not the wise man who has known even a little of the ocean-like greatness of yours, in the absence of an incessant being in you, come in this world to the plight of the thirsty man who, when water is nearby, has his movement obstructed?

इतो रोगाः कामाद्य इत इतः स्त्रीसुतमुखाः
कृतान्ताः सर्वत्रेत्ययमनवधिः क्लेशजलधिः ।
तमेतं चाह्नाय त्वदनुगदयोल्लासघटभू-
र्निपीयेशाख्ये मामभिरमयतु त्वत्परिसरे ॥ ४७ ॥

இதோ ரோகா: காமாத்ய இத இத: ஸ்த்ரீஸுதமுகா:
க்ருதாந்தா: ஸர்வத்ரேத்யயமநவதி: க்லேஶஜலதி: |
தமேதம் சாஹ்நாய த்வதநுகதயோல்லாஸகடபூர்
நிபீயேஶாக்யே மாமபிரமயது த்வத்பரிஸரே || 47 ||

हे ईश-आख्ये ஏ சிவ நாமாவே! इतः இதோ काम-आदयः காமம் முதலிய रोगाः நோய்கள்; इतः स्त्री-सुत-मुखाः மனைவி மக்கள் முதலிய कृतान्ताः ம்ருத்யுக்கள்; इति இப்படி सर्वत्र எங்குப் பார்த்தாலும் अनवधिः எல்லையில்லா क्लेश-जलधिः துன்பக்கடல்; तम् एतम् அந்த இந்த துன்பக்கடலை त्वद्-अनुग-दया-उल्लास-घटभूः உன்பக்கலிருக்கும் உன் தயையின் எழுச்சியான அகஸ்தியர் अह्नाय சீக்கிரம் निपीय குடித்து त्वत्-परिसरे உன் பக்கத்திலேயே माम् என்னை अभिरमयतु விளையாடிக் கொண்டிருக்கும்படி செய்யட்டும்.

உன் கருணையால் எனக்கு ஏற்படும் இடையூறுகளான நோய் குடும்பக் கஷ்டம் முதலிய எல்லாவற்றையும் போக்கி நான் உன்னை ஜபித்துக் கொண்டு உன்னிடமே இன்புற்றிருக்கும்படி செய் என்று கவி சிவநாமாவை வேண்டிக் கொள்ளுகிறார்.

47. O Name of Siva ! Here are my ills, passion and others ; here my deaths (in the form of) wife, sons and others ; thus, all around, limitless is my ocean of distress ; and may the Agastya of the rising compassion of yours for your devotee drink up quickly this ocean of my distress and make me sport by your side.

**अम्ब प्रसीद कुरु मामनघं बलात्त्व-**
**मङ्के च ते कुरु निषण्णममुं शिवाख्ये ।**
**जम्बालसक्तममलं कुरुते न माता**
**किं बालकं न कुरुतेऽङ्कजुषं च हृष्टा ॥ ४८ ॥**

அம்ப ப்ரஸீத குரு மாமநகம் பலாத் த்வம்
அங்கே ச தே குரு நிஷண்ணமமும் ஶிவாக்யே |
ஜம்பாலஸக்தமமலம் குருதே ந மாதா
கிம் பாலகம் ந குருதேऽங்கஜுஷம் ச ஹ்ருஷ்டா || 48 ||

**हे अम्ब! शिव-आख्ये !** ஏ தாயே சிவநாமாவே ! **प्रसीद** அருள் செய் ; **बलात्** பலாத்காரமாய் **माम्** என்னை **अनघम्** பாபம் நீங்கியவனாய் **कुरु** செய் ; **अमुम्** இந்த என்னை **ते अङ्के** உன் மடியில் **निषण्णम्** அமர்ந்தவனாய் **कुरु** செய் ; **माता** தாய் **जम्बाल-सक्तम्** புழுதியடைந்த **बालकम्** (தன்) மைந்தனை **अमलम्** சுத்தனாக **न कुरुते किम्** செய்கிறதில்லையா ? **हृष्टा** களிப்படைந்தவளாய் **अङ्क-जुषं च** (அவனைத் தன்) மடியை அடைந்தவனாகவும் **न कुरुते किम्** செய்கிறதில்லையா என்ன ?

தன்னைக் குழந்தையாகவும் சிவ நாமாவைத் தாயாகவும் வர்ணிக்கிறார் கவி ; தாய் புழுதியில் புரண்டு கொண்டிருக்கும் குழந்தையைத் தானே எடுத்துத் துடைத்துத் தன் மடிமேல் ஏற்றிக்கொண்டு இன்புறுவதுபோல், பாபவழுக்கேறிக் கிடக்கும் தன்னைத் தானாய் எடுத்துப் பரிசுத்தனாக்கித் தன்பால் களிப்புடன் ஏற்றுக்கொள்ள வேண்டும் 'என்று கவி சிவ நாமாவென்ற தாயை வேண்டிக் கொள்ளுகிறார்.

48. O Mother, Name of Siva! Please, you forcibly purify me of my sins, and make this being seated on your lap; does not a mother cleanse her son wallowing in dirt and take him on her lap in glee?

आविर्भवस्ययि नृणां त्वमयत्नतोऽग्रे
ग्लानिं धुनोषि घटयस्यपि मङ्गलानि ।
ईशाभिधे तव यशो न किमुज्जिहीता-
मीर्ष्याकुलत्वममरा न किमश्नुवीरन् ॥ ४९ ॥

ஆவிர்ஹவஸ்யயி ந்ருணாம் த்வமயத்நதோऽக்ரே
க்லாநிம் துநோஷி கடயஸ்யபி மங்களாநி |
ஈஶாபிதே தவ யஶோ ந கிமுஜ்ஜிஹீதாம்
ஈர்ஷ்யாகுலத்வமமரா ந கிமஶ்நுவீரன் || 49 ||

**अयि ईश-अभिधे!** ஏ சிவ நாமாவே! **त्वं** நீ **नृणाम्** மனிதர்களுடைய **अग्रे** முன்னிலையில் **अयत्नतः** எளிதில் **आविर्भवसि** தோன்றுகிறாய்; **ग्लानिम्** களைப்பை **धुनोषि** போக்குகிறாய்; **मङ्गलानि अपि** க்ஷேமங்களையும் **घटयसि** வந்துசேரும்படி செய்கிறாய்; (इति) (இப்படி) **तव** உன்னுடைய **यशः** புகழ் **न उज्जिहीतां किम्?** எழ வேண்டாமா? (அப்புகழைக் கண்டு) **अमराः** தேவர்கள் **ईर्ष्या-आकुलत्वम्** அஸூயையினால் துன்பப்படும் அவஸ்தையை **न अश्नुवीरन् किम्** அடையவேண்டாமா?

பக்தருக்குக் கடவுளின் ரூபத்தைத் தன்முன் வரவழைக்க எவ்வளவோ யத்நம் வேண்டும்; கடவுளின் நாமாவை நாவின்மேல் அழைத்துக்கொள்வது மிகவும் ஸுலபம்; களைத்த மனிதனுக்குக் களைப்பாற்றும் சொல்லும் கடவுளின் நாமாவே; வேறு நன்மைகளையும் வேண்டியபடி நாமாவே செய்து வைக்கும்; இப்படி எளிதில் நாமா பக்தருக்குக்காக உழைக்க, தேவலோகத்தையும் தெய்வத் தன்மையையும் கிடைத்தற்கரிதென்ற பிகு அற்றதாய் இந்த

நாமா செய்துவிட்டதே என்று தேவர்கள் பொறுமைப் படுகிறார்கள்.

49. O Name of Siva! You appear before people very easily, drive off their languor and bring them welfare; should not your fame shoot up (like this) and should not the gods mortify themselves in jealousy?

मदनहन्त्रभिधे तव निर्झरा
मधुसुधालहरीरतिशेरते ।
कृतधियो विहरन्ति च तेष्वमी-
ष्वरसिकोऽत्र हतोऽस्म्यहमेककः ॥ ५० ॥

மதநஹந்த்ரபிதே தவ நிர்ஜரா
மதுஸுதாலஹரீரதிசேரதே |
க்ருததியோ விஹரந்தி ச தேஷ்வமீ-
ஷ்வரஸிகோऽத்ர ஹதோऽஸ்ம்யஹமேககஃ || 50 ||

**हे मदन-हन्तृ-अभिधे** ஏ சிவ நாமாவே! **तव निर्झराः** உன்னை இடைவிடாது கீர்த்தனம் செய்வதென்ற ப்ரவாஹங்கள் **मधु-सुधा-लहरीः अतिशेरते** தேன் அம்ருதம் இவைகளின் பெருக்குகளை விட மேன்பட்டிருக்கின்றன; **कृतधियः** புத்தியை வசப்படுத்தியவர்கள் **तेषु** அந்த உன் ப்ரவாஹங்களில் **विहरन्ति** விளையாடுகிறார்கள்; **अत्र** இங்கே **अमीषु अरसिकः** இவற்றின் சுவையறியா **अहम्** நான் **एककः** ஒருவன் மட்டும் **हतोऽस्मि** கெடுற்று இருக்கிறேன்.

ஈச்வர நாமாவின் ரஸம் மிகவும் இனிது; இந்த லோகத்திலுள்ள இனியவஸ்துவான மது, தேவலோகத்தின் இனிய வஸ்துவான அம்ருதம், இரண்டைக் காட்டிலும் இனியது; இஹபரங்களிலுள்ள இனிய சிற்றுண்டிகளிலிருந்து மனத்தைத் திருப்பிவைத்துக் கொண்டிருப்பவர் இந்த நாமாவின் இனிப்பிலேயே லயித்திருப்பர்; என் போன்ற

அரஸிகர்களோ உண்மையான மதுவையும் அம்ருதத்தையும் தெரிந்து கொள்ளாமல், மனுஷ்ய மதுவிலும் தேவ மதுவிலும் ஈடுபட்டு வீண் போவார்கள்.

50. O Name of Siva ! the streams of your recitation excel those of honey or nectar; in them, those of controlled minds sport, but I alone here, insensible to their taste, am lost.

शिवाख्ये मा भैषीः पदममरनेतुर्ननु भवे-
दमुष्मै दातव्यं सरसिजभुवो वा पदमिति ।
समीहे नाहं तत्किमपि सहसाभ्येहि रसनां
ममेमां मा हासीः समभिलषितं मे पुनरिदम् ॥ ५१ ॥

ஶிவாக்யே மா பைஷீః பதமமரநேதுர் நநு பவேத்
அமுஷ்மை தாதவ்யம் ஸரஸிஜபுவோ வா பதமிதி |
ஸமீஹே நாஹம் தத்கிமபி ஸஹஸாப்யேஹி ரஸநாம்
மமேமாம் மா ஹாஸீः ஸமபிலஷிதம் மே புநரிதம் || 51 ||

हे शिव-आख्ये ஏ சிவ நாமாவே! ‘अमुष्मै இவனுக்கு अमरनेतुः இந்திரனுடைய पदम् ஸ்தானமாவது सरसिजभुवः பிரம்மாவினுடைய पदं वा ஸ்தானமாவது दातव्यम् கொடுக்கப் பட வேண்டியதாக भवेत् ननु ஆகுமல்லவா? इति என்று मा भैषीः நீ பயப்படாதே ; तत् किमपि அது ஒன்றையும் अहम् நான் न समीहे வேண்டவில்லை ; सहसा உடனே मम इमाम् रसनाम् என்னுடைய இந்த நாவை अभ्येहि அடைவாயாக ; मा हासीः (அந்த நாவை) விட்டுவிடாதே; इदं पुनः இதுவே मम என்னுடைய समभिलषितम् ஆசை.

பக்தியில் நிர்ஹேதுகமான ஏகாந்த பக்திபோல் ஈச்வர நாமாவை பஜிப்பதிலும் உண்மைப் பக்தர்களுக்கு நிர்ஹேதுகமான ஈடுபாடே ; நிர்ஹேதுகமாய்த் தான் அளவின்றி அன்பு கொண்ட ஒருவரையுடைய பெயரை ஒருவன் அடிக்கடி

சொல்லிக்கொள்வது ஸஹஜமே; பக்தியால் இந்த நாமாவைச் சொல்வது, நாமாவைச் சொல்லித் தானே தன்னை க்ருதார்த்தமாகச் செய்து கொள்ளுகிறது, இது ஒன்றே ஏகாந்தநிர்ஹேதுக பக்தரின் மனோரதம்.

51. O Name of Siva ! Don't you be afraid that the station of the lord of the Gods or that of Brahma will have to be given to this person; I do not desire any of those things ; do come quickly to this tongue of mine and don't leave it ; this only is my wish.

प्रदाय त्रैलोक्यश्रियमथ विमुक्तिश्रियमपि
त्वमन्तर्लज्जार्ता भवसि किममुष्मै कृतमिति ।
व्यथैषा दिष्ट्या त्वद्रसिकतिलकैस्ते परिहृता
विना त्वामीशाख्ये न किमपि यदेषां रतिपदम् ॥ ५२ ॥

ப்ரதாய த்ரைலோக்யஶ்ரியமத விமுக்திஶ்ரியமபி
த்வமந்தர்லஜ்ஜார்தா பவஸி கிமமுஷ்மை க்ருதமிதி |
வ்யதைஷா திஷ்ட்யா த்வத்ரஸிகதிலகைஸ்தே பரிஹ்ருதா
விநா த்வாமீஶாக்யே ந கிமபி யதேஷாம் ரதிபதம் ‖ 52 ‖

हे ईश-आख्ये ஏ சிவநாமாவே ! त्रैलोक्य-श्रियम् अपि மோக்ஷ லக்ஷ்மியையும் प्रदाय (பக்தனுக்குக்) கொடுத்து अमुष्मै இந்த பக்தனுக்கு किम् என்ன कृतम् (என்றால்) செய்யப் பட்டது इति என்று त्वम् நீ लज्जा-आर्ता வெட்கத்தால் கஷ்டப்படுகிறவளாய் भवसि ஆகிறாய் ; दिष्ट्या நல்லவேளை யாய் ते உன்னுடைய एषा व्यथा இந்தத்துன்பம் त्वद्-रसिक-तिलकैः உன் சுவையைக்கண்ட பக்தச்ரேஷ்டர்களால் परिहृता போக்கப்பட்டது ; यत् ஏனெனில் एषाम् இவர்களுக்கு रति-पदम् இன்புற்றிருக்குமிடம் किमपि (உன்னைத் தவிரவேறு) எதுவும் न இல்லை.

புக்தி முக்திகளைப் பக்தருக்குக் கொடுத்தும், இவ்வளவுதானா நம்மையண்டியவருக்கு நாம் செய்யக்கூடியதென்று சிவநாமா வெட்கிப்பதென்றால் அதன் அருள் எவ்வளவு? ஆனால் பக்தரோ நாமாவைத் தவிர புக்தியோ, முக்தியோ வேறொன்றையும் வேண்டுவதில்லையென்றால் அவர்களுடைய விரக்திதான் எவ்வளவு?

52. O Name of Siva! Having bestowed (on your devotee) the lordship of the three worlds and Moksha also, you yet become shame-stricken with the thought "What have I (after all) done for him?" Fortunately this distress of yours is removed by your eminent devotees who revel in you; for, to these, there is nothing besides you that could give delight.

**जन्मास्य वार्यमिति ते जननि प्रसादो**
**जायेत चेन्मयि तदस्तु शिवाभिधे सः ।**
**त्वन्निष्ठताभरनिरन्तरतातिरम्यं**
**यज्जन्म तन्मम न जीर्यतु ते नमोऽस्तु ॥ ५३ ॥**

ஜந்மாஸ்ய வார்யமிதி தே ஜநநி ப்ரஸாதோ
ஜாயேத சேந்மயி ததஸ்து ஶிவாபிதே ஸஃ ।
த்வந்நிஷ்டாபரநிரந்தரதாதிரம்யம்
யஜ்ஜந்ம தந்மம ந ஜீர்யது தே நமோऽஸ்து ॥ 53 ॥

**हे जननि शिव-अभिधे** ஏ தாயே சிவநாமாவே! **अस्य** இந்த எனக்கு **जन्म** (மறு) பிறப்பு **वार्यम्** தடுக்கப்படவேண்டும் **इति** என்று **ते** உனக்கு **मयि** என்னிடத்தில் **प्रसादः** அருள் **जायेत चेत्** உண்டாகுமேயானால் **सः तत्** அந்த அருள் என்றது **अस्तु** இருக்கட்டும்; **त्वन्-निष्ठता-भर-निरन्तरता-अतिरम्यम्** உன்னிடத்திலேயே ஆழ்ந்து ஊன்றியிருப்பது என்றதின் இடைவிடாத் தன்மையால் மிகவும் அழகாயிருக்கும் **यद् जन्म** எந்த

ஜன்மம் உண்டோ तत् அந்த ஜன்மம் मम எனக்கு न जीर्यतु அழிந்து போகவேண்டாம்; ते नमोऽस्तु உனக்கு நமஸ்காரம்.

மறுபிறப்பின்றி யடையப்படும் விதேஹ முக்தி; அந்த அருளை நீ எனக்குச் செய்தாலும் அதில் எனக்குத் திருப்தியில்லை; உன்னிடம் இடைவிடாது லயித்திருக்கும் அழகிய பாக்யம் உள்ளது இந்தக் கரண களேபரங்களோடு கூடிய என் ஜன்மம்; இந்த ஜன்மம் எனக்குப் போகவேண்டாம்; விதேஹமுக்தியைக் காட்டிலும் ஸதேஹபக்தியே பக்தர்கள் ஆசைப்பட்டு வேண்டுகிறார்கள்.

53. O Mother, Name of Siva! If your favour issues forth towards me that rebirth ought to be stopped for me, let that favour stand aside; that birth which is exceedingly charming on account of the uninterrupted and deep absorption in you, let it not be lost to me; obeisance to you!

विश्वाधिनेतुरखिलार्थविदः स्मरारे-
रज्ञाततां मदघराशिममुं नयन्ती ।
मां त्रायसे मदनहन्त्रभिधेऽम्ब कस्ते
चातुर्यसाहसभरौ चतुरोऽभिधातुम् ॥ ५४ ॥

விச்வாதிநேதுரகிலார்த்தவித: ஸ்மராரே:
அஜ்ஞாததாம் மதகராசிமமும் நயந்தீ |
மாம் த்ராயஸே மதநஹந்த்ரபிதேऽம்ப கஸ்தே
சாதுர்யஸாஹஸபரௌ சதுரோऽபிதாதும் || 54 ||

हे अम्ब मदन-हन्तृ-अभिधे! ஏ தாயே சிவநாமாவே! विश्व-अधिनेतुः பிரபஞ்சத் தலைவனும் अखिल-अर्थ-विदः எல்லா விஷயங்களையும் தெரிந்தவராயுமிருக்கிற स्मरारेः சிவனுக்கு अमुम् मद्-अघ-राशिम् இந்த என் பாபக்குவியல்களை अज्ञातताम् नयन्ती தெரியாமலேயே செய்து माम् என்னை त्रायसे காப்

பாற்றுகிறாய்; ते உன்னுடைய चातुर्य-साहस-भरौ பெரிய ஸாமர்த்யம் துணிச்சல் இவற்றை अभिधातुम् எடுத்துச் சொல்ல कः चतुरः எவன் சாமர்த்யசாலி?

பலனைக் கொடுக்கும் சிவன் வீட்டு எஜமானன்போல்; பக்தன் தவறுதல் செய்யும் குழந்தைபோல்; சிவநாமா தாய் போல்; குழந்தையின் தவறுதல்களைத் தந்தைக்குத் தெரியாமல் தந்தையிடம் ஒளித்து வேண்டியதை ஸாதித்துக் கொடுக்கும் தாயின் ஸாமர்த்யம் சிவ நாமாவிற்கு இருக்கிறது என்கிறார், கவி; ஸர்வஜ்ஞனை சிவனுக்கும் தெரியாதபடி பக்தரின் அபராதங்களை நாமா என்ற தாய் தன் சக்தியாலும் ஸாஹஸத்தாலும் மறைத்து விடுகிறாள்.

54. O Name of Siva! Rendering this heap of my sins invisible to even that overlord of the Universe, Siva, who knows everything, you save me. O Mother! who is adept enough to recount your great cleverness and daring?

प्रसीद गिरिशाभिधे प्रदिश मन्मतावम्बया
सह स्फुरणमूर्जितं सततमिन्दुमौलेर्विभोः ।
तथानिशमिहासिकां तव मदीयजिह्वाञ्चले
ददस्व मम काङ्क्षितं द्वयमिदं त्वदेकास्पदम् ॥ ५५ ॥

ப்ரஸீத₃ கி₃ரிஶாபி₄தே₄ ப்ரதி₃ஶ மந்மதாவம்ப₃யா
ஸஹ ஸ்பு₂ரணமூர்ஜிதம் ஸததமிந்து₃மௌளேர்விபோ₄: ।
தயாநிஶமிஹாஸிகாம் தவ மதீ₃யஜிஹ்வாஞ்சலே
த₃த₃ஸ்வ மம காங்க்ஷிதம் த்₃வயமித₃ம் த்வதே₃காஸ்பத₃ம் ॥ 55 ॥

हे गिरिश-अभिधे! ஏ சிவநாமாவே! प्रसीद தயவுசெய். अम्बया सह தாயான பார்வதியோடு विभोः इन्दुमौलेः ஈச்வரனை சிவனுடைய ऊर्जितम् நிலைபெற்ற स्फुरणम् பிரகாசித்தலை मन्-मतौ என் புத்தியில் सततम् தொடர்ச்சியாய் प्रदिश கொடு; तथा அதுபோலவே इह मदीय-जिह्वा-अञ्चले

இதோ என்னுடைய நாவின் நுனியில் **तव** உன் **आसिकाम्** வீற்றிருத்தலை **अनिशं (प्रदिश)** எப்பொழுதும் கொடு; **मम** என்னுடைய **काङ्क्षितम्** விருப்பமான **इदं द्वयम्** இவ்விரண்டும் **त्वद्-एक-आस्पदम्** உன் ஒருத்தியிடமே இருக்கின்றன.

நாமாவின் அநுஸந்தானத்தின் உயிரும் பலனும் என்னவெனில் பெயரைச் சொல்லச் சொல்லத் தைவத்தின் நினைவும் உருவும் மனதைவிட்டு அகலாமல் பதிந்து நிற்பது. **'यतस्तद्विषया मतिः'** என்ற மேற்கோளுடன் இது முன் 7-வது ச்லோகத்தின் கீழ்ச் சொல்லப்பட்டதே.

55. O Name of Siva! Please, give my mind continuously the steady flash of Lord Siva together with Mother Parvati; and, even so, your eternal residence as well on the tip of my tongue here; grant me these two desires of mine which rest solely with you.

**न संस्फुरतु काङ्क्षतः स्फुरणमीश्वराख्ये कथं**
**हृदि त्वदनुगस्य तद्भ्रुकुटिकिङ्करः शङ्करः ।**
**चरन्तु विषया हरस्फुरणरोधिनो हृद्यमी**
**कथं कथय गर्जनैर्जननि तर्जयन्त्यां त्वयि ॥ ५६ ॥**

ந ஸம்ஸ்ஃபுரது காங்க்ஷதஃ ஸ்ஃபுரணமீச்வராக்யே கதம்
ஹ்ருதி த்வதநுகஸ்ய தத் ப்ருகுடிகிங்கரஃ சங்கரஃ |
சரந்து விஷயா ஹரஸ்ஃபுரணரோதிநோ ஹ்ருத்யமீ
கதம் கதய கர்ஜனைர் ஜநநி தர்ஜயந்த்யாம் த்வயி ‖ 56 ‖

**हे जननि ईश्वर-आख्ये** ஏ தாயே சிவநாமாவே! **स्फुरणम्** ஈச்வரன் தோன்றுதலை **काङ्क्षतः** வேண்டுகிற **त्वद्-अनुगस्य** உன் பக்தனுடைய **हृदि** ஹ்ருதயத்தில் **तद्-भ्रुकुटि-किङ्करः** அவன் புருவ அசைப்புக்கு அடிமையான **शङ्करः** சிவன் **कथम्** எப்படி **न संस्फुरतु** பிரகாசிக்காமலிருப்பார்; **गर्जनैः** உன் உச்சாரணரூபமான கர்ஜனைகளால் **त्वयि** நீ **तर्जयन्त्याम्** அதட்டிக்கொண்டிருக்கும்போது **हृदि** ஹ்ருதயத்தில் **हर-**

**स्फुरण-रोधिनः** சிவனுடைய தோன்றுதலுக்குப் பகையான **अमी विषयाः** இச்சிற்றின்பங்கள் **कथम्** எப்படி **चरन्तु** ஸஞ்சரிக்கும்? **कथय** சொல்லு.

கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று கேட்பவனைவிட ஸம்ஜ்ஞைக்குக் காத்திருக்கும் அடிமை சிறந்தவனன்றோ? 'சிவ' என்று சொன்ன மாத்திரத்தில் தோன்றி என்ன ஆகவேண்டுமோ அதைப்பக்தனின் புருவஸம்ஜ்ஞையாலேயே தெரிந்துகொண்டு செய்துவைக்கிறார் சிவன்; சிவன் குடியிருக்கும் பக்தர்கள் மனத்தில், வெளிச்சத்தில் இருள் இருக்காதது போல், சிற்றின்பங்கள் இரா; 'சிவ, சிவ' என்ற ஒவ்வொரு உச்சாரணமும் ஒரு உச்சாடந மந்த்ரம்போல் சிற்றின்பங்களை விரட்டுகிறது. பகவச்சப்தம் ஏற்பட்டாலே சுற்றுப்புறமெல்லா விடத்திலிருந்தும் அமங்களம் ஒழிகிறது என்கிறார் சுகப்ரம்மம்:

उद्गायतीनामरविन्दलोचनं व्रजाङ्गनानां दिवमस्पृशद् ध्वनिः ।
दध्नश्च निर्मन्थनशब्दमिश्रितो निरस्यते येन दिशाममङ्गलम् ॥

(பாகவதம் 10 பூ. 46. 46)

56. O Mother, Name of Siva! How could that Siva, who is at the beck and call of the very movement of your devotee's eyebrow, not shine in the heart of your devotee who desires Siva's manifestation? And while you are threatening with the roar (of your recitation by the devotee), how could these sense pleasures antagonistic to Siva's appearance, stroll in (your devotee's) heart?

ममायमवबुद्ध्यतां मधुरिमाणमूर्जस्वलं
कदापि विजहातु मां न रसनैतदीयेति मे ।
दयस्व गिरिशाभिधे ननु ददीत सा मेऽथवा
तदेतदभिकाङ्क्षितं त्वदनुगेषु जातग्रानतिः ॥ ५७ ॥

மமாயமவபு—ஞ் ய்ரீ யதாம் மபு—ரிமாணமூர்ஜஸ்வலம்
கதாபி விஜஹாது மாம் ந ரஸநைதத்யேதி மே ।
தயஸ்வ ஸ்ரீரிஸாஹிதேய் நநு த்வத் ணா மேஞ்யவா
தஜேததஹிகாங்க்ஷிதம் த்வது நுமே ஷ ஜாத்வாநதிஃ ॥ 57 ॥

**हे गिरिश-अभिधे!** ஏ சிவநாமாவே! '**मम** என்னுடைய **ऊर्जस्वलम् मधुरिमाणम्** பெரு இனிப்பை **अयम्** இந்த பக்தன் **अवबुध्यताम्** தெரிந்து கொள்ளட்டும்; **एतदीया** இந்தப் பக்தனுடைய **रसना** நா **कदापि** ஒருபோதும் **माम्** என்னை **न विजहातु** விடவேண்டாம்' **इति** என்று **मे** எனக்கு **दयस्व** தயவு செய்; **अथवा** இல்லாவிடில் **त्वद्-अनुगेषु** உன் பக்தர்களிடத்தில் **जातु** ஏதோ ஒருதரம் செய்த **सा आनतिः** அவ்வணக்கமே **मे** என்னுடைய **तद् एतद् अभिकाङ्क्षितम्** அந்த இஷ்டமனோரதத்தை **ददाति ननु** கொடுத்துவிடுமல்லவா?

நாமாஸ்வாதனருசி கண்ட நா, அதைவிடாது; இந்த ருசி பக்தர்களுடைய ஸங்கத்தால் ஏற்படும்; ஸத்ஸங்க காமதேனு அளிக்கும் நன்மைக்கு எல்லையே இல்லை.

57. O Name of Siva! Favour me that I may realise the great sweetness of yours and that my tongue may never leave you; or, that stray obeisance that I made to your devotees will itself grant me that Desire; will it not?

**मनागपि मनः स्पृशेन्मम यदेदमर्थान्तरं**
**तदा द्रुतमपैष्यहो त्वमपहाय जिह्वां मम ।**
**तथाम्ब गिरिशाभिधे तव न विप्रलम्भः क्षमो**
**भणेत्क इह किं प्रसूर्भवति विप्रलब्ध्री यदि ॥ ५८ ॥**

மநாகபி மநஃஸ்ப்ருசேந்மம யதேதமர்தாந்தரம்
ததா த்ருதமபைஷ்யஹோ த்வமபஹாய ஜிஹ்வாம் மம ।
ததாம்ப கிரிசாபிதே தவ ந விப்ரலம்பஃ க்ஷமோ
பணேத் க இஹ கிம் ப்ரஸூர்பவதி விப்ரலப்த்ரீ யதி ॥ 58

**हे गिरिश-अभिधे** ஏ சிவநாமாவே! **यदा** எப்பொழுது **मनाग् अपि** கொஞ்சமாகவாவது **मम** என்னுடைய **इदं मनः** இந்த மனது **अर्थ-अन्तरम्** வேறு விஷயத்தை **स्पृशेत्** தொடுமோ **तदा** அப்பொழுது **अहो** அந்தோ! **मम** என்னுடைய **जिह्वाम्** நாவை **अपहाय** விட்டு விட்டு **त्वम्** நீ **द्रुतम्** வேகமாய் **अपैषि** விலகிவிடுகிறாய்; **हे अम्ब** ஏ தாயே! **तथा** அந்தமாதிரி **विप्रलम्भः** ஏமாற்றுதல் **तव क्षमो न** நீ செய்யக்கூடியது அல்ல; **प्रसूः** தாயே **विप्रलम्भी भवति यदि** ஏமாற்றுகிறவளாயிருந்தால் **इह** இங்கு **कः किं भणेत्** யார் எதைச் சொல்லக்கூடும்?

முன் விஷயப்பற்று ஈச்வர ஸாக்ஷாத்காரத்திற்கும் நாமாநுஸந்தானத்திற்கும் விக்னமெனச் சொல்லப்பட்டது; அப்படி விஷயப்பற்றால் மனம் கலைந்து போகும்; நீ என்னிடம் கருணையுள்ளவளா யிருந்தால் என் நாவைவிட்டு அகலக்கூடாது என்று சிவநாமாவைத் தாயாய்க் கருதிக் கவி வேண்டிக் கொள்ளுகிறார்; தன்னை நினைத்தால்தான் ஒன்று செய்துகொடுப்பது என்பது தாயின் இயல்புக்கு விரோதம்; "நற்றவா உன்னை நான் மறக்கினும் சொல்லு நா நமச் சிவாயவே" என்றபடி நாவை நாமோச்சாரணத்திலேயே பழக்கி அதை நாவிற்கு இயற்கையாகச் செய்துவிடு.

58. O Name of Siva! when this mind of mine would slightly even touch another object, then, alas, you leave my tongue and quickly go away; Mother, such deceit is not proper for you; if one's mother proves deceitful, who here can speak and what?

यदा त्वमपयासि मां जननि वञ्चयित्वा स्वयं
तदा नियतमाहरोपहरमुख्यसंजल्पनैः।
यथा कलितवञ्चनः पुरहराभिधे त्वामहं
नयानि रसनां तथाञ्चतु विधेः प्रसादो मयि ॥ ५९ ॥

யதா த்வமபயாஸி மாம் ஜநநி வஞ்சயித்வா ஸ்வயம்
ததா நியதமாஹரோபஹரமுக்யஸம்ஜல்பநை: |
யதா கலிதவஞ்சந: புரஹராபிதே த்வாமஹம்
நயாமி ரஸநாம் ததாஞ்சது விதே: ப்ரஸாதோ மயி || 59 ||

**हे जननि पुरहर-अभिधे !** ஏ தாயே சிவநாமாவே ! **यदा** எப்பொழுது **माम्** என்னை **वञ्चयित्वा** ஏமாற்றிவிட்டு **त्वम्** நீ **स्वयम्** தானாகவே **अपयासि** விலகிப்போகிறாயோ **तदा** அப்பொழுது **आहर-उपहर-मुख्य-सञ्जल्पनैः** ஆஹர, உபஹர, முதலிய பேச்சுக்களின் மூலம் **कलित-वञ्चनः** ஏமாற்றி **त्वाम्** உன்னை **नियतम्** நிச்சயமாய் **अहम्** நான் **रसनां यथा नयानि तथा** (என்) நாவினிடம் எப்படிக்கொண்டு போவேனோ அப்படி **विधेः** ப்ரம்மனுடைய **प्रसादः** அருள் **मयि** என்பால் **अञ्चतु** வரட்டும்.

ஸாக்ஷாத் ஈச்வர நாமோச்சாரண மில்லாத ஸமயங்களிலும் வியாஜமாகவாவது 'ஹர,' என்ற எழுத்துக்கள் கலந்த ஆஹர (சாப்பிடு) உபஹர (கொண்டுவா) முதலிய சொற்கள் மூலம் நாமோச்சாரணம் எனக்கு ஏற்படட்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறார் கவி.

59. O Mother, Name of Siva ! When of yourself you cheat me and go away, then may the creator's grace so come to me that I would also deceive you through expressions like '*a-hara*' and '*upa-hara*' and lead you without fail to my tongue.

शरणितवन्तः खलु ये
शशिकन्दलशेखराभिधे भवतीम् ।
तच्चरणाम्बुजविहरण-
संसरणं सुरघटाकिरीटतटे ॥ ६० ॥

ஶரணிதவந்த: கலு யே ஶஶிகந்தலஶேகராபிதே பவதீம் |
தச்சரணாம்புஜவிஹரணஸம்ஸரணம் ஸுரகடாகிரீடதடே || 60 ||

हे शशिकन्दलशेखर-अभिधे ஏ சிவநாமாவே! भवतीम् உன்னை ये எவர் शरणितवन्तः சரணமாய்ச் செய்திருக்கிறார்களோ तच्-चरण-अम्बुज-विहरण-संसरणम् அவர்களுடைய பாத கமலங்கள் விளையாடுவதற்கான மார்க்கம் सुर-घटा-किरीट-तटे खलु தேவஸமூஹத்தின் கிரீடத்தலத்திலன்றோ!

நாமஸாதனம் செய்தவருக்குத் தேவர்கள் அடிமையாகிறார்கள்; தேவபோகத்தையும் லக்ஷ்யம் செய்யாது அதை மிதித்து அப்பால் செல்லுகின்றனர் சிறந்த பக்தர்கள்.

60. O Name of Siva! To those who have made you their refuge, the pathway for the sport of their lotus-feet is on the ground provided by the diadems of the assemblages of the gods.

महेशे तत्सङ्गिष्वपि कृतिषु पाषाणहृदये
वराके मय्यस्मिन् प्रविदधति सन्तः प्रणयिताम् ।
कथंकारं मातर्दलय तदिहेमां मम हृदो
दृषत्तामत्राम्ब स्मरभिदभिधे त्वं खलु गतिः ॥ ६१ ॥

மஹேசே தத்ஸங்கிஷ்வபி க்ருதிஷு பாஷாணஹ்ருதயே
வராகே மய்யஸ்மிந் ப்ரவிதததி ஸந்தஃ ப்ரணயிதாம் |
கதங்காரம் மாதர்தலய ததிஹேமாம் மம ஹ்ருதோ
த்ருஷத்தாமத்ராம்ப ஸ்மரபிதபிதே த்வம் கலு கதிஃ || 61

हे स्मरभिद्-अभिधे ஏ சிவநாமாவே! महेशे பரமசிவன் விஷயத்திலும் तत्-सङ्गिषु कृतिषु अपि அச்சிவனுடைய பக்தர்களான க்ருதக்ருத்யர் விஷயத்திலும் पाषाण-हृदये கல் நெஞ்சு கொண்டவனும் वराके ஈனமாய் நடந்து கொள்பவனும் இருக்கிற अस्मिन् मयि இந்த என்னிடத்தில் सन्तः நல்லோர் प्रणयिताम् இன்புடனிருத்தலை कथंकारम् எவ்வாறு प्रविदधति செய்வார்கள்? तत् ஆகையால் हे मातः ஏ தாயே! इह இதோ मम என்னுடைய हृदः ஹ்ருதயத்தின் इमाम् இந்த

**दृषत्ताम्** கல்தன்மையை **दलय** உடைத்துத்தள்ளு; **अम्ब** தாயே! **अत्र** இவ்விஷயத்தில் **त्वम् खलु** நீ அல்லவோ **गतिः** போக்கு.

மனது இளகினவர்களுக்கே பகவத்பக்தியும் பாகவத ஸஹவாஸமும் ஏற்படும்; எனக்கோ மனது கல்போல் கடின மாயிருக்கிறது; அதை நீ தான் உடைத்து உருகச் செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொள்வதால் கவி நாமபஜனத்தினுல் சித்தபரிபாகம் ஏற்பட்டு, அதன்மூலம் ஸத்ஸங்கமும், ஈச்வரபக்தியும் ஏற்படும் என்று தெரிவிக்கிறார்.

61. O Name of Siva! How will the good love me, this person who is stone-hearted and mean towards the Great Lord Siva and His devotees who have realised everything? Therefore, O Mother! blast this stone-nature of my heart here; are you not, O Mother, my only refuge in this?

॥ इति श्रीश्रीधरवेङ्कटेशनाम्नाम् 'अय्यावाल्' इति प्रसिद्धानाम् आख्याषष्टिः संपूर्णा ॥

இப்படி அய்யாவாள் என்ற ஸ்ரீ ஸ்ரீதர வேங்கடேசருடைய ஆக்யாஷஷ்டி முற்றிற்று.

Thus ends the Akhyashasti—Sixty verses on God's Name—the hymn of Śri Sridhara Venkatesa, known as Sri Ayyaval.

The Liberty Press, Madras.

…த்தீனம் 50307

M. A. A. Annamalai
PALLATHU
RAMNAD DT.

ஸ்ரீ. சந்த்ர மௌளீச்வராய நம:

# ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்தின் புதிய வெளியீடுகளின் அறிக்கை

ஒவ்வொரு புஸ்தகமும் பல படங்களுடனும் ஸ்ரீ ஆசார்யர்களுடைய அனுக்ரஹபூர்வகமான ஸ்ரீ முகத்துடனும் கூடியது.

1. ஆக்யாஷஷ்டி — ஸ்ரீதர வெங்கடேசர் என்கிற ஸ்ரீ அய்யாவாள் அருளியது. தமிழ் இங்கிலீஷ் அநுவாதமும் குறிப்புக்களும் Dr. வி. ராகவன், M.A., Ph.D., அவர்கள் எழுதிய முன்னுரைகளும் கூடியது.
2. சிவபாதாதிகேசாந்த – சிவகேசாதிபாதாந்த ஸ்தோத்ரம் இவை ஆதி பகவத் பாதர்கள் அருளியவை. வேதாந்தவிசாரத, வேதாந்த ஸாஹித்ய சிரோமணி ஸ்ரீ. வீ. எச். ஸுப்ரம்மண்ய சாஸ்திரிகள் எழுதிய தமிழ் அநுவாதத்துடன் கூடியது.
3. ஸ்ரீ தக்ஷிணாமூர்த்யஷ்டகம் — ஸ்ரீ பகவத் பாதர்கள் இயற்றியது. ஸ்ரீ வி. எச். ஸுப்ரமண்ய சாஸ்த்ரிகள் எழுதிய தமிழ் அநுவாதத்துடனும் ஸ்ரீ மாநஸோல்லாஸத்தில் உள்ள கருத்துக்கள் அடங்கிய குறிப்புக்களுடனும் கூடியது.
4. ஸ்ரீக்ஷமாபண ஸ்தோத்திரங்கள்
   1. ஸ்ரீ சிவாபராதக்ஷமாபண ஸ்தோத்ரம்
   2. ஸ்ரீ தேவ்யபராதக்ஷமாபண ஸ்தோத்ரம்
   3. ஸ்ரீ க்ஷமாஷோடசீ ஸ்தோத்ரம்

   முதலிய ஒன்பது ஸ்துதிகள் கொண்டது.
5. ஸ்ரீ சிவானந்தலஹரீ — ஆதி ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் இயற்றியது. ஸ்ரீ எ. எஸ். நடராஜ அய்யர், எம். ஏ., எம். எல்., எழுதிய தமிழ் அநுவாதத்துடனும் குறிப்புகளுடனும் கூடியது.

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம், கும்பகோணம்.

KOTTAIYOOR MADALAYAM KOVILUR-630 ... MANAGIRI
PALLATHUR, RAMNAD DT.